2015, March 01 - 15


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/125/News/2015

## யாழ்ப்பாணத்தில் மோடி என்ன சொல்லப் போகிறார்?





## நகேகொடை பேரணி ராஜபக்ஷ வழிபாட்டை மீண்டும் தொடங்கும் யாத்திரை

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS





**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல் வாக்குறுதிகள் திருமணத்தின் போது செய்யப்படுகின்ற உறுதிமொழிகளுக்கு ஒப்பானவை. வாக்காளர்களுக்கும் வேட்பாளருக்கும் இடையேயான உறவின் ஆரம்பக் கட்டத்திலேயே வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அவை விரைவாகவே மறக்கப்படுகின்றன.

- டிக் கிறகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2015, மார்ச் 01 - 15
பக்கங்கள் - 68






10 நுகேகொடை பேரணி; ராஜபக்ஷ வீர வழிபாட்டை மீண்டும் தொடக்குதல்

15 நிகழப்போவது ராஜபக்ஷ மீளெழுச்சி அல்ல, அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் தாமதமே

19 நுகேகொடை பேரணியும் அரசாங்கத்தின் இடைநிலை நெருக்கடியும்

24 இனப்பிரச்சினை; இந்தியாவின் தற்போதைய மௌனத்தின் அர்த்தம் என்ன?

28 மீண்டும் மேம்பட்ட நிலைக்கு சென்றிருக்கும் இலங்கை-இந்திய உறவுகள்

35 பிரதமர் மோடி சீனாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமா?

38 தமிழக அரசியல் களத்தைக் கலக்கும் அதிரடி வியூகங்கள்

43 அரசியல் போராட்டமும் போராட்ட அரசியலும்

47 இந்தியா - சீனா போர். உண்மைக்கதை

52 இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும்

60 இனிவரும் கூர்ப்பும் அதன் இலக்கிய வார்ப்புகளும் அழகியலும்












*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் படும்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக புதிய அரசாங்கம் வகுத்துக்கொண்ட வேலைத்திட்டத்தின் நடைமுறைக்கால வரையறையான 100 நாட்களில் அரைவாசிக்கும் அதிகமான காலம் கடந்துபோய்விட்டது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்கள் ஓரளவுக்கு விடுபடக்கூடியதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் மூலமாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு மற்றும் அத்தியாவசிய பாவனைப்பொருட்களின் விலைக் குறைப்பு போன்ற நிவாரண நடவடிக்கைகளைத் தவிர மற்றும்படி அரசியல் முனையில் சகல விவகாரங்களுமே ஒரே குளறுபடியானவையாகவே காணப்படுகின்றது.

ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முன்னென்றுமில்லாத வகையிலான ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் அரச வளங்கள் விரயம் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடிவடிக்கைகளை எடுப்பதில் புதிய அரசாங்கம் காட்டுகின்ற விளங்கிக் கொள்ள முடியாத தாமதமும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான செயன்முறைகளைப் பொறுத்தவரை அரசியல் தலைவர்கள் வெளியிடுகின்ற முரண்பாடான கருத்துக்களும் பெரும் எதிர்பார்ப்புகளுடன் ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவந்த மக்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றது.

கடந்த வருடம் நவம்பர் பிற்பகுதியில் ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து வெளியேறி முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க சகிதம் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவான 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்துவிடப் போவதாக உறுதியளித்தார் என்பது சகலருக்கும் நினைவிருக்கிறது. ஆனால், அவர் எதிரணியின் பொதுவேட்பாளராக நாட்டு மக்களுக்கு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்குப் பதிலாக ஜனாதிபதியிடமிருக்கும் மட்டுமீறிய அதிகாரங்களைக் குறைப்புச் செய்து அவற்றைப்பாராளுமன்றத்துக்குப் பகிர்ந்தளிப்பது பற்றியே தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் மூலமாக குறிப்பிட்ட சில அதிகாரங்களுடன் ஜனாதிபதிப் பதவி தொடரப்போகின்றது என்பது உணர்த்தப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்ற பிறகு அவரால் பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அமைத்த அரசாங்கம் 100 நாள் வேலைத் திட்டத்தின் நேர அட்டவணையொன்றையும் வெளியிட்டு எந்தெந்தத் திகதிகளில் எந்தெந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படுமென்று நாட்டு மக்களுக்கு அறிவித்ததையும் கண்டோம். ஆனால், அந்த நேர அட்டவணையில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பான செயன்முறைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கென்று குறிக்கப்பட்ட தினங்களில் அவற்றை நிறைவேற்றக்கூடியதாக அரசியல் நகர்வுகள் அமையவில்லை என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. 41 எம்.பி.க்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் 126 எம்.பி.க்களைக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவை நம்பியே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். ஜனாதிபதியாகிய பின்னர் சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியையும் மைத்திரிபால சிறிசேன தன்வசமாக்கிக் கொண்டதன் விளைவாகவே இந்த விசித்திரமான 'சகவாழ்வு அரசியலைத்' தொடரக் கூடியதாக இருக்கிறது.

என்றாலும், அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் பிரதமர் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கிறார்கள். கடந்த சில நாட்களாக அவ்விரு தரப்பினரும் வெளியிட்டு வரும் கருத்துக்களை நோக்கும் போது 100 நாள் காலவரையறைக்குள் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய சாத்தியங்கள் குறித்து கடுமையான சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஜனாதிபதியிடமிருக்கும் மட்டுமீறிய அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கும் சுயாதீனமான ஆணைக்குழுக்களை நியமிப்பதற்குமான ஏற்பாடுகளும் தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளும் ஏககாலத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடாக இருக்கிறது. அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியோ தேர்தல் முறையை மாற்றுவதற்கான செயன்முறைகளை அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு முன்னெடுக்கலாம் என்றும் தற்போது ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைப்பு மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமனத்துக்கான ஏற்பாடுகளைக் கொண்ட சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதே உகந்தது என்றும் வலியுறுத்துகிறது.

இந்த விவகாரங்கள் தொடர்பில் இருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்றிருக்கக்கூடிய பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. சுதந்திரக்கட்சியின் ஆதரவு இல்லாமல் பிரதமர் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினால் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றவும் முடியாது. அத்துடன் முன்னர் திட்டமிட்டபடி ஏப்ரல் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்து ஜூன் மாதமளவில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்பதும் அந்தத் தேர்தலுக்குப் பிறகு முழு பாராளுமன்றத்தையுமே அரசாங்கமாகச் செயற்படவைக்கும் வகையில்

*(34ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## வல்லரசுகளின் அரசியல் நோக்கம்

சமகாலத்தின் கடந்த இதழில் 'முடிவில்லாமல் தொடரும் இஸ்லாமிய அரசின் ஈனச்செயல்கள்' எனும் தலைப்பில் கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. அரபுலக வசந்தம் மக்கள் புரட்சி தந்த நம்பிக்கை குறுகிய காலத்துக்குள் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கும் ஏமாற்றத்தைத் தந்த நிலைமையை மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்படுத்தியிருப்பதை நிதர்சனபூர்வமாக எடுத்துக்காட்டுவதாக அந்தக் கட்டுரை அமைந்திருந்தது.

இஸ்லாமிய அரசு இயக்கம் என்பது வல்லரசு நாடுகளின் கூட்டுப்படைகளினால் அழிக்கப்பட முடியாததொன்றாகத் தெரியவில்லை. வல்லரசு நாடுகள் இந்த விடயத்தில் மிகவும் பொறுமையாக நடந்து கொள்வதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இல்லை என்பதை முற்றாக நிராகரித்து விட முடியாது.

நேசதுரை குகதாசன், மட்டுவில்.

## அநாகரிகமான அரசியல் கலாசாரம்

தேர்தல் பிரசாரங்களின் போது தம்மையோ அல்லது தமது கட்சியையோ எதிர்த்து போட்டியிடும் வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் மீது தனிப்பட்ட ரீதியிலான விமர்சனங்களையும் வசைபாடல்களையும் முன்வைப்பது தற்போதைய அரசியல் கலாசாரத்தில் ஒன்றும் புதிதல்ல. ஆனால் அவ்வாறான தாக்குதல்கள் பொதுமக்கள் மத்தியில் எவ்வாறான வெறுப்புணர்வை ஏற்படுத்தும் என்பதை தேர்தல் பிரசார மேடைகளில் உணர்வு பொங்க என்பதை விட என்ன பேசுறோம் என்று உணர்ச்சியற்ற நிலையில் உரை நிகழ்த்தும் அரசியல் தலைவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

ஆனால், அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதற்கு கடந்த 'சமகாலம்' இதழில் டில்லி டயறி பகுதியில் வெளியான 'மோடியை உலுக்கிய டில்லி அதிர்வு' என்ற கட்டுரை சிறந்த உதாரணமாகும். டில்லியின் தற்போதைய முதல்வராக பதவி வகிக்கும் ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் ஜெக்ரிவாலை டில்லி சட்டசபைத் தேர்தல் களத்தில் பாரதிய ஜனதா கட்சியினர் எவ்வாறெல்லாம் தனிப்பட்ட ரீதியில் தாக்கி பேசியிருந்தனர் என்றும் அது கெஜ்ரிவாலை விமர்சிப்பவர்கள் மத்தியில் கூட அதிருப்தியை ஏற்படுத்தியிருந்ததையும் அந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிரதமர் மோடியோ கெஜ்ரி

## சாந்தனின் ஆதங்கம்

ஐ.சாந்தனின் தமிழ் எங்கே போகிறது? என்ற கடைசிப்பக்க ஆதங்கம் நியாயமானது. எனினும் அவர் அச்சு ஊடகங்களில் விடும் பிழைகளையும் தமிழ்நாட்டு திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில் வரும் தமிழ்க் கொலைகளையும் பற்றிக் கொஞ்சம் ஆத்திரத்துடன் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் எமது நாட்டில் தமிழின் சக்தி, தமிழின் முதல்வன் என்றெல்லாம் அடைமொழிகளோடு போட்டிபோடும் இலத்திரனியல் ஊடகங்களில் அப்பட்டமாகவே தமிழை கொலை செய்யும் அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் தொடர்பில் சுட்டிக்காட்ட அவர் மறந்தது ஏன்?

குமரன் குழந்தைவேலு,
திருகோணமலை.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலை ஒரு நக்சலைட் என்று வர்ணித்திருந்த அதேவேளை, சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அவரை கள்ளன் என்று அழைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையும் இம்மாதிரியான விமர்சனங்களுக்கும் ஒன்றும் சளைத்ததல்ல. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 'முட்டை அப்பம்' கதை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எவ்வளவு பிரபல்யம் என்பது இங்குள்ள எவருக்கும் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

கணேசன் ராமதுரை, யாழ்ப்பாணம்.

## கலைந்த வேடங்கள்

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் மூலம் மகிந்த ராஜபக்ஷ வீட்டுக்கு அனுப்பப்பட்டது மட்டுமல்லாமல் நேர்மையான அரசியல்வாதிகளாக கருதப்பட்ட இடதுசாரி தலைவர்களான வாசுதேவ நாயணக்கார, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண போன்றோரின் வேஷங்களும் கலைக்கப்பட்டுள்ளன. இவர்கள் இடதுசாரிப் பாசறையில் வளர்ந்த மைத்திரிபால சிறிசேனவை எதிர்த்து பேரினவாத பாசறையின் தலைவரான மகிந்தவை ஆதரித்து பாராளுமன்றத்தில் மட்டுமல்லாது பொது மேடைகளிலும் முழங்குவது ஏன்? அது மட்டுமன்றி இனவாதத்தையே தமது அரசியல் உயிர்மூச்சாகக் கொண்ட மகிந்த, விமல்வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களுடன் இவர்கள் கூட்டணி அமைக்க முற்படுவது ஏன்? இது தொடர்பான விரிவான கட்டுரையொன்றை சமகாலம் தருமா?


சர்வேஸ்வரன் ரதீஷ், வெள்ளவத்தை.

## வடமாகாணசபையின் தீர்மானம்

இலங்கையில் கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக பதவியிலிருந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக வடமாகாண சபையில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கடந்த சமகாலம் இதழில் ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது.

தீர்மானத்தை நிறைவேற்றிய காலகட்டம் பொருத்தமானதாக இல்லை என்ற தொனியில் அமைந்திருந்த அந்த தலையங்கம் அடிப்படையில் வட மாகாண சபையின் நடவடிக்கை குறித்து அதிருப்தி கொண்டதாகவே கருதவேண்டியிருக்கிறது. இலங்கை தமிழர்கள் மாத்திரமல்ல உலகம் பூராகவும் வாழும் தமிழர்கள் ஆதரித்த அத்தீர்மானத்தை சமகாலம் முழுமையாக வரவேற்கத் தயங்குவது ஏன்?

எம்.சாமிநாதன், பூண்டுலோயா




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 17

2015, மார்ச் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

எதையாவது பேசுவதற்கு முன்னதாக ஒன்றுக்கு இரு தடவைகள் சிந்தியுங்கள். ஏனென்றால் உங்களது வார்த்தைகளும் செல்வாக்கும் இன்னொருவரின் மனதில் வெற்றிக்கான அல்லது தோல்விக்கான விதைகளை தூவிவிடும்.

- நெப்போலியன் ஹில்



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக அடுத்த தேர்தலில் போட்டியிடவருமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. என்னைப் பிரதமராக்குவதற்காக இறுதியாக 64 இலட்சம் பேர் வாக்களித்திருக்கிறார்கள். ராஜபக்ஷவுடன் நான் ஒரேயொரு தடவை மாத்திரமே போட்டியிட்டேன். அவர் பிரபாகரனின் உதவியுடன் தான் ஜனாதிபதியானார். இப்போது அவர் பெரிய கதை கதைக்கிறார். என்னுடன் அவர் போட்டிக்கு இனிமேல் வருவாரேயானால் அவரது வாக்குகளை 50 இலட்சமாகக் குறைப்பேன், நுகேகொடை சந்தியில் நின்று சத்தம் போடுவதில் அர்த்தமில்லை. அவர்களைக் பாராளுமன்றத்துக்கு வந்து நம்பிக் கையில்லாத் தீர்மானத்தில் எம்மைத் தோற்கடிக்குமாறு நான் சவால் விடுத்துள்ளேன். அவர்கள் எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றுப் போகிறார்கள்? எந்தக் கட்சியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ போட்டியிடப் போகிறார்? மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷவிடம் கையளிப்பாரா? வெற்றிலை, கதிரை, கை சின்னமெல்லாம் இப்போது சிறிசேனவுக்குச் சொந்தமானவை. அவர் எதையுமே ராஜபக்ஷவுக்கு கொடுக்கமாட்டார்.

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்க*






மகிந்த ராஜபக்ஷவுக்கு இணையாக இலங்கையில் வேறு எந்த அரசியல் தலைவருமேயில்லை. மிகுந்த மக்கள் செல்வாக்குடைய தலைவராக அவரே தொடர்ந்தும் விளங்குகிறார். ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியுடன் நிற்கும் மக்கள் மகிந்த ராஜபக்ஷவுடனேயே நிற்கிறார்கள். தேசபக்த சக்திகளினதும் முற்போக்குச் சக்திகளினதும் தலைவர் அவரே.

*மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ்குணவர்த்தன*

தேசியவாதத்துக்கும் (ஜாதிகவாதய) இனவாதத்துக்கும் (ஜாதிவாதய) இடையேயுள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்துமாறு நான் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவைக் கேட்டுக் கொள்கிறேன். இவ்விருவாதங்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களும் குழம்பிப் போயிருக்கிறார்கள். எங்களை இனவாதிகள் என்று அழைத்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்காக வருத்தப்பட வேண்டிவரும்.

*பொதுபலசேனா பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசாரதேரர்*





எமது பிரதமர் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கு விமல் வீரவன்ச யார்? அவர் முச்சக்கர வண்டி கட்சி என்று சாதாரணமாக வர்ணிக்கப்படுகின்ற மிகவும் சிறிய கட்சியொன்றின் தலைவர். அவருடன் நுகேகொடையில் கூட்டத்தை நடத்திய இரு இடதுசாரிக் கட்சிகளும் கூட மிகச் சிறிய கட்சிகளே. வீரவன்சவும் மகிந்தவும் நுகேகொடையில் ஏற்பாடு செய்த கூட்டத்துக்கு வந்தவர்களின் எண்ணிக்கையைப் பார்த்து எவருமே ஏமாந்துவிடாதீர்கள்.

*சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனியார் ஆயுதக் களஞ்சியங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களை சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாற்ற உதவினால், 30 கோடி அல்லது அதற்கும் அதிகமான பணத்தைத் தருவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவருக்கு ஆசைகாட்டப்பட்டது. என்னையும் கூட அணுகினார்கள். இத்தகைய நெருக்குதல்களுக்கோ ஆசைகாட்டல்களுக்கோ நாம் அடிபணிந்துவிடப் போவதில்லை.

**சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன**



'மகிந்தவை பிரதமராக்குவோம்' என்ற அறைகூவலுடன் நுகேகொடையில் நடத்தப்பட்ட பேரணி பெரும் வெற்றிகரமானதாக அமைந்தது. அது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அல்ல ஐக்கிய தேசியக் கட்சிக்கே கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

**சுதந்திரக்கட்சி தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த**



டில்லி சட்டசபைத் தேர்தலிலே மக்கள் ஆம் ஆத்மி கட்சியை (பொதுமக்கள்கட்சி) அமோகமாக ஆதரித்து மேட்டுக்குடி அரசியல் கலசாரத்தை நிராகரித்திருக்கும் அதேவேளை, இலங்கையில் அதற்கு முற்றிலும் மாறான போக்கில் காலனித்துவ ஆதரவு-வலதுசாரி அரசியல் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரத்தை முன்னெடுத்து வேட்பாளரை வெற்றிபெற வைத்திருக்கிறது.

**ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார**



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் ஒரு பயங்கரவாதி போன்று செயற்பட்டார். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைவிடவும் கூடுதல் கெடுதியை அவர் நாட்டுக்கு இழைத்திருக்கிறார்.

**ஜனநாயகக்கட்சித் தலைவர் சரத் பொன்சேகா**



வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மக்கள் எனக்கு வாக்களித்திருந்தால் நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பேன். போரை முடிவுக்குக் கொண்டுவந்து வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குரிமையை மீட்டுக் கொடுத்தவன் நான். ஆனால், அவர்கள் என்னைத் தோற்கடிப்பதற்கே வாக்களித்திருந்தார்கள்.

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ**



புதிய அரசாங்கம் ஜனவரி 9 ஆம் திகதி பதவியேற்றிருந்த போதிலும், ஜனவரி 15 ஆம் திகதியே பணிகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. அதற்குக் காரணம் பாப்பரசரின் இலங்கை விஜயமாகும். சிங்கள- தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்கள் காரணமாக ஏப்ரில் மாதத்திலும் இருவாரங்களை இழக்கப்போகிறோம். அதனால் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுக்க 24 மணித்தியாலங்கள் கொண்ட தினங்கள் அல்ல 25 மணித்தியாலங்கள் கொண்ட தினங்களே எமக்கு தேவைப்படுகிறது.

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகேகொடை பேரணி

## ராஜபக்ஷ வீர வழிபாட்டை மீண்டும் தொடக்குதல்

மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து ஆயிரக்கணக்கானோர் நுகேகொடை யில் கூடினர். அவருக்கு ஆதரவாகப் பலர் மேடையில் முழங்கினர். ஆனால், இவர்கள் ஊழல், மனித உரிமை மீறல்கள், சர்வாதிகாரம் என்பன பற்றிச் சிறிதும் அக்கறை கொண்டவர்களாக இருக்கவில்லை என்பது வெளிப்படை. கலாநிதி தயான் ஜயதிலக குறிப்பிட்டது போல் இம்மக்கள் ராஜபக்ஷவைத் 'தேசம், தலைவா திரும்பி வருக' என்று கேட்டு நிற்ப

உள்நாட்டு அரசியல்





கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ

நுகேகொடையில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர் என்பது அல்ல அங்கு என்ன பேசப்பட்டது, அந்த பேச்சுகளினதும் பிரகடனங்களினதும் உள்ளடக்கம் யாது என்பதே முக்கியமானது. நாட்டில் எந்தளவுக்கு ராஜபக்ஷ வீரவழிபாடு வளர்க்கப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரணி எடுத்துக்காட்டியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக காட்டிக்கொண்டனர். அங்கு பேசப்பட்டபேச்சுகளும் கூடிய மக்கள் திரளும் உணர்வு வெளிப்பாடும் இவர்கள் குறிப்பிடும் இந்தத் தேசியம் அல்லது தேசியம் சிங்களவர்- தமிழர் - முஸ்லிம்கள் - பறங்கியர் இணைந்த தேசமன்று. இது இலங்கையரின் அர சியல் சிவில் சமூகத் தேசம் அன்று. குறுகிய 'சிங் கள பௌத்த' இனக்கு மும எல்லைக்குள் வரையறுக்கப்பட்ட தேசத்தையே இவர்கள் குறிப்பிட்ட னர். இந்தக் குறுகிய தேசியம் அல்லது தேசம் சிங்கள பௌத்தர்களுக்கே உடன்பாடான ஒரு விடயம் என்பது சென்ற தேர்தலின் போது நிரூபிக்கப் பட்டது. தேர்தலில் வாக்காளர்களால் அங்கு என்ன பேசப்பட்டது? அந்தப் பேச்சுகளினதும் பிரகடனங்களினதும் உள்ளடக்கம் யாது என்பதே முக்கிய மானது. கூட்டத்தின் தொடக்கத்தில் சிங்கள இனப்பற்றையும் நாட்டுப் பற்றையும் வெளிப்படுத்தும் பாடல் கள் பாடப்பட்டன. இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இந்தத் தேசிய கீதத்தையே தமிழ் மக்கள் தமக்குத் தெரிந்த அல்லது தமது சொந்த மொழி யில் பாடுவதற்கு மறுக்கப்பட்டது. எந்த ஒரு நாட்டை எடுத்துப் பார்த் தாலும் அந்த நாட்டின் மேலாதிக்கமு டைய மொழி எதுவோ அதிலேயே தேசிய கீதம் பாடப்படுவது உண்டு என்று வாதிட்டவரான நளின் டி ருந்த கலாநிதி தயான் ஜயதிலக வையும் பெயர்குறிப்பிட்டு அறிமுகம் செய்தார்.

இந்த மூவரும் தம் இளமைக்காலத் தில் இடதுசாரிகளாக இருந்தவர்கள். அங்கு வாசுதேவ நாணயக்காரவும் வந்திருந்தார். அவரும் தணிந்த குர லில் 'புதிய யுகம் ஒன்று' பற்றித் தனது பேச்சில் குறிப்பிட்டார். மகிந்த ராஜ பக்ஷ பற்றிய பிரதமர் பதவிக்கு வரும் கற்பனையையே நாணயக்கார 'புதிய யுகம்' என்றார். 10 வருடங்களாக ஜனாதிபதியாக இருந்த ஒருவர் மேலும் ஆறு வருடங்களைக் கைப் பற்ற நினைத்து இரண்டு வருடங்கள் ஆட்சியிலிருக்கும் வாய்ப்பையும்



நிராகரிக்கப்பட்ட இந்த 'தேசத்தை' 'ஊழல் மனித உரிமைகள் சர்வாதி காரம்' என்பன பற்றி சிறிதளவும் சிந்தனையற்றவர்களாய் நுகேகொடை கூட்டத்தில் இவர்கள் தூக்கிப்பிடித்த னர்.

### ஜன சமுத்திரம்?

நுகேகொடையில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர் என்பதல்ல,

சில்வா மேடையில் இருந்தார். அவ ருக்குப் பக்கத்தில் குணதாச அமரசே கர இருந்தார். இவரே முந்திய காலத் தில் புகழ்பெற்ற சிங்கள நாவல்களை எழுதியவர். இப்போது முதுமையில் அவர் அருவருக்கத்தக்க இனவாதி யாக மாறியிருக்கிறார். கூட்ட அறி விப்பாளர் இந்த இருவரோடும் மேடையை மிகப்பொருத்தமான முறையில் அலங்கரித்துக் கொண்டி

கோட்டைவிட்ட ஒருவரின் ஆசைக் கனவையே அவர் இப்படிக் குறிப்பிட் டார்.

மகிந்த ஜனாதிபதியாக இருந்த போது (சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தவேளை) பெற்ற போர் வெற்றி தான் அவரைப் பதவி யில் இருந்து அகற்றியது என்று கூற முடியாது. மகிந்தவின் அதிகார வெறி யும் ஆசையும் தான் அவர் சரத்பொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகாவை இரக்கமற்ற வகையில் துன்புறுத்தித் தொல்லைப்படுத்தியதற்கான காரணமாகும். விடுதலைப் புலிகள் தவறுகளுக்காகத் தம்மைத் தொடர்ந்து பழிவாங்கக் கூடாதென விரும்பிய தமிழ் மக்கள் மகிந்தவைத் தேர்தலில் தோற்கடிக்கச் செய்யக் காரணமாய் இருந்தனர்; தமக்கு நீதி வேண்டுமெனக் கருதினர்.

நுகேகொடையில் கூடிய பெருங் கூட்டம் பழைய நினைவுகளைக் கொண்டு வருகிறது. 1960களில் ஐக்கிய இடது சாரி முன்னணி பெரும் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தியது. இக்கூட்டங்களில் அந்நாளில் பங்கு பற்றியிருக்கிறேன். பின்னர் 1990 களில் லலித் அத்துலத் முதலியும், காமினி திஸநாயக்கவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (DUNF) என்ற கூட்டணியை அமைத்து பெரும் ஆர்ப்பாட்டக் கூட்டங்களை நடத்தினர். அக்கூட்டங்களில் நான் பங்கு பற்றவில்லை. ஆயினும் அவையும் பெருங்கூட்டங்களே. ஆயின், முன்னைய காலக்கூட்டங்களுக்கும் நுகேகொடை கூட்டத்திற்கும் வித்தியாசம் உள்ளது. அக்காலத்தின் சனத்தொகை இப்போதையதை விட வித்தியாசமானது என்பதோடு, அன்று அரசியலிலும் சமூக விடயங்களிலும் முற்போக்கான நோக்குடன் மக்கள் திரள் மேற்குறிப்பிட்ட கூட்டங்களில் கூடியது. அவை சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிரானவையாகவும் இருந்தன. நுகேகொடை கூட்டம் முற்றிலும் பிற்போக்கான சக்திகளின் கூட்டம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அன்றும் இன்றும் கடைப்பிடிக்கும் கொள்கைகளிலும் மோசமான பிற்போக்குவாதமாக இக்கொள்கைகள் அமைந்தன.

இதனால் தான் இதனை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியினுடையதோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினதோ பேரணி என்றும் கூற முடியாது.

## வீர வழிபாடு

இந்த நாட்டில் எந்தளவுக்கு ராஜபக்ஷ வீர வழிபாடு வளர்க்கப்பட்டுள்ளது என்பதை நுகேகொடைப் பேரணி எடுத்துக் காட்டியது. இவ்வீர வழிபாடு நிறைவேற்று ஜனாதிபதியிடம் உள்ள நிதிவளங்களையும் வரியிறுப்பாளரின் பணத்தையும் பயன்படுத்திக் கடந்த பத்து ஆண்டு காலத்தில் கட்டி வளர்க்கப்பட்டதாகும்.

## மைத்திரிபால சிறிசேன

மேடையில் அமர்ந்திருந்தவர்களுள் தினேஷ் குணவர்தன தவிர்ந்த அனைவரும் ராஜபக்ஷ வீர வழிபாட்டினால் நேரடியாக நன்மை பெற்றவர்களாவர். இறுதிக் கட்டத்தில் மட்டும் இந்த வகை நன்மையை இழந்து நின்றவரான தயான் ஜயதிலகவும் நன்மையை அனுபவித்த ஒருவரே. இந்த பயணத்தில் இணைந்தவர்களில் மிகவும் கேவலமான நிலைக்கு இறங்கியவர் வாசுதேவ நாணயக்கார. இந்தக்கூட்டத்தில் ராஜபக்ஷ வீர வழிபாடும் சிங்கள இனவாதமும் அல்லாதவறொன்றும் வெளிப்பட்டு நிற்கவில்லை. அங்கு கூடியவர்கள் மகிழ்ச்சியோடு ஒரு செய்தியை மேடையில் நின்று அறிவித்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நாளும் மெதமுலானவுக்குச் சென்று, ராஜபக்ஷவுக்குக் கும்பிடு போடுகிறார்களாம்! இவ்வாறு செல்பவர்களில் பெரும்பான்மையினர் அப்பாவிகள், ராஜபக்ஷ வீர வழிபாட்டுப் பண்பாட்டினரால், பொருளாதார நன்மைகளைப் பெற்றவர்களால் தவறாக வழிநடத்தப்பட்டு அணிதிரட்டப்படுபவர்களே இந்த அப்பாவிகள்.

நுகேகொடை கூட்டம் நான் வாழ்க்கையில் கண்டனவற்றில் மிகவும் உணர்ச்சியும், வலுவும் உற்சாகத்தை வெளிப்படுத்தியதுமான கூட்டமாகும். அந்த உணர்ச்சி எவருக்கும் எதிரானது அல்ல. அது யாரோ ஒருவரையும் எதையோ ஒன்றையும் குறிப்பதாக இருந்தது. இவ்வாறு ஒரு ஆதரவாளரும் இந்தப் பண்பாட்டால் நன்மை பெற்றவருமான ஒருவர் வெட்கம் எதுவும் இல்லாதவராகக் கூறினார். அங்கு வெளிப்பட்ட உணர்ச்சி மந்திரசக்தி போன்றது என்றும் கூறிய அவர், 'நுகேகொடைக்கும் மெதமுலனாவிற்கும் இடையே ஒரு சக்தி ஓடிக் கொண்டிருந்தது. இந்தக் கண்ணுக்குத் தெரியாத சக்திதான் அம் மக்களுக்கு எழுச்சியையும் வலுவையும் கொடுத்தது' என்றும் கூறினார். அவர் குறிப்பிட்ட சக்தியின் பின்னால் எந்த 'விஞ்ஞானமும்' இருக்கவில்லை. கண்மூடித்தனமான மூட பக்தியும் நம்பிக்கையுமே அவர்களை இயக்கிய சக்தியாகும்.

'சாதாரண மக்களைத் தட்டியெழுப்பக் கூடிய ஆற்றல் மிக்க பேச்சாளர் என்று புகழப்படும் விமல் வீரவன்ச வீரவழிபாட்டுப் பண்பாட்டை மேடையில் நன்றாக வெளிப்படுத்தினார். அவர் மக்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதற்கு மிகப் பொருத்தமானவர். யேசுநாதரை மக்கள் மீண்டும் உயிரெழச் செய்து பின்னர் அவரைத் தெய்வமாக வழிபட்டதை அவர் உதாரணமாக எடுத்துக்காட்டினார்.

**"நாம் தோற்கடிக்கப்படவில்லை. எமது அதிகாரம் பறிக்கப்பட்டது. நாம் இப்போது தோல்வியின் பயனை அல்ல சதி ஒன்றின் விளைவுகளையே அனுபவிக்கிறோம்" என்று நுகேகொடை பேரணிக்கு அனுப்பிய செய்தியில் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். அதிகார ஆசையால் உந்தப்பட்ட இக்கூட்டத்தினர் தேர்தலில் நம்பிக்கையில்லாத இனவாதிகளின் கும்பல் என்பது தெளிவாகத் தெரிகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(ஆனால் யேசுவுக்கு உயிர் கொடுத்தவர் கடவுள் தான். மனிதர் அல்ல). இப்படியான ஒரு பொய்ப்புனைவான வீர வழிபாட்டைத்தான் இந்தப் பேச்சாளர்கள் விரும்பினார்கள். ராஜபக்ஷவை மக்கள் கடவுளாகப் போற்றி வழிபட வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு.

'பரபாஸ் என்பவனை விடுவித்து விட்டு அவனிற்குப் பதில் யேசுவைச் சிலுவையில் அறைவிக்க வைத்தமைக்காக மக்கள் பின்பு தாம் செய்த பாவச் செயலுக்காக வருந்தினார்கள்' என்று வீரவன்ச கூறினார். இந்த உதாரணத்தை கூறிய அவர்' மகிந்தவைத் தேர்தலில் தோற்கடித்ததற்காக இன்று மக்கள் வருந்துகின்றனர் என்று கருத்துப்பட இதைக் கூறினார். இதைவிட வேறுபல கதைகளும் சொல்லாடல்களும் அங்கு இடம்பெற்றன. இந்தக் கதைகளையும் பேச்சுகளையும் ஒன்றிணைத்தால் அவற்றுள் உண்மையோ அர்த்தமோ கிடைக்காது. நுகேகொடையில் பேசியவர்களின் பாணியிலேயே அதைப் பற்றி எழுதியவர்களும் எழுதினார்கள்.

## சிங்கள இனவாதம்

உதய கம்மன்பிலவும் நுகேகொடை கூட்டத்தில் முழங்கினார். அவர் மூன்று அரசியல் ஆளுமைகளைக் கிண்டல் செய்து தமக்கே உரிய பாணியில் கண்ணைச் சிமிட்டியவாறு பேசினார். அசாத்சாலி, யோன் அமரதுங்க, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்ற மூவரையும் அவர் தாக்கிப் பேசினார். அந்தக் கூட்டம் யாருக்கும் எதிரானது அல்ல என்ற கருத்தில் உண்மை இல்லை. அங்கு பேசியவர்களின் வாதங்களின்படி சிறுபான்மை மக்கள் நடந்து முடிந்த 'தேர்தலில் அளித்த வாக்குகள் செல்லாதவை என்பதாக அமைந்தன. முஸ்லிம்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய சிறுபான்மை மக்களின் வாக்குகள் அவர்கள் கருத்துப்படிசெல்லுபடியற்றவை.

வண.பலத்தர சுமணஜோதி தேரரின் அனுசாசன உரை (போதனை) மிகவும் பரிதாபத்துக்குரியதாகத்தரம் தாழ்ந்து போனது. அவர் பல்கலைக் கழகம் ஒன்றின் வேந்தர் (சான்சலர்) ஆவார். அவர் குடும்பத்தை ஆதரிப்பது அவர்களை உயர்த்தி வைப்பது என்பது இயல்பானது. அதில் ஒன்றும் தவறில்லை. புத்தர் கூட இதையே செய்தார் என்று கூறினார்! (Family nepotism என்பதை இப்படி நியாயப் படுத்தினார்) மகிந்த ராஜபக்ஷ நிர்வாகம் தனக்கு ஒரு அரச வாகனத்தைக் கொடுத்தது. இதனை இந்த அரசாங்கம் பறித்து விட்டது என்று அவர் தம் மனக்குறையை வெளியிட்டார்.

நுகேகொடை கூட்டத்தில் மைத்திரிபாலவைத் தாக்கிப் பேசவில்லை. அவர் 'பாதுகாக்கப்பட்டார், அவருக்கு எதிரான சவால்கள் எழவில்லை. அவரே ஜனாதிபதி என்பதும் ஏற்கப்பட்டது' என்று கூறப்பட்டது உண்மையன்று. வாய்க்காரன் என்று பேரெடுத்த விமல்வீரவன்சவின் பிரதான நோக்கம் ஜனாதிபதியை அவமானப் படுத்துவதாகவே இருந்தது. ஆனால், சந்திரிகா குமாரதுங்கவைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசப்படவில்லை. இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையானால் 'சதி' ஒன்று நடைபெற்றது என்ற கதை அவசியமில்லாதது. கூட்டத்தில் இருந்தோருக்கு மகிந்தவின் செய்தி வாசிக்கப்பட்டது. இச்செய்தியின் பிரதான விடயம் சதி என்ற கோட்பாடாகும். தயான் ஜயதிலக பெருத்த ஆரவாரத்தின் மத்தியில் மகிந்தவின் செய்தியை வாசித்தார்.

அச்செய்தியில் சொல்லப்பட்டதென்ன? 'நாம் தோற்கடிக்கப்படவில்லை. எமது அதிகாரம் பறிக்கப்பட்டது. நாம் இப்போது தோல்வியின் பயனை அல்ல சதியொன்றின் விளைவுகளை அனுபவிக்கின்றோம்' என்று மகிந்தவின் செய்தியில் கூறப்பட்டிருந்தது. அதிகார ஆசையால் உந்தப்பட்ட இக்கூட்டம் தேர்தலில் நம்பிக்கையில்லாத இனவாதிகளின் கும்பல் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. தமக்குச் சாதகமான வேளையில் தேர்தலை நடத்துவார்கள்.

ஆனால், தேர்தலில் தோல்வியடைந்தால் சதியொன்று நடந்துவிட்டது எனத் திட்டித்தீர்க்க ஆரம்பிப்பார்கள். மைத்திரிபால சிறிசேன சிறுபான்மைத் தமிழர்களின் வாக்குகளை முழுமையாகப் பெற்றார் என்பது உண்மை. இதனை நியாயப்படுத்தும் முறையில் மைத்திரிபாலவிற்கு ஆதரவாக வாதம் செய்யும் தேவை யாருக்கும் இல்லை. சிறுபான்மையினர் இலங்கை மக்களே. அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது. ஜனநாயக சமூகமொன்றில் ஒருவரது வாக்கு, பிறிதொருவருடைய வாக்குக்குச் சமமான மதிப்புடையது. இவ்விடயத்தில் பெரும்பான்மைச் சமூகத்தவரின் வாக்கு சிறுபான்மைச் சமூகத்தவரின் வாக்கு என்ற பேதத்திற்கு இடம் இல்லை. பெரும்பான்மையிரான 74 வீத மக்களின் 58 வீத வாக்குகளைப் பெற்றுத் தேர்தலில் வென்ற பின்னர் இவர்கள் அப்போது என்ன சொன்னார்கள்? வடக்கில் வாழும் தமிழர்கள் நாட்டின் சனத்தொகையில் 4 வீதம் மட்டுமே என்று கூறி சில ஆண்டுகளே கடந்துவிட்ட நிலையில், இன்று தோல்வியையிட்டுப் புலம்புகிறார்கள். இது கணக்குப் போடும் தவறு அல்ல. அடிப்படையான மனப்பான்மையே தவறானது.

கம்மன்பில, குணவர்தன, வீரவன்ச என்போரும் தயான் ஜயதிலகவும் நுகேகொடை கூட்டத்தில் கூறிய கூற்றுக்கள் மூலம் ஓர் உண்மை தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் இந்த நாட்டில் சம உரிமைகளுடைய பிரஜைகளாக ஏற்கவில்லை என்பது அவர்களின் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுகிறது. தயான் ஜயதிலக இலங்கையின் நாகரிக மையம் (Civilisational core) என ஒன்று உள்ளது. பெரும்பான்மைச் சிங்கள சமூகமே இந்த நாகரிக மையம் என்று வாதிக்கிறார். ஆகவே, சிங்களவர்களான பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படாத தேர்தல் முடிவு ஒரு சதியே அல்லாமல் வேறு ஒன்றும் அல்ல என்றும் அவர் முடிவு கட்டுகிறார். சிங்கள இனவாதக் கருத்தியலின் முதன்மையான கருத்தியலாளராகப் புதிதாக மேற்கிளம்பும் தயான் ஜயதிலக நளின் டி சில்வா, குணதாச அமரசேகர என்ற இருவரையும் கூட விஞ்சியவராக முன்சென்று விட்டார்.

தேர்தல் 'சதி'யை விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடித்ததுடன் சம்பந்தப்படுத்தி 'சதியாளர்களை' நாட்டின் பகைவர்களாகச் சித்திரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மைத்திரிபால சிறிசேனவையும் சதியாளர்களில் ஒருவராக்கி விட்டனர். இப்போது மகிந்த ராஜபக்ஷ என்ற பெயர் ஒரு தனிநபரைச் சுட்டுவதில்லை. அது நாட்டையே குறிப்பிடுகிறது. ஆகவே, மகிந்த ராஜபக்ஷவிற்குத் தேர்தலில் எதிர்ப்பைக் காட்டியவர்கள் இந்தத் தர்க்கத்தின்படி நாட்டிற்கு எதிரான சதிகாரர்களேயாவர்.

**ராஜபக்ஷ வீரவழிபாட்டு கலாசாரத்தில் சிறுபான்மை இன மக்களுக்கான இனவாத உணர்வு வெளிப்படுகிறது. அடுத்த பாராளுமன்ற தேர்தலைக் குறிவைத்து சிங்களவர்கள் மத்தியில் இனவாத உணர்வுகளை தூண்டிக்கிளரச் செய்வர்.**

## முடிவுரை

மகிந்த ராஜபக்ஷவின் அறிக்கை நுகேகொடை கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. அதில் கூறப்பட்டதன் படி மக்கள் தேர்தலின் போது வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பை ஜனவரி 9 ஆம் திகதி காலையிலும் அதற்குப் பின்பும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அவரே அறிவித்து அவரே நடத்திய தேர்தலை ஒரு சதிவேலை என்று அவர் கூறும் முரண்நிலையை நாம் காண்கிறோம். இனவாதிகள் போற்றிப் புகழும் வீரர் இவர் என்பது கவனத்திற்குரியது. ஏ.டபிள்யூ சிங்கம் 'வீரரும் சனக்கும்பலும்' (The Hero and the crowd) என்றொரு நூலை எழுதினார். இவரைப் போன்ற வீரர் ஒருவரை மனதில் வைத்துக் கொண்டுதான் சிங்கம் இப்புத்தகத்தை எழுதினார் போலும், இந்த வீரரைப் பற்றித்தான் தயான் ஜயதிலக பேசுகின்றார்.

மேற்படி கூற்றை மகிந்த கூறும் முன்னர் நான் 9 ஆம் திகதி காலை ஒரு சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டது, அது முறியடிக்கப்பட்டது என்ற கதையை நம்பவில்லை. ஆனால் இந்தக் கூற்று என்மனதை மாற்றிவிட்டது. மக்களின் தீர்ப்பை மகிந்த ஏற்கவில்லை என்பதற்கு இது நல்லதொரு சான்று. அது மட்டுமன்றி அத்தீர்ப்பை ஒரு சதியென்றும் 'நான் தோற்கடிக்கப்படவில்லை எனது அதிகாரத்தைப் பறித்துவிட்டனர்' என்றும் அவர் கூறினார். சதிபற்றிய நீதிமன்ற வழக்கிற்கு இதுவே தெளிவான ஒருசான்றாக அமையும். இதனோடு மேலும் இரண்டு முடிவுகள் எமக்குக் கிடைக்கின்றன.

1. நுகேகொடையில் நடத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரணியின் நோக்கம் மகிந்தவிடம் நன்மையைப் பெற்றவர்கள் அவர் பற்றிய வீரவழிபாட்டுக் கலாசா ரத்தை மீள உயிர்ப்பிப்பதற்கு மேற் கொண்ட முயற்சியாக அமைந்தது. இந்த வீர வழிபாட்டுக் கலாசாரத் திற்கு ஒருவரலாறு (2005-2015) உள்ளது. அது வரியிறுப்போர் பணத் தைக் கொண்டு கட்டியெழுப்பப்பட் டது. இன்றைய அரசாங்கமும், ராஜ பக்ஷ எதிர்ப்பாளர்களும் இந்தக் கலாசாரத்தின் பலத்தை குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது.

2. இந்தக் கலாசாரத்தின் ஆபத் தான விடயம் அதில் எதிரொ லிக்கும் இனவாதம் ஆகும். சி றுபான்மை மக்களுக்கு எதிரான இனவாத உணர்வு இதில் வெளிப்ப டுகிறது. அடுத்து வரும் பராளுமன் றத் தேர்தல்களைக் குறிவைத்துச் சி ங்களவர்களான பெரும்பான்மையி னர் மத்தியில் இனவாத உணர்வுக ளைத் தூண்டிக் கிளறச் செய்வர். சுதந்திரக்கட்சி மீதும் அதன் கூட்டா ளிக் கட்களான லங்கா சமசமா ஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஜாதிக ஹெல உறுமய என்பனவற்றின் மீதும் பலமான அழுத்தம் பிரயோ கிக்கப்படும். இக்கட்சிகள் அரசியல் கல்விப் பிரசார இயக்கம் ஒன்றை நடத்தி இவ்விடயங்களை விவாதிப் பதன் மூலமே இந்த அழுத்தத்தை எதிர்கொள்ளலாம். சிறுபான்மைச் சமூகத்தினரின் கட்சிகளுக்கும் இவ் விடயத்தில் பெரிய பொறுப்பு ஒன்று உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்ட மைப்புத் தலைவர்களும், வடமா காண சபை உறுப்பினர்களான அரசி யல் தலைவர்களும் இனங்களுக்கு இடையிலான பிளவை அதிகரிக்கும் வகையில் செயற்படக்கூடாது. இதனை ஒரு வெளிப்பூச்சு நடவடிக் கையாக மட்டும் மேற்கொள்வதால் பயனில்லை. உண்மையான இணக் கப்பாடு, கருத்துக்களிலும், உணர்வு களிலும் மிதமான போக்கு என்பன இலங்கை முழுவதிலும் பரவலாக மக்களிடம் வளர்க்கப்படுதல் வேண் டும். ■

**உள்நாட்டு அரசியல்**



கலாநிதி
எஸ்.ஐ. கீதபொன்கலன்

# நிகழப்போவது ராஜபக்ஷ மீளெழுச்சி அல்ல, அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் தாமதமே



முதலில் நான் அதைப் பத்தோடு பதினொன்றாக ஒரு சாதாரண அரசியல் கூட்டம் என்றுதான் நினைத்தேன். அதனால், பெரிதாக நான் கவனத்தைச் செலுத்தவில்லை. பிறகு பார்த்தால் பெருமளவில் மக் கள் திரண்டு வந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. கலந்து கொண் டவர்களின் எண்ணிக்கை குறித்து மதிப்பீடுகள் பெருமளவுக்கு வேறு பட்டிருந்தாலும், அது பலத்தைக் காண்பிக்கக் கூடிய அளவுக்கு ஒரு மாபெரும் பேரணியாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. அண் மைய வாரங்களில் அல்லது மாதங்க ளில் எந்தவொரு கூட்டத்துக்கும் இந் தளவில் மக்கள் திரண்டுவந்ததை நான் காணவில்லை. அத்துடன், இலங்கையின் முன்னணி அரசியல் அவதானிகளில் பலரும் அது குறித்து எழுதியிருந்ததையும் அவதானித் தேன். அதனால் கொழும்பு ரெலிகி ராவ் இணையத்தளத்தில் நுகே கொடை பேரணி தொடர்பான வீடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோவைப் பார்க்கத் தீர்மானித்தேன்.

நுகேகொடையில் கூடியவர்கள் மகிந்த ராஜபக்ஷவை 'அரை ஓய்வில்' இருந்து வெளியே வருமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். இத்தருணத்தில் முன்னாள் ஜனாதிபதி என்ன சொல்ல வேண்டியிருந்தது என்பதை புரிந்துகொள்வது முக்கியமானதாகும். அவர் கூறியவை நாட்டின் எதிர்காலத் திசைமார்க்கத்தின் மீது, மிகவும் குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் திசைமார்க்கத்தின் மீது பாரதூரமான தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும். உதாரணத்துக்கு, தீவிர அரசியலுக்குத் திரும்பிவருவதற்கு அவர் மேற்கொள்ளக்கூடிய ஒரு தீர்மானம் சுதந்திரக்கட்சியை சரி இரண்டாக பிளவுபடுத்தும்.



நுகேகொடை பேரணியை ராஜபக்ஷ அங்கீகரித்ததுடன் தனக்கு காட்டிய ஆதரவை பாராட்டவும் செய்தார். அவர் அனுப்பி வைத்த செய்தி அங்கு வாசிக்கப்பட்டது. அச்செய்தியில் ராஜபக்ஷ இரு அம்சங்களை தெளிவுபடுத்தியிருந்தார். ஒன்று, ஜனாதிபதி தேர்தல் நாட்டின் எதிரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டமொன்றின் விளைவு என்று தான் நம்புவதால் அதன் முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது. ராஜபக்ஷவின் அண்மைக்கால அறிவிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, அவர் கூறுகின்ற அந்தச் சதித்திட்டத்தில் தமிழர்கள், புலம் பெயர் தமிழர்கள் இந்தியா மற்றும் மேற்குலகம் உள்ளடங்கும் எனலாம்.

இரண்டாவது, சுதந்திரக்கட்சி மீதான ராஜபக்ஷவின் விசுவாசம் இன்னமும் உறுதியானதாக இருக்கிறது. அதை அவர் தனது செய்தியில் தெளிவாக வெளிக்காட்டியிருந்தார். எனவே, 'நுகேகொடை முன்னணி' என்று அழைக்கப்படக்கூடிய இந்த கூட்டு, தனக்கு வழங்குகின்ற ஆதரவுக்காக சுதந்திரக்கட்சியை விட்டு அவர் வெளியேறப் போவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. நுகேகொடை முன்னணி என்பது அந்த மேடையில் பங்கேற்ற அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களை உள்ளடக்கியது என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது.

தனக்கு வாக்களித்த மக்களின் அழைப்பை நிராகரிக்கக் கூடிய ஆற்றல் ராஜபக்ஷவுக்கு இல்லை என்று கூறப்பட்டிருக்கின்றபோதிலும், அவர் சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பற்றியே இடையறாது குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

எனவே, சுதந்திரக்கட்சித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அழைப்பு விடுத்தால், அவர் மீண்டும் தீவிர அரசியலுக்கு வந்து பிரதமர் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட முன்வருவார் என்று நம்ப இடமிருக்கிறது. ஆனால், ராஜபக்ஷவிடமிருந்து ஒரு உறுதியான 'ஆம்' என்ற பதிலை எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமாகப்போய்விட்டது. இப்போது 'பந்து' சுதந்திரக்கட்சியின் பக்கமே இருக்கிறது. ராஜபக்ஷதான் காத்திருப்பார் போலத் தெரிகிறது.

அதற்காக அவர் போராடுவாரா? அது பெரும்பாலும் சாத்தியமில்லை. ஏனென்றால், அரசியல் போராட்டமொன்றை முன்னெடுக்கக்கூடிய ஆற்றலை அவர் அதிகமாக இழந்து கொண்டுவருகிறார் போலத் தோன்றுகிறது. வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தபோது தான் பின்னணியில் இருப்பது தெளிவாகத் தெரியவந்ததும் தேர்தலை ரத்துச் செய்வது குறித்து ராஜபக்ஷ சிந்தித்தார் எனினும் அது தொடர்பில் நடவடிக்கையை அவர் முன்னெடுக்கவில்லை. உடனே அவசரமாக தனது பூர்வீக வாசஸ்தலத்துக்கு விரைந்த அவர் சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தை தொடர்ந்தும் தன் வசமே வைத்திருக்கும் முயற்சியாக ஓரிரு தினங்களில் கொழும்புக்கு விரைந்து வந்தார். ஆனால், கட்சியின் தலைமைத்துவத்தை மைத்திரிபால சிறிசேனவிடமே கண்ணியமாக கையளிக்கவேண்டியதாயிற்று. ராஜபக்ஷ இனிமேலும் போராடுவதில் நாட்டம் காட்டுவதாக இல்லை.

அடுத்தது என்ன? ராஜபக்ஷவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நுகேகொடை முன்னணி அது போன்ற பேரணிகள் ஊடாக தொடர்ந்து நெருக்குதல்களைக் கொடுத்துக் கொண்டிருக்க முயற்சிக்கும் என்பது தெளிவானது. நுகேகொடை பேரணி ராஜபக்ஷவைப் பற்றியது என்பதைக் காட்டிலும் கூட்டணியின் முக்கியத்துவம் பற்றியதேயாகும். நுகேகொடை முன்னணியின் உறுப்பினர்கள் பொதுத்தேர்தலொன்றில் தங்கள் சொந்தத்தில் எந்த ஆசனத்தையும் வெற்றிபெற முடியாதவர்கள். அவர்களுக்கு மக்களின் அங்கீகாரமோ, கட்சிக் கட்டமைப்போ பெரிதாக இல்லை. எனவே, சுதந்திரக்கட்சியுடனான ஒரு கூட்டு தேவை அல்லது தங்களது பிரசாரத்துக்கு வலுச்சேர்க்க ராஜபக்ஷ போன்ற ஒரு ஆளுமை தேவை. ராஜபக்ஷ மீண்டும் பிரவேசிக்காவிட்டாலும் கூட, இந்தப் பிரசாரங்கள் அவர்களின் செல்வாக்கை மேம்படுத்தும். அவர்களை பொறுத்தவரை அவ்வாறான ஒரு செல்வாக்கு மேம்பாடு எதிர்கால பொதுத்தேர்தலில் பெறுமதிமிக்கதாக இருக்கும். எனவே, நுகேகொடை பேரணி அந்தக் கூட்டணியின் செல்வாக்கைக் கட்டியெழுப்பும் நோக்குடனான ஒரு ஏற்பாடேயாகும். ராஜபாக்ஷவின் வெளியேற்றத்தினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு சிலர் முயற்சிக்கிறார்கள் என்பதே உண்மை. அதனால், அவர்கள் ராஜபக்ஷவை அளவுக்கு அதிகமாக நேசிக்கக் கூடிய சாத்தியம் இருக்கிறது.

**ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து நீக்குவதற்காக மைத்திரிபால சிறிசேன ஆபத்துக்களை எதிர்நோக்கிய வண்ணம் பெரும் நெருக்கடிகளுடன் தீவிரமான பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தது. எனவே ராஜபக்ஷவின் மீள் வருகைக்கு வசதி செய்யக்கூடிய எந்த அணுகுமுறையையும் அவர் கடைப்பிடிப்பது அறவே சாத்தியமில்லை**

அவரது ஆதரவாளர்களும் சுதந்திரக் கட்சியிடமிருந்து அழைப்பொன்று தங்களுக்கு வரச் செய்வதற்கு திட்டம் தீட்ட முயற்சிக்கக்கூடும் அல்லது நுகேகொடையில் நடத்தப்பட்டதைப் போன்ற பேரணிகள், ஆர்ப்பட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் மூலமாக நெருக்குதல்களைக் கொடுக்கக்கூடும். அழைப்பொன்று வரச்செய்வதற்கு முயற்சிப்பதென்பது எளிதான காரியமாக இருக்கப்போவதில்லை. ஏனென்றால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருப்பதன் காரணத்தால், சுதந்திரக் கட்சியின் தலைமை மீது அவர் அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவராக இருக்கிறார். வேறு வழிகள் ஊடாக ராஜபக்ஷ் மீண்டும் அதிகாரத்துக்கு வர அனுமதிப்பதற்காக மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடையவில்லை. ராஜபக்ஷவின் மீள் பிரவேசத்துக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகளை இருவருக்கும் இடையிலான தனிப்பட்ட குரோதம் மேலும் அதிகரிக்கவே செய்யும்.

### நிறைவேற்று அதிகார பிரதமர்

ராஜபக்ஷவினால் பிரதமராக வரமுடியுமென்றும் அவர் பிரதமராக வர வேண்டும் என்றும் நுகேகொடை பேரணியில் கலந்துகொண்ட மக்களில் குறைந்தபட்சம் ஒரு பிரிவினராவது நம்புகிறார்கள். அவர் நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமராக வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா அல்லது தற்போதைய ஆட்சி முறையின் கீழ் பிரதமராக அவர் வர வேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதே கேள்வி. தற்போதைய முறையின் கீழ் பிரதமர் பதவி மிகவும் பலவீனமான ஒன்றாகும். டிங்கிரி பண்டா விஜேதுங்க,ரத்னசிறி விக்கிரமநாயக்க மற்றும் டி.எம். ஜெயரத்ன ஆகியோர் எத்தகைய பிரதமர்களாக இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு பியோன் போன்று நடத்தப்படுவதாகக்கூட ஒரு பிரதமர் புலம்பியதையும் நாம் அறிவோம். நுகேகொடை முன்னணியினர் தங்களது ஹீரோ மகிந்த ராஜபக்ஷவுக்கு இத்தகைய பிரதமர் பதவியை நிச்சயமாக விரும்பவில்லை.

எனவே, திருத்தப்படக்கூடிய அரசியலமைப்பொன்றின் கீழான பிரதமர் பதவியொன்றைப் பற்றியே அவர்கள் பேசுகிறார்கள். ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார பிரதமராக திரும்பிவரக்கூடியதாக அரசியலமைப்பை மைத்திரிபால சிறிசேன மாற்றியமைக்க வேண்டுமென்பதே அவர்களின் விருப்பமாகும். இது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகக் கூடிய எதிர்பார்ப்பு? இது அறவே சாத்தியமில்லாதது. ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து நீக்குவதற்காக தற்போதைய ஜனாதிபதி பாரதூரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆபத்துக்களை எதிர்நோக்கிய வண்ணம் பெரும் நெருக்கடிகளுடன் தீவிரமான பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தது. எனவே, ராஜபக்ஷவின் மீள் வருகைக்கு வசதி செய்யக் கூடிய எந்த அணுகுமுறையையும் மைத்திரிபால சிறிசேன கடைப்பிடிப்பதென்பது அறவே சாத்தியமில்லை.

நுகேகொடையில் மைத்திரிபால சிறிசேன மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. நேரடித்தாக்குதலொன்று விமல் வீரவன்சவிடமிருந்து வந்தது. பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் ஜனாதிபதி சிறிசேனவே நியமித்தார் என்று குற்றஞ்சாட்டிய வீரவன்ச விசித்திரமான எத்தகைய நாடொன்றில் நாம் வாழ்கிறோம் என்று கேள்வியெழுப்பினார். பேரணிக்கு செய்தியொன்றை அனுப்பிய மகிந்த ராஜபக்ஷ சதிமுயற்சியொன்றின் மூலமே தான் அதிகாரத்திலிருந்து இறக்கப்பட்டதாக கூறினார். அந்தச் சதி முயற்சியில் மைத்திரிபால சிறிசேனவும் ஒரு அங்கம் என்பதே அவர் மறைமுகமாகக் கூறியிருக்கும் செய்தி. எனவே, ராஜபக்ஷவும் சிறிசேனவும் கூட்டாக பணியாற்ற முடியுமென்று கருதுவது யதார்த்த பூர்வமானதாக இல்லை. ராஜபக்ஷ பிரதமராக உடனடியாக அல்லது குறைந்தது இன்னொரு 6 வருடகாலத்துக்கு மீள் வருகையைச் செய்ய முடியாது என்பதே இதன் அர்த்தமாகும்.

### உண்மையான செய்தி

எது எவ்வாறெனினும், நுகேகொடையில் காட்சிப்படுத்தப்பட்ட வலிமையை எவராலும் அலட்சியப்படுத்த முடியாது. சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்ஷ எந்தளவுக்கு செல்வாக்குக் கொண்டவராக விளங்குகிறார் என்பதை அந்தப் பேரணி வெளிக்காட்டியது. அனுமதிக்கப்படுவாரேயானால் ராஜபக்ஷவினால் மீண்டும் அரசியலுக்கு வந்து தேர்தல்களில் வெற்றி பெற முடியும் என்பதையும் அது வெளிக்காட்டியது. இத்தகைய சூழ்நிலை ராஜபக்ஷவின் எதிராளிகளுக்கும் தற்போதைய அரசாங்கத்துக்கும் அச்சத்தைக் கொடுக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கிறது. தற்போதைய அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை மாற்றியமைத்தால் அதாவது, பாராளுமன்ற முறையிலான அரசாங்கம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டால் ராஜபக்ஷவை மிகவும் எளிதாக வர அனுமதிப்பதாக அது அமையும் என்பதையும் அவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

எனவே, தற்போதைய தருணத்தில் முழுமையான அரசியலமைப்புச் சீர்திருத்தம் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானதாகவே இருக்க முடியும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை தான் ராஜபக்ஷவின் மீள் வருகையைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் திட்டங்களை அரசாங்கம் தாமதப்படுத்தவும் கூடும். எனவே, உண்மையில் ராஜபக்ஷவின் எழுச்சியோ மீளெழுச்சியோ அல்ல, அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் தாமதமே நுகேகொடை பேரணியின் விளைவாக ஏற்படக்கூடியது என்று உய்த்துணரக் கூடியதாக இருக்கிறது. ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# நுகேகொடை பேரணியும் அரசாங்கத்தின் இடைநிலை நெருக்கடியும்



ராஜன் பிலிப்ஸ்

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் அதன் அரைவாசி காலகட்டத்தைத் தாண்டிவிட்டது. இதுவரையான செயற்பாடுகள் அனுகூலங் களையும் பிரதி கூலங்களையும் கொண்டதாக - ஒரு கலப்பானதாக இருக்கிறது. வேலைத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமை ப்பு மாற்றங்களையும் சட்டவாக்க மாற்றங்களையும் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான காலக்கெடுவாக குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஏப்ரில் 23க்கு முன்னதாக எஞ்சியிருக் கும் நாட்களுக்குள் நிறைவேற்றக்கூடியதாக இருக்குமா என்பது மிகப்பெரியதொரு கேள்வி. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான காலக்கெடு தொடர்பில் வேறு எவரையும் விட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே அடிக்கடி வலியுறுத்திக் கூறிக் கொண்டிருக்கிறார். எதிர்வரும் ஜூனில் பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு சகல கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கமொன்றை அமைக்க முடியுமென்ற எதிர்பார்ப்பில் அவர் இருக்கிறார்.


தற்போதைய பாராளுமன்றத்தை அதன் முழுப்பதவிக்காலத்துக்கும் அதாவது 2016 ஏப்ரில் வரை நீடிக்க அனுமதித்து, தேர்தல் முறையிலான மாற்றங்கள் உட்பட 100 நாள் வேலைத்திட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதை ஏன் உறுதி செய்யக்கூடாது என்ற கேள்வியை நான் கேட்கவிரும்புகிறேன். ஒரு வேறுபட்ட தேசிய அரசாங்கத்தை அமைக்கும் நம்பிக்கையில் தற்போதைய பாராளுமன்றத்தை உரியகாலத்துக்கு முன்னதாகவே கலைத்து பொதுத்தேர்தலொன்றை நடத்துவதை விடுத்து இதே பாராளுமன்றத்தையே ஒரு 'தேசிய அரசாங்கமாக' செயற்பட ஏன் அனுமதிக்கக்கூடாது? தேர்தலொன்றின் விளைவாக நிச்சயமற்ற நிலை தோன்றக்கூடிய ஆபத்தைத் தவிர்க்கக்கூடியதாக தற்போதைய பாராளுமன்றத்திற்கு இருக்கின்ற உச்சபட்ச ஆற்றலை பயன்படுத்துவது விவேகமான காரியமாக இருக்காதா? உரியகாலத்துக்கு முன்கூட்டியே நடத்தப்பட்ட கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து படிக்கக்கூடியதாக இருந்த பாடத்தை அவ்வளவு விரைவாக மறந்து விடுவதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியகாலத்துக்கு முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தலை நடத்தி னால் அதனால் ஏற்படக்கூடிய ஆப த்தை நுகேகொடையில் பெப்ரவரி 18 ஆம் திகதி 'பிரதமர் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷ என்ற கோஷத்து டன் நடத்தப்பட்ட பேரணி புதிய அர சாங்கத்தில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களுக்கு நிச்சயமாக உணர்த்தியிருக்கும். அரசாங்கத்தில் உள்ள பலர் எதிர்பார்த்தது போன்று அந்தப் பேரணி பிசுபிசுத்துப்போக வில்லை. பெருமளவில் மக்கள் கல ந்துகொண்டார்கள். ஏற்பாட்டாளர் கள் எதிர்பார்த்ததையும் விடவும் பரந்தளவில் ஊடகங்களும் அந்தப் பேரணிக்கு முக்கியத்துவம் கொடுத்த தைக் காணக்கூடியதாக இருந்தது. அரசியல் ரீதியில் நோக்கும் போது, ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இம்மாதம் சமர்ப்பிக்கப்படவிருந்த இலங்கை தொடர்பான அறிக்கையை செப் டெம்பர் மாதம் வரை தாமதிக்கச் செய்ததில் அரசாங்கம் கண்டிருக்கும் இராஜதந்திர வெற்றியை நுகே கொடை பேரணி விஞ்சிவிட்டது. அறிக்கை தாமதிப்பு இலங்கையை தொடர்ச்சியாக நான்காவது வருட மாக நெருக்கடியிலிருந்து விட்டு வைத்திருக்கிறது. ஆனால், 2009 போர் வெற்றிக்குப் பிறகு ஜெனீவா வில் இராஜதந்திர சகதிக்குள் இலங் கையைத் தள்ளிவிட்ட மகிந்த ராஜ பக்ஷ திரும்பவும் ஆட்சியதிகாரத்து க்கு வரவேண்டுமென்று நுகே கொடையில் ஆரவார கோஷங்கள் எழுப்பப்பட்டதைக் காணக்கூடிய தாக இருந்தது.

உண்மைதான். ஒரு பேரணி ஒரு பிரதமரை உருவாக்கிவிடப் போவ தில்லை. பெருமளவில் மக்கள் கூடி னார்கள் என்பதற்காக, அந்தப் பேர, ணியை ஏற்பாடு செய்தவர்களின் சுயநல நோக்கமும் சந்தர்ப்பவாதமும் அவர்கள் மக்களுக்கு விடுத்த செய்தி களின் பேரினவாத உள்ளடக்கமும் அம்பலமாகாமல் போகவில்லை. நுகேகொட பேரணியை 1964 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் கம் யூனிஸ்ட் கட்சி ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த ஐக்கிய இடதுசாரி முன்னணியின் பேரணியுடன் சிறு பிள்ளைத்தனமாக ஒப்பிட்டதை கலா நிதி லக்சிறி பெர்னாண்டோ மிகவும் கச்சிதமான முறையில் நையாண்டி செய்திருந்தார். சனக்கூட்டத்தின் பரு மனையல்ல, தலைவர்களின் நம்பகத் தன்மையையும் அவர்களின் அரசிய லின் உட்பொருளையுமே ஒப்பீடு செய்ய வேண்டும். 1964 ஆம் ஆண்டில் ஐக்கிய இடதுசாரி முன்ன ணியை அமைத்த தலைவர்களான கலாநிதி என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தன மற்றும் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க ஆகியோரை யும் கடந்த மாதம் நுகேகொடையில் கூடிய வாசுதேவநாணயக்கார, தினேஸ் குணவர்தன, விமல்வீரவன் சவையும் எந்தவகையிலும் ஒப்பிட முடியாது. நுகேகொடை பேரணியை ஏற்பாடுசெய்தவர்களினால் அனுப விக்கக்கூடியதாக இருந்த சுதந்திரத் துக்கும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங் களின் போது கூட்டங்களை ஏற்பாடு செய்தவேளை மைத்திரிபால சிறி







நுகேகொடை பேரணியை ஏற்பாடு செய்தவர்கள் தங்களை 1964ஆம் ஆண்டில் ஐக்கிய இட துசாரி முன்னணியுடன் சிறுபிள்ளைத்தனமாக ஒப்பிட்டார்கள். சனக்கூட டத்தின் பருமனை அல்ல தலைவர்களின் நம்பகத் தன்மையையும் அவர்க ளின் அரசியலின் உட் பொருளையுமே ஒப்பீடு செய்ய வேண்டும். ஐக்கிய இடது சாரி முன்னணியை அமைத்த தலைவர்களான கலாநிதி என்.எம். பெரேரா, பிலிப் குணவர் தன, டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க ஆகியோரை வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச ஆகியோ ரையும் எந்த வகையிலும் ஒப்பிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனவும் எதிர்க்கட்சிகளும் முகங்கொடுக்க வேண்டியிருந்த நெருக்கடிகளையும் சுட்டிக்காட்டி டெயிலி நியூஸ் பத்திரிகை அண்மையில் ஆசிரிய தலையங்கம் தீட்டியிருந்தது. (இப்போது தனிப்பட்ட வன்மம் எதுவுமின்றி, வித்தியாசமான வழிகாட்டலின் கீழ் அந்தப் பத்திரிகையில் ஆசிரியதலையங்கம் தீட்டப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது) மைத்திரிபால சிறிசேனாவின் பிரசாரக் கூட்டங்களுக்கான மைதானங்கள், அரங்குகளுக்கான உத்தியோகபூர்வ அனுமதி மறுக்கப்படுவதே நடைமுறையாக இருந்தது. மாற்று ஏற்பாடுகளைச் செய்து அவர்கள் வேறு இடங்களில் பிரசாரக் கூட்டத்தை நடத்துவதற்கு முயன்றாலும், முன் கூட்டியே அதைக் குழப்பியடிப்பதற்கு குண்டர்கள் அனுப்பப்படுவதே வழமையாக இருந்தது. ஆனால், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பேரணியை ஏற்பாடு செய்தவர்களுக்கு ஜனநாயக சுதந்திரங்களை கடைப்பிடிப்பதிலோ அல்லது மறுப்பதிலோ எந்த அக்கறையுமில்லை. நல்ல வழியோ அல்லது கெட்டவழியோ எப்படியென்றாலும், தங்களது நோக்கங்களை அடைவதற்காக தங்களின் ஆள் மீண்டும் அரசியலுக்கு வந்தால் சரியே என்பதே அவர்களின் நிலைப்பாடு.

ராஜபக்ஷவின் மீளெழுச்சிக்காக பேரணியை ஏற்பாடு செய்தவர்கள் கொழும்பில் பாரம்பரியமாக அரசியல் சமர்க்களங்கள் என்று வர்ணிக்கப்படுகின்ற எந்தவொரு இடத்தையும் தெரிவு செய்யவில்லை. மாறாக அவர்கள் வெகு கெட்டித்தனமாக நுகேகொடையைத் தெரிந்தெடுத்தார்கள். மகிந்தவுக்கு ஆதரவாக கொழும்பு ஹைட்பார்க்கில் ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தால் கதை வேறு விதமாக முடிந்திருக்கும். நுகேகொடை அவர்களுக்கு வசதியானதும் வழக்கமானதுமான ஒரு மைதானமாகும். 2007 ஜனவரியில் ஐக்கிய மக்கள் இயக்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதான பேரணியொன்றை தாக்குதல் நடத்தி குழப்பிய குண்டர்களுக்கு மேர்வின் சில்வா தலைமை தாங்கி வந்தது இந்த நுகேகொடையில் தான். முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிராக குரோதப் பிரசாரங்களை முன்னெடுக்க கடந்த வருடம் பொது பலசேனா அதன் பரிவாரங்களை அழைத்துவந்ததும் இதே நுகேகொடைக்குத்தான். பேரணி நடத்தப்பட்ட இடத்தைக் காட்டிலும் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, மறைத்துவைத்திருந்து சரியான தருணம் வரும்போது வெளிப்படுத்துவதற்கு தங்களிடம் கச்சிதமான திட்டமொன்று இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் நினைப்பதுதான். அவர்கள் மைத்திரிபால சிறிசேனவையோ அல்லது அவரது வேலைத்திட்டத்தையோ எதிர்க்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவையே அவர்கள் இலக்கு வைத்து தாக்குதல் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமர் பதவிக்கு வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடத் தயாரா என்று விக்கிரமசிங்கவுக்கு அவர்கள் சவால் விடுக்கிறார்கள். ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தின் பிரதம சூத்திரதாரியான விக்கிரமசிங்க (அரசியல் போட்டியென்று வரும் போது) புதிய அரசாங்கத்தின் பலவீனமான புள்ளியாகவும் விளங்குகிறார் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் தங்களது தந்திரோபாயத்தை வகுக்கிறார்கள் போலத் தெரிகிறது.

நிலைவரங்களை அவதானித்துக் கொண்டிருக்கின்ற அரசியல் அறிஞர்கள், ஆய்வாளர்களைப் பொறுத்தவரை, பிரதமர் பதவிக்காக நடைபெறக்கூடிய போட்டி சலிப்பைத் தருகின்ற அரசியலமைப்பு மற்றும் நிருவாக மாற்றங்கள் தொடர்பான அரசியலைவிடவும் சுவாரஸ்யமானதாக இருக்கும். மகிந்த ராஜபக்ஷ செய்ய வேண்டியதெல்லாம் தனது குடும்பத்தவர்களை அரசியல் ரீதியில் விலக்கி வைக்க வேண்டியதேயாகும். அவ்வாறு அவர் செய்வாரேயானால், அவர் தோற்கடிக்கப்படமுடியாதவராக மீண்டும் வெளிக்கிளம்பக் கூடியதாக இருக்கும் என்றே பலரும் நினைக்கிறார்கள்.

எதிர்காலத் தேர்தலொன்றில் ரணிலுக்கும் மகிந்தவுக்கும் இடையே போட்டி மூளுமேயானால், அது அபத்தமான சூழ்நிலையொன்றைத் தோற்றுவிக்கும். மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் வாழ்வில் மிகவும் மோசமான தருணமாக அமைந்த







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015 ஜனவரி 9ஆம் திகதி காலையில் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு சகலவிதமான மாற்றுவழிகளையும் யோசித்துப் பார்த்து முயற்சித்துவிட்டு பிறகு எதுவுமே சாத்தியமில்லை என்று உணர்ந்ததும் அலரி மாளிகையிலிருந்து சாதாரண வாழ்வுக்கு பத்திரமாகத் திரும்புவதை உறுதிசெய்துகொள்வதற்கு இலங்கையில் உள்ள 2 கோடிக்கும் அதிகமான மக்களில் ரணில் விக்கிரமசிங்க என்பவரின் உதவியையே அவர் நாடினார். பதவி விலகிச் செல்லும் போது அவர் வாசுதேவவையோ, தினேஷையோ, விமலையோ, உதயவையோ அல்லது தயானையோ நினைத்துப் பார்க்கவில்லையே. நாட்டுக்குச் செய்த சேவைக்காக முன்னாள் ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் பாதுகாக்கப்படவேண்டியவர்கள் என்று அவரிடம் விக்கிரமசிங்க உறுதியளித்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன. அதற்குப் பிறகு முன்னைய ஆட்சியின் தவறான செயற்பாடுகள் தொடர்பில், இடம்பெறக்கூடிய முழு அளவிலான விசாரணைகளின் விளைவுகளில் இருந்து குறைந்தபட்சம் மகிந்த ராஜபக்ஷவையாவது பாதுகாக்க ரணில் முயற்சிக்கக்கூடும் என்று சந்தேகம் வளர ஆரம்பித்தது. இந்தச் சந்தேகம் ஆதாரமற்ற ஒன்று அல்ல. ஏனென்றால் சுமார் 40 வருடங்களாகத் தொடருகின்ற அரசியல் விளையாட்டு இதுதான். சுனாமி நிதியுடன் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்படுவதில் இருந்து குறிப்பிட்ட ஒரு அரசியல்வாதியை காப்பாற்றியதாக முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவரே பகிரங்கமாக ஒத்துக்கொண்டதை சிலமாதங்களுக்கு முன்னர் நாமெல்லோரும் கண்டோமல்லவா?

சுமார் நான்கு தசாப்த கால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியும் கடந்த 10 வருடங்களாக நிலவிய கடிவாளமற்ற குடும்ப ஆட்சியும் அதிகார துஷ்பிரயோகமும் பாரம்பரியமான அரசியல் இணைப்புகளையும் கட்சி விசுவாசங்களையும் துடைத்தழித்துவிட்டன. இன்றைய அமைப்பு முறை சகல வகையான விசித்திரமான அரசியல் மற்றும் தனிப்பட்ட படுக்கைத் துணைகள் நிரம்பியதாகக் காணப்படுகிறது. அரசியல் ரீதியான தொடர்புகளை வளர்த்துக்கொண்ட பேர்வழிகள் அரசாங்கத்துடன் இருந்தாலென்ன, எதிர்க்கட்சியுடன் இருந்தாலென்ன எந்தப் பிரச்சினையுமில்லாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. உண்மையில் அவர்கள் இரு தரப்புகளுடனும் தொடர்புகளைப் பேணிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் ரீதியான தொடர்புகளைக் கொண்டிராதவர்களும் சமூக நலனில் அக்கறை கொண்ட பிரஜைகளுமே உத்தியோகபூர்வமான தண்டனைகளினாலும் உத்தியோகபூர்வமற்ற தாக்குதல்களினாலும் பாதிப்புக்குள்ளாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கிறிமினல் வழக்குகளில் நான்கு சதவீதமானவற்றிலேயே சந்தேக நபர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுகிறார்கள் என்று அன்றொரு நாள் பாராளுமன்றத்தில் நீதியமைச்சர்



எதிர்கால தேர்தலொன்றில் மகிந்தவுக்கும் ரணிலுக்குமிடையில் போட்டி மூளுமேயானால் அது அபத்தமான சூழ்நிலை ஒன்றைத்தோற்றுவிக்கும். ஜனவரி 9ஆம் திகதி காலையில் அதிகாரத்தை தக்க வைப்பதற்கு மாற்று வழிகளை யோசித்து பார்த்துவிட்டு எதுவுமே சாத்தியமில்லை என்று உணர்ந்ததும் மகிந்த அலரி மாளிகையிலிருந்து சாதாரண வாழ்வுக்கு பத்திரமாக திரும்புவதை உறுதி செய்துகொள்ள ரணிலின் உதவியையே நாடினார். தினேஷையோ வாசுவையோ விமலையோ தயானையோ அன்று காலை அவர் நினைத்துப் பார்க்கவில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்திருந்தார். கோவைகள் காணாமல் போய்விட்டதாக வழக்குத் தொடுநர்கள் நீதிபதிகளுக்கு கூறுகின்ற வழக்குகளையும் சேர்த்துப் பார்த்தால் மேற்படி வீதம் நான்கை விடவும் குறைவானதாகக் கூட இருக்கலாம். அரசியல் தொடர்புடைய பேர்வழிகள் விசாரிக்கப்படுவதோ அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதோ இல்லை என்பது படுமோசமானதொரு நிலைவரமாகும். அவர்கள் தண்டனை பெறுவதென்பதை நாம் எவ்வாறு நினைத்துப் பார்க்க முடியும். எந்த அரசியல் கூட்டணி அதிகாரத்தில் இருந்தாலும் இதுதான் நிலை. பரஸ்பரம் முதுகைச் சொறிகின்ற இந்த விளையாட்டுக்கு முடிவொன்றைக் கட்டுவதென்பது மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று.

பரபரப்பான முறையில் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றனவே தவிர, உருப்படியாக காரியம் எதுவும் செய்து முடிக்கப்பட்டதாக இல்லை. ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து அவற்றை கையாளுவதற்கு எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் பற்றி தெளிவானதும் முரண்பாடற்றதுமான தகவல்கள் வெளிவருவதாக இல்லை. வெவ்வேறு நேரங்களில் வித்தியாசமான அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. இலஞ்ச ஆணைக்குழுவை மாற்றியமைப்பது, ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமிப்பது, ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு புதிய செயலகம் ஒன்றை அமைப்பது என்று ஒரு நாளைக்கு ஒரு அறிவிப்பு வந்த வண்ணமிருக்கிறது. விசாரணைகளை நடத்தி குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு போதிய வளங்கள் தேவைப்படுகின்ற அதே வேளை, குற்றஞ்சட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கைத் தொடுத்து நீதி விசாரணையை நடத்தும் பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் நீதித்துறைக்குமுரியதாகும். ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளைக் கையாளுவதில் வழக்குத் தொடுநர்களும் நீதிபதிகளும் சுதந்திரமாகச் செயற்படுவதை உறுதிசெய்ய வேண்டியது அவசியமானதாகும். அரசியல் ரீதியில் கட்டுப்படுத்தப்படக்கூடிய ஆணைக்குழுக்களை நியமிப்பதைத் தவிர்க்க வேண்டும். வழக்குகளைத் தொடுப்பதன் நோக்கம் அரசியல் பழிவாங்கலாக அன்றி, எதிர்காலத்தில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்தலாகவே இருக்கவேண்டும். வழக்குத் தொடுப்பதன் மூலம் மாத்திரம் ஊழலை எதிர்த்துப் போராட முடியாது. ஊழலைத் தடுப்பதற்கு ஒழுங்கு முறையான தடுப்புகளும் சமநிலைப்படுத்தல்களும் (Checks and Balances) மிகவும் முக்கியமானவையாகும்.

எதேச்சாதிகாரத்துக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் எதிராக ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் பெற்ற வெற்றியை பாதுகாப்பதற்கு புதிய அரசாங்கம் மிகுந்த ஜாக்கிரதையுடன் செயற்பட வேண்டும். இதுவே நுகேகொடை பேரணியிலிருந்து படிக்கக் கூடியதாக இருக்கும் பயனுறுதியுடைய ஒரு பாடமாகும். ஜனவரியில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் விசேட நோக்கத்துக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் விக்கிரமசிங்கவும் அவர்கள் இருவருக்கும் கூட்டாக பெரும்பான்மை ஆதரவு இருக்கின்ற தற்போதைய பாராளுமன்றத்துடன் இடைவிடாமல் பணியாற்றுவதன் மூலம் மாத்திரமே அந்த வெற்றியைக் காப்பாற்ற முடியும். இந்த பாராளுமன்றத்தை அரசியல் மாறுதல் காலகட்டத்துக்கான ஒருஅமைப்பாக அவர்கள் பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு பாராளுமன்றம் முதற் தடவையாகக் கூடியபோது புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை ஜனாதிபதி நிகழ்த்தாமல் விட்டது வழக்கத்துக்குப் புறம்பான ஒன்று மாத்திரமல்ல, குறிப்பிடத்தக்க ஒரு குறைபாடுமாகும். ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையுடன் புதிய அரசாங்கம் அதன் பதவிக்காலத்தையும் ஆணையையும் தொடங்கியிருக்க வேண்டும். அரசியலமைப்பு ரீதியாக கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய இந்தக் கடமை ராஜபக்ஷ ஆட்சிக் காலகட்டத்தில் அலட்சியப்படுத்தப்பட்டிருந்தது. காலங்காலமாக இருந்துவருகின்ற இந்த மரபை புதிய அரசாங்கம் அதன் 100 நாள் வேலைத்திட்டத்தின் இடைநடுவில் அதன் செயற்பாடுகளின் நிலைவரத்தையும் மைத்திரிபாலவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளையும் விளக்கிக் கூறுவதற்கு பயன்படுத்தலாம்.

முன்னைய ஜனாதிபதிகளில் எந்தவொருவரையும் போலன்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்விக்கிடமின்றிய ஜனநாயக நியாயப்பாட்டையும் தற்போதைய பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களினதும் ஐயத்துக்கிடமின்றிய முழுமையான சுயாதீனமான ஆதரவையும் கொண்டிருக்கிறார். அதற்குக் காரணம் தற்போதைய வடிவிலான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டு வருவதில் அவருக்கு உள்ளுணர்வாக இருக்கும் பற்றுறுதியும் அந்த நோக்கத்துக்கு பாராளுமன்றத்திற்குள்ளும் பரந்தளவில் நாட்டிலும் இருக்கின்ற ஆதரவுமேயாகும். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சொந்த அதிகாரங்களின் ஒழிப்பு உட்பட தற்போது முன்னெடுக்கப்படுகின்ற மாற்றங்களுக்கு தலைமைதாங்குபவராக நோக்கப்படவேண்டும். அத்துடன் ஏனைய மாற்றங்கள் சகலதும் நடைமுறைப்படுத்தப்படும் வரை (ஒரு தடைக்காப்பு நடவடிக்கையாக) தனது அதிகாரங்களை அவர் தன்வசம் வைத்திருக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்




என்.சத்தியமூர்த்தி

பதவியேற்ற பின் தனது முதல் வெளிநாட்டு பயணமாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா இந்தியாவுக்கு விஜயம் செய்தமை எதிர்பாராத விடயம் அல்ல. அவருக்கு முன் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீராவும் முதலில் இந்தியாவிற்கே விஜயம் செய்தார். அதுவும் ஆச்சரியப்படத்தக்க விடயம் அல்ல. அவர்களுக்கு முன்னர் அந்தப் பதவிகளை வகித்தவர்களும் சரி, நாட்டின் பிரதமராக பதவியேற்றவர்களும் சரி, அண்டை நாடான இந்தியாவிற்கே முதலில் அரசு முறை பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களில் சிலர், இந்தியாவில் உள்ள பௌத்த-இந்து கோவில்களுக்கு சென்று வழிபட்டு வந்துள்ளார்கள். சிலர் அவ்வாறு செய்வதில்லை. அது மட்டுமே வித்தியாசமான விடயம்.

ஆனால், இவற்றிற்கு அப்பாற்பட்டு, ஜனாதிபதி சிறிசேனாவின் இந்திய பயணம் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயம். கடந்த முப்பது ஆண்டுகளாக, இலங்கை அரசுத் தலைமையுடன் உலகின் எந்த மூலையிலும் கலந்துரையாடியுள்ள இந்திய

# இனப்பிரச்சினை; இந்தியாவின் தற்போதைய மௌனத்தின் அர்த்தம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைவர்கள், இனப்பிரச்சினை குறித்தே முக்கியமாக பேசிவந்துள்ளார்கள். அதிலும் குறிப்பாக, பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு குறித்தும் அவர்கள் பேசி வந்துள்ளார்கள். அந்த சந்திப்புகள் குறித்த இந்திய அரசின் அறிக்கைகள் இதனை அடிக்கோடிட்டுக் காட்டி வந்துள்ளன.

ஆனால், புதுடில்லி சென்றுவந்த ஜனாதிபதி சிறிசேனாவின் அனுபவம் வேறுமாதிரியாக இருந்தது. அவரது எதிர்பார்ப்புகள் எதுவாக இருந்தாலும், அவர் புது டில்லியில் எதிர்கொண்டது, முற்றிலும் எதிர்பாராததாகவே இருந்தது எனலாம். காரணம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகட்டும், அல்லது, ஜனாதிபதி சிறிசேனாவை சந்தித்த பிற தலைவர்கள் ஆகட்டும், இனப்பிரச்சினை குறித்தோ, பதின்மூன்றாவது திருத்தம் குறித்தோ பேசவில்லை என்று அவருடன் இலங்கை திரும்பிய அமைச்சர் ராஜீத சேனரத்ன பின்னர் தெளிவுபடுத்தினார்.

சிறிசேனா-மோடி சந்திப்பிற்குப் பின்னர் இரு தலைவர்களும் புது டில்லியில் சர்வதேச ஊடகவியலாளர்களைச் சந்தித்து சுருக்கமான அறிக்கைகளை படித்தனர். அதில், சிறிசேனா என்றல்ல, மோடியும் கூட இனப்பிரச்சினை மற்றும் பதின்மூன்றாவது திருத்தம் குறித்து பிரஸ்தாபிக்கவே இல்லை என்பதே உண்மை. அன்று மாலை, சிறிசேனாவை கௌரவித்து இந்திய ஜனாதிபதி மாளிகையில் விருந்துபசாரம் நடந்தது. அதில் வரவேற்று பேசிய இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் அறிக்கையிலும் இனப்பிரச்சினை குறித்த எந்த வசனமும் இடம் பெறவில்லை.

இந்தியா இனப் பிரச்சினை குறித்து ஜனாதிபதி சிறிசேனாவிடம் பேச்சு எடுக்கவில்லை என்பது இலங்கை ஊடகங்களில் அதிகமாக கூறப்படாத செய்தி. ஆனால், அதுவே உண்மையும் கூட. அதற்குக் காரணம் என்ன? அதனால் ஏற்படும் மாற்றங்கள் என்ன? குறிப்பாக, இலங்கைத் தமிழர் தலைமையின் எதிர்பார்ப்புகளில் இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் தலைவரை உடனடியாகவே முடிவு தெரியாத பிரச்சினையில் மாட்டிவிடுவது இராஜரீக ரீதியில் மரியாதைக்குரிய விடயம் அல்ல என்பது இந்தியாவின் ஒரு கருத்தாக இருக்கலாம். அதே சமயம், இலங்கையின் உள்நாட்டு பிரச்சினையில் அதிகப்படியாக தலையிடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் இந்தியாவின் புதிய அரசியல் தலைமை கருதியிருக்கலாம்.

இந்தியாவில் புதிய அரசு அமைந்த பின்னர், இலங்கையிலும் புதிய ஜனாதிபதியும் பிரதமரும் பதவியேற்ற பின்னர், இதற்கான முதல் அடியை இந்தியா எடுத்து வைத்துள்ளது என்று கூட கருத இடமிருக்கிறது. அதற்காக, இனப் பிரச்சினை குறித்து இந்தியா கவலைப்படவில்லை என்றல்ல பொருள். இலங்கையில் ஆட்சி மாற்றம் வந்த பின்னர், அந்தக் கவலைகள் குறைந்துள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றே இந்தியா கருத வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில், சிறிசேனாவின் தலைமையிலான ஆட்சி மாற்றத்திற்கு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதீத ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. வடக்கு-கிழக்கு தமிழர்கள் மட்டுமல்லாது, தமிழ் மொழி பேசும், முஸ்லிம் சமுதாயமும், மலையகத் தமிழர்களும் கூட சிறிசேனாவை ஆதரித்தது தேர்தல் முடிவுகளில் தெளிவாகத் தெரிந்தது. இது இனப் பிரச்சினை குறித்த அவரது 'அறியாத கொள்கைக்கு' தமிழ் பேசும் மக்களின் ஆதரவு என்றே கொள்ள வேண்டும்.

தேர்தல் பேச்சுவார்த்தைகளில், கூட்டமைப்பு இனப்பிரச்சினை விடயங்களில் அதிக அவசரம் காட்டவில்லை. இன்னும் சொல்லப்போனால், பாராளுமன்ற தேர்தல் முடிந்தே இனப் பிரச்சினைக்கான தீர்வையோ, அதற்கான அரசு முஸ்தீபுகளையோ எதிர்பார்க்க முடியும் என்றே கூட்டமைப்புத் தலைமை கருதி செயல்பட்டதாகவே எண்ண இடமிருக்கிறது. அவ்வாறு, தமிழ் மக்களே புதிய அரசிற்கு அதிக கால அவகாசம் கொடுத்திருக்கும் போது, இந்தியா மட்டும் இனப் பிரச்சினை குறித்து அவசரம் காட்டுதல் தவறான முன்னுதாரணமாகவே அமையலாம்.

## 'இனப்படுகொலை' தீர்மானம்

இலங்கை அரசு மற்றும் அரசியல் தலைமைகளைப் போலவே, இந்திய அரசும் ஆட்சிமாற்றம் முடிந்த கையோடு, வட மாகாணசபை, 'இனப் படுகொலை' குறித்த ஓர் அடிப்படைவாத தீர்மானத்தை இயற்றும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தத் தீர்மானத்தின் சரித்திரமும், சாராம்சமும் இலங்கையின் புதிய அரசிற்கு அதீத நெருக்கடி கொடுக்கும் முகமாகவே அமைந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தத் தீர்மானம், கூட்டமைப்பு மற்றும் தமிழர் சமூகத்தினிடையே இன்னமும் களையப்படாத உள்கட்சி பிரச்சினைகளுக்கும், பிரிவினைகளுக்கும், போர் முடிந்த காலகட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 'கொள்கைச் சாயம்' பூசிவிட்டது என்று கூட சொல்லலாம். இன்னமும் சொல்லப் போனால், கூட்டமைப்பிற்கு அப்பாலும் சென்று, 'தமிழ்த் தேசிய' தலைமைக்கான போட்டி என்று கூட இதனை சொல்லலாம்.

இனப் பிரச்சினை குறித்த அரசுடனான கலந்துரையாடல்களும், அதற்கான தீர்க்க முடிவும், சிறிசேனாவின் 100-நாள் செயல் திட்டத்தில் இடம் பெறாது என்று கூட்டமைப்புத் தலைமை முதலிலேயே தெளிவுபடுத்திவிட்டது. இடைப்பட்ட காலத்தில், 'பொறுப்புக்கூறல்' பிரச்சினையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சர்வதேச விசாரணையின் அறிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது என்பதும் அப்போது தெரிந்தே இருந்தது. அந்த அறிக்கை குறித்த புதிய அரசின் முடிவு எதுவாக இருக்க முடியும் என்று யூகித்து அறிவது சிரமமான விடயமல்ல.

இந்தப்பின்னணியில், வட மாகாண சபையின் 'இனப் படுகொலை' தீர்மானத்திற்கான நியாயங்கள் அடிபட்டுப் போய்விடுகின்றன. மாறாக, புதிய அரசை குறைகூற வேண்டும் என்ற கருத்திலேயே இந்தத் தீர்மானம் இயற்றப்பட்டதாகக் கூட கருதுவதற்கு இடமிருக்கிறது. அவ்வாறானால், இந்த அரசிடமிருந்து, 'தமிழ்த் தேசியவாதிகள்' எதிர்பார்ப்பது தான் என்ன?

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் போலவே, ஆளும் கூட்டணியில் உள்ள அடிப்படை கருத்து வேற்றுமை மற்றும் தனி மனிதர்களின் பிரச்சினைகளை ஊதி பெரிதாக்கி, அதில் குளிர்காய அவர்கள் இன்னமும் விரும்புகிறார்களா? அல்லது, மாறிவிட்ட தேசிய அரசியல் சூழலில் இனப் பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வு வரும், வரவேண்டும் என்று அவர்கள் உண்மையிலேயே எதிர்பார்க்கிறார்களா?

'இனப் பிரச்சினை விடயத்தில், சிங்கள அரசியல் தலைமைகள், தமிழர்களுக்கு நீதி வழங்காது' என்பன போன்ற கருத்துகள் மீண்டும் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படுகின்றன. இது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும், ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் தோன்றிய கருத்து அல்லவே இது. அவ்வாறானால், இப்போது திடீரென்று இந்தப் புதிய தீர்மானம் எதற்கு? அவ்வாறானால், இந்த அவசரம் இப்போது எதற்கு?

மற்றப்படி, புதிய அரசு பதவியேற்ற கையோடு தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை உடனடியாக விலக்கிக் கொள்வார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. அவ்வாறு அவர்கள் எதிர்பார்த்து, அதனால் ஏமாற்றம் அடைந்திருந்தால், அது அவர்களது அறிவீனத்தையே காட்டும். அல்லது, இது அவர்களது உள்நோக்கத்திற்கான ஓர் எடுத்துக்காட்டு.

வட மாகாண சபை சுட்டிக்காட்டிய, சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலங்களில் சர்வதேச சமூகம், இனப்பிரச்சினையை இந்த அளவிற்கு தீர்க்கமாக கணித்திருக்கவில்லை. அமெரிக்காவில் 9-11 தீவிரவாத தாக்குதல் அரங்கேறியிராவிட்டால், அவர்கள் இன்னமும் இனப் பிரச்சினை குறித்து அதிகப்படியான அக்கறை காட்டியிருக்க மாட்டார்கள். என்ன, 9-11 தாக்குதல் நடந்தேறிய காலம் தொடங்கி, மேலை நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களது அரசியல் நடவடிக்கைகளை முடுக்கி விட்டார்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம்.

தற்போதைய வட மாகாணசபை தீர்மானம், இலங்கையில் நல்லாட்சி அமைந்தாலும், அதனை ஏற்றுக் கொண்டு செயல்படும் மனப்பாங்கு தமிழர் தலைமைகளுக்கு இல்லவே இல்லை என்ற செய்தியையே பரப்புவதாக உள்ளது. இந்தியாவிலும், மோடி அரசு பதவியேற்ற பின்னரும், இனப் பிரச்சினை குறித்து இலங்கையில் முந்தைய ராஜபக்ஷ தலைமை மீதிருந்த சந்தேகங்கள் தொடர்ந்தே இருந்தன.

அந்த நிலை தற்போது மாறி உள்ள சூழ்நிலையில், வட மாகாண சபை தீர்மானம், தமிழர் தலைமைகளின் தந்திரோபாயங்களை தவறான கோணத்தில், தமிழர்-ஆதரவு இந்திய அரசிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டி உள்ளது. இதுவும், இனப் பிரச்சினை குறித்து, சிறிசேனா விஜயத்தின் போது, இந்திய அரசு கருத்துக் கூறாததற்கு ஓர் காரணம் எனலாம்.

**ஆட்சிமாற்றம் ஏற்பட்ட கையோடு வடமாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்மொழிவில் இனப்படுகொலை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று இலங்கை அரசைப் போன்றே இந்திய அரசும் எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தத் தீர்மானத்தின் சரித்திரமும் சாராம்சமும் இலங்கையின் புதிய அரசுக்கு அதீத நெருக்கடி கொடுக்கும் முகமாக அமைந்து என்பதை மறுப்பதற்கில்லை**

### இந்தியா எங்கே?

கடந்த இரண்டு தசாப்தங்களாகவே, இந்திய பெருங்கடல் பிரதேச பிரச்சினைகளில், 'இந்தியா எங்கே?' என்ற நிலைமாறி, 'எங்கே, இந்தியா?' என்ற சூழ்நிலை தோன்றி வந்துள்ளது. அதாவது, குறிப்பிட்ட பிரச்சினைகளில், இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதனை அறிந்து கொள்வதில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டி வந்துள்ளது.

இது, இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில், சீனாவின் வளர்ச்சி குறித்த இந்தியாவின் கவலைகள் குறித்த விடயம் மட்டுமல்ல. கடந்த 60 ஆண்டு காலத்தில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல்-இராணுவ முயற்சிகள் குறிப்பிட்டு பேசும்படியாக அமைந்துள்ளது. இது, பெருங்கடல் பகுதி பிரச்சினைகளில் இந்தியாவின் தலைமை தவிர்க்க முடியாத விடயம் என்ற செய்தியை, சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைத்துள்ளது.

அண்டை நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் குறித்து இந்தியாவிற்கு மட்டுமே ஆழ்ந்த அறிவு இருக்க முடியும் என்ற உண்மையை வேண்டா வெறுப்புடனேயே சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ளது. தங்களது, அவசர பொருளாதார-இராணுவ தேவைகளை இந்தியாவால் மட்டுமே சந்திக்க முடியும் என்ற உண்மையையும் இந்த அண்டை நாடுகள் உணர்ந்து வருகின்றன. இந்தியத் தலைமையை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், இந்தியா தவிர்க்கப்பட முடியாத அண்டை நாடு என்பதனை மட்டுமாவது அந்தந்த நாட்டு தலைமைகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கை அரசு தலைமைகள் என்றல்ல, சர்வதேச சமூகம் மட்டுமல்ல, இந்தியாவையும், கடந்த காலங்களில் தமிழர் தலைமைகள் 'கறிவேப்பிலை' போன்றே பயன்படுத்தி வந்துள்ளன. 'பொறுப்புக்கூறல்' பிரச்சினையில் கூட, அமெரிக்காவின் ஆதரவு இருப்பதாக கூட்டமைப்பு கருதிய இடைப்பட்ட இரண்டாண்டு காலத்தில், இந்தியாவைப் புறக்கணித்தே வந்துள்ளன.

ஆனால், அமெரிக்காவின் எண்ண வோட்டத்தை முழுவதுமாகப் புரிந்து கொண்ட பின்னர், தமிழர் தலைமை, இந்தியாவுடனான உறவை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள முயன்றன எனலாம். அந்த விதத்தில், இனப் பிரச்சினை குறித்த இந்தியாவின் தற்போதைய 'மௌனம்', தமிழர் தலைமைகளுக்கும் தங்களது எதிர்கால திட்டங்கள் குறித்து தீர்க்கமாக ஆலோசித்து முடிவு எடுக்க, நேரம் கொடுத்துள்ளது எனலாம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் மேம்பட்ட நிலைக்கு சென்றிருக்கும்

# இலங்கை - இந்திய உறவுகள்

**சீனாவுடன் நெருங்கிச் செல்வதிலேயே அக்கறை காட்டி வந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட நெருடல் நிலையிலிருந்து இலங்கையுடனான உறவுகளை மீட்டெடுப்பது எவ்வாறு என்று இந்தியா கவலைகொண்டிருந்த வேளையில் இலங்கை மக்களாகவே ராஜபக்ஷவுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்ததால் புதுடில்லியின் காரியம் சுலபமானதாகப் போய்விட்டது.**





## டில்லி டயரி



**எம்.பி.வித்தியாதரன்**

புதுடில்லி இப்போது மிகவும் ஆறுதலடைந்திருக்கிறது போலத் தோன்றுகிறது. அதுவும் குறிப்பாக இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெப்ரவரி 15 தொடக்கம் 18 வரை இந்தியாவுக்கு மேற்கொண்ட வெற்றிகரமான விஜயத்தின் பிறகு. புதுடில்லியில் ஜனாதிபதி சிறிசேனவுக்கு அளிக்கப்பட்ட மாதிரியான வரவேற்பை அயல்நாடுகளின் தலைவர்கள் பெறுவதென்பது அரிது என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லலாம். மனமுவந்த வரவேற்பு. பயனுடைய விஜயம்.

உறவுகளை மேம்படுத்துவதற்கு இந்தியா சிறந்த முயற்சிகளை மேற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையே சுமுகமான சந்திப்புகள் நடைபெற்றிருந்த போதிலும், சீனாவுடன் நெருங்கிச் செல்வதிலேயே அவர் அதிக அக்கறைகாட்டி வந்ததன் காரணத்தினால் மோடி அரசாங்கத்துக்கு அடிக்கடி நெருடல் ஏற்பட்டது. இலங்கையுடனான உறவுகளை எவ்வாறு சீரமைப்பது என்று புதுடில்லி பெரும் கவலை கொண்டிருந்தது.

இலங்கை மக்களாகவே ராஜபக்ஷவுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்று நினைத்ததால் புதுடில்லியின் காரியம் சுலபமானதாகப் போய்விட்டது. இந்தியாவுடன் சிறப்பான உறவுகளை வளர்க்கப் போவதாக உறுதியளித்த சிறிசேனவையே தங்களது புதிய ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்க இலங்கை மக்கள் விரும்பினார்கள். கூடுதலான அளவு க்கு நியாயபூர்வமானவராகவும் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கக்கூடிய ஒருவராகவும் அவரை அந்த மக்கள் நினைக்கிறார்கள்.

எதிர்பார்க்கப்பட்டது போலவே, உலக நாடுகளுடனான தனது ஊடாட்டத்தை (புராதன காலந்தொட்டு உறவுகளைக் கொண்டிருக்கும் பெரியதும் நெருக்கமானதுமான அயல் நாடான) இந்தியாவுக்கு முதலில் விஜயம் செய்ததன் மூலமாக ஜனாதிபதி சிறிசேன ஆரம்பித்தார். ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியும் பிரதமர் மோடியும் இலங்கை ஜனாதிபதியை மிகுந்த ஆர்வத்துடன் மனமுவந்து வரவேற்றார்கள், கடந்த வருடம் மே மாதம் பதவிக்கு வந்தது முதல் மோடி அயல் நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்துவதிலேயே கூடுதல் கவனத்தைச் செலுத்தி வருகிறார். இந்த அணுகுமுறையே அவரின் வெளியுறவுக் கொள்கையில் முக்கியமான அம்சமாகவும் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. ராஜபக்ஷவுடன் மோடி அருமையான சந்திப்புகளை நடத்தியிருந்தார் என்பது எல்லோருக்கும் நினைவிருக்கிறது. முதலில் புதுடில்லியிலும் அடுத்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காகச் சென்ற வேளையில் நியூயோர்க்கிலும் பிறகு பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) உச்சி மகாநாட்டுக்காகச் சென்றவேளை நேபாளத் தலைநகர் காத்மாண்டிலும் இருதலைவர்களும் சந்தித்துக் கொண்டார்கள். ஆனால், அப்போது கூட, எதிர்பார்க்கப்பட்ட வகையிலான ஆதரவை ராஜபக்ஷவிடமிருந்து மோடியினால் பெற முடியவில்லை.

ஆனால், சிறிசேன வித்தியாசமான வராகத் தோன்றுகிறார். அவர் நடைமுறைச் சாத்தியமான வகையில் விவகாரங்களை அணுகக்கூடியவராகவும் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடியவராகவும் திறந்தமனதுடன் நியாயபூர்வமான ஒருவராகவும் இருக்கிறார். இத்தகைய குணாதிசயங்களை மோடி விரும்புகிறார். இதன் காரணத்தினால், சிறிசேனவுடன் அவர் மிகவும் நீண்ட, பயனுறுதியுடைய பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடியதாக இருந்தது. பிரச்சினைகளைவெளிப்படையாக,மனந்திறந்து பேசி தங்களுக்கிடையில் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இரு விடயங்கள் முக்கியமானவை. ஒன்று மிகவும் கூடுதலான முக்கியத்துவமுடையது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவை சீனாவின் இராணுவ வல்லமைக்கு வெளியே வைத்திருக்க வேண்டிய தேவையே அது. இரண்டாவது, பாரபட்சத்துக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியும் சமத்துவமும் நல்வாழ்வும் கிடைக்க வேண்டும் என்பது.

தேசத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவின் உதவியை இலங்கை விரும்பியது. இந்தியாவிடமிருந்து கூடுதல் நிதியுதவியையும் தொழில்நுட்ப உதவியையும் சிறிசேன நாடிநிற்கிறார். தமிழ் நாட்டில் அமைக்கப்படுகின்ற கூடாங்குளம் அணுநிலையம் குறித்து தனது விசனத்தை அவர் வெளிப்படுத்தினார். அந்த அணுநிலையத்தினால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுமென்று மக்கள் அஞ்சுகிறார்கள்.

இந்தப் பிரச்சினைகள் சகலவற்றையும் பொறுத்தவரை மோடியும் சிறிசேனவும் ஒரே மாதிரியான அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதனால், ராஜபக்ஷவுடன் விவகாரங்களைக் கையாளுவதில் உள்ள சிக்கலைப் போலன்றி, பிரச்சினைகளை சுலபமாகத் தீர்க்கக்கூடியதாக இருந்தது. சீனா என்ற சீட்டை ராஜபக்ஷ இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்த முயற்சித்ததுடன், தமிழ் மக்களுக்கு உதவுவதற்கும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அவர் தயாராயிருக்கவில்லை.

டில்லியில் ஹைதராபாத் இல்லத்தில் மோடிக்கும் சிறிசேனவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இந்தியாவும் இலங்கையும் நான்கு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டன. அணுசக்தி ஒத்துழைப்பு தொடர்பான உடன்ப

**சிவிலியன் நோக்கத்திற்காக அணுசக்தி ஒத்துழைப்பு தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையின் இன்னொரு வெளிப்பாடு என்று பிரதமர் மோடி குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய உடன்படிக்கையொன்றை இலங்கை செய்து கொண்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கை இவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனையவை கலாசாரம், விவசாயம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பானவையாகும். நாலந்தா பல்கலைக்கழகத் திட்டத்தில் இலங்கை பங்கேற்பதற்கு இது வசதி செய்திருக்கிறது. பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கும் இந்தியாவும் இலங்கையும் இணங்கிக் கொண்டிருக்கின்றன.

இருதலைவர்களும் கூட்டாக நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் பிரதமர் மோடி ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையொன்றை வாசித்தார். 'எமது பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ஒத்துழைப்பை விரிவுபடுத்த ஜனாதிபதியும் நானும் இணங்கியிருக்கிறோம். மாலைதீவுடனான முத்தரப்பு ஏற்பாடு உட்பட எமது கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பில் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றத்தையும் நாம் வரவேற்றிருக்கிறோம்' என்று அந்த அறிக்கையில் மோடி கூறினார்.

சிவிலியன் நோக்கத்துக்கான அணுசக்தி ஒத்துழைப்பு தொடர்பான இருதரப்பு உடன்படிக்கை எமக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கையின் இன்னொரு வெளிப்பாடு என்று குறிப்பிட்ட மோடி, இத்தகைய உடன்படிக்கையொன்றை இலங்கை செய்து கொண்டிருப்பது இதுவே முதற்தடவை என்றும் விசேடமாகச் சுட்டிக்காட்டினார். விவசாயம், மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற துறைகளில் உட்பட ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளையும் இது திறந்து விடுகிறது என்று ஜனாதிபதி சிறிசேனவை அருகில் வைத்துக்கொண்டு மோடி கூறினார்.

கைச்சாத்திடப்பட்டிருக்கும் அணுசக்தி உடன்படிக்கை அறிவையும் நிபுணத்துவத்தையும் பரிமாறிக், கொள்வதற்கும் வளங்களை பகிர்ந்து, கொள்வதற்கும் அணுசக்தியை சமாதான வழிமுறைகளில் பயன்படுத்துவதில் ஆற்றல் மேம்பாடு மற்றும் ஆளணிக்கு பயிற்சி அளித்தல் ஆகியவற்றில் ஒத்துழைப்புக்கு வசதி செய்துகொடுக்கிறது.

600 மெகாவாற் ஆற்றல் கொண்ட அணுசக்தி நிலையத்தை அமைப்பதில் இலங்கை ஆர்வம் கொண்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் விளைவாக ஆளணிக்கு பயிற்சியளிப்பதற்கு அப்பால் இந்தியா அணு உலையையும் விநியோகிக்கலாம். இதுவே இலங்கையின் முதலாவது அணுசக்தி உடன்படிக்கை.

ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் இலங்கை அணுசக்தித் திட்டங்கள் தொடர்பில், அதுவும் குறிப்பாக ஜப்பானில் அணு நிலையத்தில் ஏற்பட்ட அனர்த்தத்துக்குப் பிறகு பெரும் முன்னெச்சரிக்கையுணர்வைக் கொண்டதாக விளங்கியது. கூடாங்குளம் அணுசக்தி திட்டம் இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைகிறது என்றும் ராஜபக்ஷ அரசாங்கம் கூறியது. ஆனால், இப்போது கூடாங்குளம் அணு நிலையம் செயற்பட ஆரம்பித்துவிட்டது. இலங்கையின் அபிவிருத்திக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்கள் குறித்து இலங்கைக்கு இது புரிதலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

மோடியைப் பொறுத்தவரை, இந்த உடன்படிக்கை இந்தியாவின் வளையத்திற்குள் இலங்கையைச் சேர்த்துக் கொள்வதற்கு உதவும் என்பதால், சீனாவின் மேலாக மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஏற்பாடாகவே அதை அவர் நோக்குகிறார். புதுடில்லியின் சொந்த புவிசார் அரசியல் நலன்களுக்கு அப்பால், இந்த உடன்படிக்கை வாஷிங்டனின் நலன்களுக்கும் உதவுகிறது. ஆசியாவில் சீனாவுக்கு எதிரான தனது வியூகங்களில் ஒரு பங்காளியாக இந்தியா தீவிரமான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. ஜனவரியில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 'இந்தியாவிலும் பர்மாவிலும் இடம்பெறுகின்ற மாறுதல்களுக்கு உதவுமாறு இந்தியாவைக் கேட்டுக்கொண்டார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான அணுசக்தி உடன்படிக்கை கதிரியக்க கழிவுகள் முகாமைத்துவம், அணு மற்றும் கதிரியக்க அனர்த்தத் தணிவு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவை தொடர்பில் ஒத்துழைப்புக்கும் வசதி செய்யும்.

**நல்லெண்ணமும் அக்கறையும் இருந்தால் தீர்வு காண முடியாத பிரச்சினை எதுவுமே இல்லை என்று கூறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய பிரதமரும் தானும் ஒரேவிதமான விளக்கப்பாட்டை கொண்டிருப்பதால் பிரச்சினைகளைக் கையாள்வதில் எந்த சிக்கலும் எழப்போவதில்லை என்று நம்பிக்கை வெளியிட்டார்**

மீனவர்களின் பிரச்சினைக்கு தானும் சிறிசேனவும் மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பதாக மோடி கூறினார். இந்தப் பிரச்சினை இருதரப்பு மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கிறது. ஆக்கபூர்வமானதும் மனிதாபிமான அடிப்படையிலானதுமான அணுகுமுறையொன்றே இந்த மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அவசியம் என்று இருதலைவர்களும் இணங்கிக் கொண்டனர். இந்திய, இலங்கை மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதை இருநாடுகளும் ஊக்குவிக்கும் என்று இந்தியப் பிரதமர் கூறினார். இருநாடுகளினதும் அரசாங்கங்களினால் செயற்படுத்தப்படக்கூடிய ஒரு தீர்வை இந்த மீனவர் சங்கங்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்று மோடியும் சிறிசேனவும் தீர்மானித்தார்கள்.

ஜனாதிபதி சிறிசேனவின் எளிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய ஊடகங்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

பாதுகாப்பு, பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் மூலமாகவும் ஏனைய வழிமுறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் எதிர்காலத்தில் பலப்படுத்தப்



படும் என்று கூறிய சிறிசேன, இந்தியாவுக்கான தனது முதலாவது விஜயம் மிகவும் பயனுறுதியுடைய விளைவுகளுக்கு வழிவகுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மக்களின் நலன்களே அதிமுன்னுரிமைக்குரியவையாக இருக்கவேண்டுமென்றும் அதன் அடிப்படையிலேயே தீர்வுகள் அமையவேண்டும் என்றும் தனது அரசாங்கமும் மோடி அரசாங்கமும் இணங்கிக் கொண்டதாகவும் ஜனாதிபதி சிறிசேன கூறினார். நாம் வெளிப்படையாக, மனந்திறந்து பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தோம். நல்லெண்ணமும் அக்கறையும் இருந்தால் தீர்வுகாண முடியாத பிரச்சினை எதுவுமேயில்லை என்று நான் நினைக்கிறேன். உறவுகளை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்க முடியும் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. நாமிருவரும் ஒரேவிதமான விளக்கப்பாட்டைக் கொண்டிருப்பதால் பிரச்சினைகளைக் கையாளுவதில் எந்தச் சிக்கலும் எழப்போவதில்லை என்று இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கூடாங்குளம் அணு நிலையம் தொடர்பில் எனது நாட்டில் உள்ள விசனங்களை இந்தியா விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் கூட, இந்த அணு நிலையம் குறித்து மக்களிடையே அச்ச உணர்வு இருக்கிறது. இந்திய அணுசக்தி நிலையங்கள் குறித்து இலங்கையர்களுக்கு இருக்கக்கூடிய அச்சத்தை அகற்றக் கூடியதாக எனது இந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை அமைகிறது என்றும் சிறிசேன மேலும் கூறினார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் மோடிக்கு சிறிசேன அழைப்பு விடுத்தார். ஜனவரியில் சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்த போது தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்த மோடி புதுடில்லிக்கு வருகைதருமாறு அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார். இப்போது சிறிசேனவின் அழைப்பை மோடி ஏற்றுக் கொண்டிருக்கிறார். மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு மோடி மார்ச் 13 கொழும்பு செல்கிறார்.

யாழ்ப்பாணம் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவதிலும் அவர் மிகுந்த அக்கறையாக இருக்கிறார்.

அண்மைக்காலத்தில், குறிப்பாக மன்மோகன் சிங் அரசாங்கத்தினதும் ராஜபக்ஷ அரசாங்கத்தினதும் கடைசிக் கட்டங்களில் பல சந்தர்ப்பங்களில் முறுகல் நிலைக்குள்ளாகியிருந்த இலங்கையுடனான இந்திய உறவுகள் இப்போது மீண்டும் ஒரு மேம்பட்ட நிலைக்குச் சென்றிருக்கின்றன போலத்தோன்றுகிறது. சிறிசேன புதுடில்லிக்கு வந்து சென்ற ஓரிரு வாரங்களில் மோடி கொழும்பு செல்கிறார். எதிர்வரும் நாட்களில் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் உன்னதமான நிலைக்குச் செல்லும் என்பதற்கான அறிகுறியாக இது அமைகிறது எனலாம். சவால்களுக்கு நேர்மையான முறையில் முகங்கொடுத்து, இருதரப்புக்கும் பயனுடையதாக வாய்ப்புகளைப் பயன்படுத்த முடியும் என்பதில் இருநாடுகளினதும் புதிய தலைமைத்துவங்கள் நம்பிக்கை கொண்டு செயற்படுகின்றன.

மோடி மேற்கொள்கின்ற இலங்கை விஜயம் கடந்த 27 வருடங்களில் இந்தியப் பிரதமர் ஒருவர் அந்த நாட்டுக்குச் செய்கின்ற முதன் முதலான விஜயம் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக 1987 ஜூலை பிற்பகுதியில் கொழும்புக்குச் சென்ற ராஜீவ் காந்தியே இறுதியாக இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட கடைசி இந்தியப் பிரதமராவார். ஆனால், அந்த விஜயம் இருதரப்புக்குமே அனர்த்தம் நிறைந்த

இலங்கை வரும் மோடி யாழ்ப்பாண நிலைவரங்களை நேரில் பார்வையிட விரும்புகிறார். முன்னேற்றத்தை காண்பதற்கு கொழும்பு அரசாங்கத்துடன் ஒத்துழைத்து செயற்படுமாறு வடக்கு மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுக்கவும் விரும்புவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக பிறகு மாறியதையே காணக் கூடியதாக இருந்தது. இன்றுவரை அந்தப் பிரச்சினை தீர்வு காணப்ப டாத ஒன்றாகவே நீடித்துவருகிறது.

தேசத்தின் அபிவிருத்திக்காக சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களின தும் நம்பிக்கையை வென்றெடுத்து அரவணைத்து அழைத்துச் செல்ல வே வண்டியிருக்கிறது என்பதை மோடி யும் சிறிசேனவும் நன்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் போலத் தெரி கிறது. தேசத்தின் ஐக்கியத்தினூடாக மாத்திரமே சமாதானம், உறுதிப்பாடு மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை அடைய முடியும் என்பதிலும் அவர் கள் இருவரும் நம்பிக்கை கொண்ட வர்களாக இருக்கிறார்கள். சிறிசேன வும் மோடியும் முன்னோக்கி நகர் வதற்கு தமிழ்- சிங்கள நல்லி ணக்கமும் நீண்ட காலமாக நீடித்த உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட வர்களுக்கான புனர்வாழ்வும் மிக வும் முக்கியமானவை.

இந்த உறுதியான நம்பிக்கை கார ணமாகவே மோடி யாழ்ப்பாணத் துக்கு விஜயம் செய்ய விரும்புகி றார். யாழ்ப்பாணம் நிலைவரங்களை தானே நேரில் பார்வையிட அவர் விரும்புகிறார். முன்னேற்றத்தை காண்பதற்கு மத்திய அரசாங்கத்து டன் ஒத்துழைத்துச் செயற்படுமாறு வடக்கில் உள்ள மக்களுக்கு வேண் டுகோள் விடுக்கவும் மோடி விரும்பு வார். முன்னாள் ஜனாதிபதி ராஜபக் ஷவைப் போலன்றி இந்தியாவின் இந்தக் கருத்துடன் ஜனாதிபதி சிறிசே னவுக்கு எந்தப் பிரச்சினையும் கிடை யாது. உண்மையில் அவர் இக் கருத்தை வரவேற்கவே செய்வார்.

இந்தியாவுக்கும் இலங்கை மத்திய அரசாங்கம் மற்றும் வடமாகாணத் தில் உள்ள தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு நிருவாகம் ஆகியவற்றுக்கும் , இடையிலான ஒத்துழைப்பினால், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு அளப்பரிய பணிகளைச் செய்யக் கூடியதாக இருக்கும். இதை சிறிசேன நன்கறி வார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பானது விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்க ளுடன் தொடர்புபட்ட பிரச்சினைக ளில் மேற்குலக அரசாங்கங்களிடமி ருந்து இலங்கைக்கு வருகின்ற நெருக்குவாரங்களில் இருந்து நிவா ரணம் தேடிக்கொள்ளவும் உதவியாக அமையலாம்.

அமெரிக்காவுடன் இந்தியா மிக வும் நெருக்கமான உறவைக் கொண் டிருக்கிறது என்பதை சிறிசேன அறி வார். பராக் ஒபாமா மற்றும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் -கீ - மூன் உட்பட பெரும்பாலான உல கத் தலைவர்களுடன் கணிசமான செல்வாக்கைச் செலுத்தக்கூடிய தலை வராக மோடி விளங்குகிறார். இந்தி யாவுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதன் மூலமாக தனது நாட்டின் மீதான மேற்குலகின் நெருக்குதல்களில் இருந்து விடுபடக் கூடியதாக இருக்கும் என்று சிறிசேன எதிர்பார்க்கவும் முடியும்.

எவ்வாறெனினும், இலங்கையின் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் மாறு தல் சீனாவுக்கு சிறிது கவலையை ஏற் படுத்தியிருக்கிறது போலத் தோன்று கிறது. இலங்கைத் தீவில் பெருவாரி யான உட்கட்டமைப்பு திட்டங்களில் சீனா கோடிக் கணக்கில் டொலர்களை முதலீடு செய்திருக்கிறது. இலங் கைக்கு சீனா ஆயுத விநியோகங்க ளையும் செய்து வந்திருக்கிறது. ராஜ பக்ஷ ஆட்சியின் கீழ் சீனாவும் இலங்கையும் மிக மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டவையாக இருந்தன. இந்தியாவிடமிருந்து வந்த ஆட்சேபனைகளையும் பொருட்ப டுத்தாமல், கொழும்புத் துறைமுகத் தில் சீனப் போர்க்கப்பல்கள் தரித்து நிற்கவும் ராஜபக்ஷ அரசாங்கம் அனு மதித்தது.

ஆனால், இப்போது இந்தியா வுக்கே முன்னுரிமை என்று சிறிசேன தெளிவாகக் காண்பித்திருக்கிறார். அதனால் சீனா சற்று குழம்பிப்போயி ருக்கிறது என்றாலும் அது தனது பிரதிபலிப்புகளைக் காட்டிக் கொள்வ தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்வதை அவதானிக்கக்கூடிய தாக இருக்கிறது. டில்லியே சிறி சேனவின் முன்னுரிமையாக இருக் கின்ற போதிலும் கூட, சீனாவையும் இந்தியாவையும் ஏக காலத்தில் திருப்திப்படுத்தும் வகையில் களைக் கூத்தாடிபோன்று அவர் செயற்பட வே வண்டியிருக்கலாம்.

புதுடில்லியில் பேச்சுவார்த்தை களை நடத்திய பிறகு ஜனாதிபதி சிறிசேன பீஹார் மாநிலத்தில் உள்ள பௌத்த வழிபாட்டுத் தலமான புத்த காயாவுக்கும் தென்னிந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள திருப்ப திக்கும் சென்று வழிபட்டார். ஜனாதி பதி சிறிசேனவைக் கௌரவித்து டில் லியில் பிரதமர் மோடி அளித்த இரவு விருந்துபசாரத்தில் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியும் கலந்துகொண்ட னர்.

## மோடிக்கு ஏற்பட்ட பின்னடைவு

புதுடில்லியில் பல அரசியல் மாற் றங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக் கின்றன. அவற்றில் மிகவும் முக்கிய மானது. மோடி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டிருக்கும் நிலம் கையகப்படுத்தல் சட்டமூலத்துக்கு எதிராக அண்ணா ஹசாரே ஆரம்பித் திருக்கும் போராட்டமாகும். ஏப்ரில் 5 ஆம் திகதிக்கு முன்னதாக இச்சட்ட மூலத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அல்லாவிட் டாலும், அந்த விடயதானம் தொடர் பில் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப் பட்டகட்டளை காலாவதியாகிவிடும். பாராளுமன்றத்தின் லோக்சபாவிலும் ராஜ்ய சபாவிலும் சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் இதற்கு எதிராக இருக் கின்றன. பாரதிய ஜனதாவின் நேச அணிகளான சிறிசேனை, அகாலிதள் போன்றவை கூட எதிர்க்கின்றன.

டில்லி சட்டசபைத் தேர்தலில் படுமோசமான தோல்வியைச் சந் தித்த கையோடு நிலம் கையகப்படுத் தல் சட்டமூலம் தொடர்பாக ஏற்பட்டி ருக்கின்ற சர்ச்சை பாரதிய ஜனதாவு க்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறது. ஊழலுக்கு எதிரான லோக்பால் சட்ட மூலத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கைவிடுத்து அண்ணா ஹசாரே நடத்திய போராட்டமே மன்மோகன் சிங் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தது என்பது பாரதிய ஜனதாவிற்கு நன்கு தெரியும்.

இப்போது அண்ணா ஹசாரே மீண்டும் போராட்டத்தில் குதித்திருக்கிறார். இடதுசாரிகள் உட்பட பெரும்பாலான எதிர்க்கட்சிகள் அவரை ஆதரிக்கின்றன. இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் கூட அவரை ஆதரிக்கிறது. காங்கிரஸ் ஆட்சியின் போது ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்கான அண்ணா ஹசாரேயின் போராட்டத்தை பாரதிய ஜனதா ஆதரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நெருக்குவாரங்களைக் கொடுக்கும் தந்திரோபாயங்களுக்கு அரசாங்கம் பணிந்து போகாது என்று ஆரம்பத்தில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்த பிரதமர் மோடி இப்போது போக்கை மாற்றிக்கொண்டார். அக்கறையுடனான யோசனைகளை செவிமடுக்க அரசாங்கம் தயாராயிருக்கிறது என்று இப்போது அவர் கூறுகிறார்.

சர்ச்சைக்குரிய இந்த நிலம் கையகப்படுத்தல் சட்டமூலம் 2013 ஆம் ஆண்டு மன்மோகன்சிங் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தின்படி நிலத்தைக் கையகப்படுத்துவதானால் 80 சதவீதமான விவசாயிகளிடமிருந்து இணக்கப்பாட்டைப் பெற வேண்டியது அவசியமானதாகும். இப்போது புதிய அரசாங்கம் இந்த ஏற்பாட்டை தளர்த்த விரும்புகிறது. நிலத்தை கையகப்படுத்துவதில் எதிர்நோக்கப்படுகிற சிக்கல்கள் தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சிக்ளோ கோர்பரேட்டுகளை திருப்திப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இவ்வாறு செய்ய முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டுகின்றன.



பெரும் சோதனைக்குள்ளாகியிருக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்கு ராகுல் காந்தி தேவைப்படுகின்ற நேரத்தில் அவர் இரு வார விடுமுறையில் சென்றிருக்கிறார். ராகுல் எங்கே என்று எல்லோரும் கேட்கிறார்கள். இந்தக் கேள்விக்கு கட்சியிடமிருந்தோ மூத்த தலைவர்களிடமிருந்தோ எந்தப் பதிலும் இல்லை

பெரிய தொழிலதிபர்களுடன் குறிப்பாக அம்பானிகள், அதானிகளுடன் பகிரங்கத்தில் தோன்றுகின்றமையால், மோடி எளிமையான மனிதர் என்ற படிமத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஜனவரியில் பராக் ஒபாமா புதுடில்லி வந்த போது மோடி பத்து இலட்சம் ரூபா பெறுமதியான ஆடையை அணிந்திருந்தார் அல்லவா. அதனாலும் அவர் பற்றிய மதிப்பு மக்கள் மத்தியில் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. சிறுபராயத்தில் தேநீர் விற்பனை செய்ததாகக் கூறிக்கொண்ட பிரதமர் எவ்வாறு இவ்வளவு ஆடம்பரமான ஒரு ஆடையை அணிய முடியும்? சாதாரண மக்கள் எழுப்புகின்ற கேள்வி இது.

டில்லி தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு ஏற்பட்ட தோல்வி, ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் டில்லி முதலமைச்சராக பதவியேற்றமை ஆகியவற்றையடுத்து எதிர்கால அரசியல் நிகழ்வுப் போக்குகள் எவ்வாறு அமையப் போகின்றன என்றே சகலரும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். வெல்லப்பட முடியாதவர் என்ற மோடியின் பிரதிமை இப்போது போய்விட்டது. மோடியும் அவரது சகாக்களும் பெருமுயற்சி எடுத்த போதிலும் கூட, 70 ஆசனங்களைக் கொண்ட டில்லி சட்டசபையில் பாரதிய ஜனதாவினால் வெறுமனே 3 ஆசனங்களையே கைப்பற்ற முடிந்தது.

இத்தகையதொரு சூழ்நிலையில், காங்கிரஸ் கட்சி முன்வந்து பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அரசாங்கத்தின் மீது தாக்குதலைத் தொடுக்க வேண்டுமென்றே சகல கட்சிகளும் எதிர்பார்ப்பது இயற்கையே.

ஆனால், அக்கட்சி பெரிய சோதனைக்குள்ளாகியிருக்கிறது. காங்கிரஸ் தொண்டர்களுக்கு ராகுல் காந்தி தேவைப்படுகின்ற நேரத்தில், கட்சியின் உப தலைவராக இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பயந்து ஓடுகிறார்.

ராகுல் எங்கே என்று எல்லோரும் கேட்கிறார்கள். அவர் இருவார லீவில் சென்று விட்டார். லீவு அனுமதியை காங்கிரஸ் தலைவியான தாயாரே வழங்கியிருக்கிறார். மகன் எங்கே போயிருக்கிறார் என்று யாருக்கும் தெரியவில்லை. இந்தக் கேள்விக்கு கட்சியிடமிருந்தோ, மூத்த தலைவர்களிடமிருந்தோ எந்தப் பதிலும் இல்லை.

மேலும், இதனால், காங்கிரஸுக்குள் இருக்கும் வேறுபாடுகள் பகிரங்கத்துக்கு வரும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கமல்நாத், திக்விஜய் சிங் போன்ற மூத்த தலைவர்கள் கூட, (சோனியா- ராகுல் என்ற) இரு அதிகார மையங்கள் பற்றி கேள்வியெழுப்ப ஆரம்பித்து விட்டார்கள்.

ராகுலைத் தலைவராக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், சோனியா முகாமுக்கு நெருக்கமான தலைவர்கள் இதை எதிர்க்கிறார்கள்.

குழம்பிப் போயிருக்கும் சோனியா ஊடகங்களுக்கு ராகுல் எப்போது காங்கிரஸின் தலைவராக வருவார் என்று கட்சி தெரியப்படுத்தும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

தாயாருக்கும் மகனுக்கும் இடையிலான இந்த அதிகாரப் போட்டி குறித்து மக்கள் வியப்படைந்திருக்கிறார்கள். கட்சியின் தலைமைத்துவத்திலும் செயற்பாட்டு முறையிலும் முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு போதிய அதிகாரங்கள் தனக்கு இல்லை என்று ராகுல் முறையிட்டுக் கொண்டிருக்கிறார். தேர்தல்களில் கட்சி மேலும் தோல்விகளைக் காணும் என்ற அச்சத்தில் சோனியாவும் மூத்த தலைவர்களும் இதை எதிர்க்கிறார்கள்.

ராகுலின் தலைமைத்துவம் இதுவரையில் திருப்தியற்றதாகவே இருக்கிறது. அவரை உப தலைவராக்கிய போதிலும் கூட, கட்சியினால் எந்த வெற்றியையும் சாதிக்க முடியவில்லை. அவரது தலைமைத்துவத்தின் கீழ் தொடர்ச்சியாக கட்சி தோல்விகளையே சந்தித்து வந்திருக்கிறது. டில்லி சட்டசபையிலே காங்கிரஸுக்கு ஒரு உறுப்பினர் கூட இல்லை. லோக்சபாவிலும் அதன் பலம் சுமார் 50 ஆகவே இருக்கிறது.

அத்தகைய சூழ்நிலையில், கட்சிக்கு மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகளே இருக்கின்றன. ராகுலின் தலைமையே தொடருவதா அல்லது புதியவர்களைக் கொண்டுவருவதா? புதியவர்கள் என்றால் அது பிரியங்கா காந்தி அல்லது ஜோதி ரதித்ய சிந்தியா, சச்சின் பைலட் அல்லது அஜய் மாகென் போன்ற இளம் தலைவர்களாகவே இருக்க முடியும். டில்லி தேர்தலில் மாகென் பெரிதாக எதையும் சாதித்துக் காட்டவில்லை.

மக்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய வசீகரமும் கூடுதலான அளவுக்கு அரசியல் அறிவு நுட்பமும் கொண்ட பிரியங்காவையே பல தலைவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், சோனியா அதில் அக்கறை காட்டுவதாக இல்லை. அதற்குக் காரணம் பிரியங்காவின் கணவர் ரொபேர்ட் வதேராவை சோனியாவுக்கு நெருக்கமானவர்கள் அறவே விரும்பவில்லை. எந்தவிதத்தில் நோக்கினாலும், லீவில் சென்றிருக்கும் ராகுலின் செயல் தேசியத் தலைநகரில் பெரிய ஜோக்காக மாறியிருக்கிறது. பகிரங்கமாக அறிவித்து லீவு எடுக்காமல், சத்தம் போடாமலே சுலபமாக எவருக்கும் தெரியாமல் சென்றிருக்கலாம். ■

---

*(05ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தேசிய அரசாங்கமொன்றே அமைக்கப்பட வேண்டும் என்பதே பிரதமரின் நிலைப்பாடாக இருக்கிறது. தேர்தல் முறையில் மாற்றத்தைச் செய்துவிட்டே அடுத்த பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்ற சுதந்திரக்கட்சி அரசியலமைப்புச் சீர்திருத்தங்களையும் தேர்தல் முறை மாற்றத்தையும் ஒரேயடியாகச் செய்வதற்கு 100 நாள் காலவரையறை போதாது என்றால், தேவையானால் மேலும் ஒரு 100 நாட்களுக்கு அந்த வேலைத்திட்டத்தை நீடிப்பதற்கு ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா கூறியிருப்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது.


ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்றே ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி)யும் ஏப்ரல் 23ஆம் திகதியுடன் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று கூறுகிறது. ஆனால், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை அரைகுறையாக மேற்கொள்ளாமல் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கேதுவாக தற்போதைய பாராளுமன்றத்தை அதன் முழுமையான பதவிக்காலம் வரை நீடிக்க அனுமதித்து 2016 ஏப்ரலில் கலைப்பது குறித்து பிரதான அரசியல் கட்சிகள் சிந்திக்க வேண்டுமென்று சில அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்த சிவில் சமூக அமைப்புகள் மத்தியில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்திருக்கின்றன. சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரான மாதுளுவாவே சோபித தேரர் பொது எதிரணியின் வேட்பாளராக தேர்தலில் நின்ற மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக அரசியல் கட்சிகளையும் சிவில் சமூக அமைப்புகளையும் அணிதிரட்டுவதில் முக்கிய பங்காற்றியவர். அவர் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் காணப்படுகின்ற தாமதம் குறித்து சில தினங்களுக்கு முன்னர் விசனம் வெளியிட்டிருக்கிறார்.

ராஜபக்ஷ ஆட்சி தோற்கடிக்கப்பட்ட பிறகு தோன்றிய அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி நல்லாட்சிக்கான செயன்முறைகளை பிரதான அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் என்று நம்பிக்கை வைத்த நாட்டு மக்கள் தங்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சப் போகிறதோ என்று ஏக்கங்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றமுறையில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டுமென்று நெருக்குதலைக் கொடுக்க மக்கள் இயக்கமொன்றைத் தொடங்குவது குறித்து சிவில் சமூக இயக்கங்கள் சிந்திக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரதமர் மோடி சீனாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமா?




குல்திப் நாயர்

சீனாவிடம் காணப்படுகின்ற கர்வத்தனத்துக்கு நூறுபுள்ளிகள் கொடுக்கலாம்...! பெய்ஜிங்கில் உள்ள இந்தியத் தூதுவரை அழைத்து சீனா பிரதமர் நரேந்திரமோடி அருணாச்சலப் பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்டமை தொடர்பான அதன் அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறது. அந்தப் பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதி. சில வருடங்களுக்கு முன்னதாக சீனா பெரும் இராணுவ வல்லமையை அடையும் வரை அந்தப்பிரதேசத்துக்கு ஒருபோதுமே உரிமை கொண்டாடியதுமில்லை.

மோடியின் விஜயம் சீனாவின் ஆட்புல ஒருமைப்பாட்டு உரிமையையும் நலன்களையும் மலினப்படுத்தி விட்டது என்று பெய்ஜிங் எமது தூதுவர் அஷோக் காந்தாவிடம் கூறியிருக்கிறது. அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியல்ல- 'வேறுபட்ட' ஒரு பிராந்தியம் என்றவாறு காண்பிக்கும் நோக்குடன் அந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் சீனாவுக்கு விஜயம் செய்யும் போது அவர்களின் கடவுச்சீட்டுக்களின் பக்கங்களில் விசா முத்திரையைக் குத்தாமல் தனியாக ஒரு பத்திரத்தில் விசாவைக் குத்தி இணைத்துக்கொடுக்கும் நடைமுறையை சிலவருடங்களுக்கு முன்னர் பெய்ஜிங் கடைப்பிடித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அப்போது அந்த அவமதிப்பை புது டில்லி அமைவடக்கமாக தாங்கிக் கொண்டது. இப்போது பிரதமர் மோடி தனது சொந்த நாட்டின் ஒரு பகுதிக்கு விஜயம் செய்ததையடுத்து மீண்டும் சீனா அதே போன்ற அவமதிப்பைச் செய்திருக்கிறது என்றாலும், பெய்ஜிங் அதன் அதிருப்தியை பகிரங்கமாக வெளிப்படுத்தியது இதுவே முதற்தடவையாகும்.

கடந்த காலத்தில், அருணாச்சல பிரதேசத்தை இந்தியாவின் பிராந்தியமாகக் காண்பிக்கும் வரைபடங்களை சீனா தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டது. இதுகாலவரை, அருணாச்சலுக்கும் சீன எல்லைக்கும் இடையிலான சிறியதொரு பிராந்தியம் தொடர்பாகவே இருநாடுகளுக்கும் இடையே தகராறு நிலவிவந்தது. அருணாச்சலின் அந்தஸ்து கேள்விக்குள்ளாக்கப்பட்டது மிக அரிது.

சீன உதவி வெளியுறவு அமைச்சர் லியூஷென்மின் ஊடாக தெரியப்படுத்தப்பட்ட முக்கியமான செய்தி மீண்டும் சீனாவின் கர்வத்தை வெளிக்காட்டியிருக்கிறது. 'மோடியின் விஜயம் சீனாவின் ஆட்புல ஒருமைப்பாடு, உரிமை மற்றும் நலன்களை மலினப்படுத்தியிருக்கிறது. இந்தியத் தரப்பின் இத்தகைய நடவடிக்கை மூலமாக எல்லைப் பிரச்சினை தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையே இருக்கின்ற வேறுபாடுகள் செயற்கையான முறையில் பெருப்பிக்கப்பட்டிருக்கிறது. எல்லைப் பிரச்சினையை உகந்த முறையில் கையாளுவது தொடர்பில் இருதரப்பினருக்குமிடையில் எட்டப்பட்ட கருத்தொருமிப்புக்கும் கோட்பாட்டுக்கும் எதிரானதாக இச்செயல் இருக்கிறது' என்று லியூ ஷென் மின் கூறியிருக்கிறார்.

இதுவரையில் நாட்டினால் பாராட்டக்கூடிய முறையில் உறுதியான நிலைப்பாட்டை புதுடில்லி எடுத்திருக்கிறது. பிரதமர் மீண்டும் அருணாச்சலப் பிரதேசத்துக்கு விஜயம் செய்வார் என்று கூறுமளவுக்கு அது சரியான முறையில் நடந்திருக்கிறது. அடுத்த தடவை எப்போது மோடி அந்தப் பிராந்தியத்துக்குச் செல்வார் என்ற திகதியையும் கூடவே தெரிவித்திருந்தால் சீனாவுக்கு தெளிவான செய்தியைக் கொடுப்பதாக அமைந்திருக்கும்.

பிரதமரின் நிகழ்ச்சிகள் முன்கூட்டியே திட்டமிடப்பட வேண்டியவையாக இருக்கின்றன என்பது உண்மையே. ஆனால், பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அவரின் புறப்பாடு குறித்து தெரியப்படுத்தியிருக்க முடியும். அவ்வாறு செய்திருந்தால் இந்தியாவினால் சீனாவுக்கு விடுக்கப்படும் செய்தி மேலும் தெளிவானதாகவும் உரத்ததாகவும் இருந்திருக்கும்.

**அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதி என்று அங்கீகரிக்க சீனா தயாரில்லாத போது மோடியின் பெய்ஜிங் விஜயத்தினால் என்ன பயன் கிட்டப்போகிறது. அந்தப் பிரதேசம் எமது தவிர்க்க முடியாத பகுதி என்று அங்கீகரிக்காமல் இருப்பதன் மூலம் இந்தியாவுக்கு அவமதிப்பைச் செய்துகொண்டு அதற்கான பிரதிபலனை அனுபவிக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை சீனாவுக்குப் புரியவைக்க இன்னமும் காலம் கடந்து விட வில்லை**

திட்டமிட்டபடி எதிர்வரும் மே மாதத்தில் மோடி சீனாவுக்கு விஜயம் செய்யவேண்டுமா இல்லையா என்று ஒரு விவாதத்தை அரசாங்கம் மாத்திரமல்ல, பாரதிய ஜனதாக் கட்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளவைத்திருக்க வேண்டும். பெய்ஜிங்கின் நடத்தையினால் இந்தியாவுக்கு ஏற்பட்ட எரிச்சலையும் விசனத்தையும் தெரியப்படுத்துவதற்கு இவ்வாறு செய்திருக்கவேண்டும். இந்தியாவை இளக்காரமாக நினைக்க முடியாது என்று சீனாவுக்கு புரியவைக்க வேண்டும். பிரதமரின் விஜயத்தை ரத்துச்செய்யாவிட்டாலும், ஒத்திவைத்திருந்தால் குழப்பநிலைக்கு இந்தியா முகங்கொடுக்க வேண்டியிராது. விஜயத்தை இந்தியா மீள் பரிசீலனை செய்யக்கூடிய அளவுக்கு போதுமான ஆத்திரமூட்டலைச் சீனா செய்திருக்கிறது. அந்த நாட்டின் அகங்காரத்தை எதிர்க்காமல் விடக் கூடாது.

இந்தியாவின் சுயாதிபத்தியத்துடன் தொடர்புடைய பிராந்தியம் பற்றிய விவகாரங்கள் மெத்தனமாக நோக்கப்படலாகாது. ஆட்புல ஒருமைப்பாடு என்பது புதுடில்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையிலான உறவுகளில் தங்கியிருக்கவில்லை என்பதை சீனாவுக்குச் சொல்லி வைப்பதற்கு மிக விரைவில் ஒரு சந்தர்ப்பத்தை மோடி தேடிக்கொள்ள வேண்டும். ஆட்புல ஒருமைப்பாட்டில் தான் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தங்கியிருக்கின்றன என்பதே உண்மைநிலை. ஆட்புல இறைமை (Territorial Sovereignty) தொடர்பான பரஸ்பர உணர்வு பற்றி கருத்தொருமிப்பு இருந்தால் தான் எதிர்கால சீன- இந்திய உறவுகள் மேம்படுவதற்கு வாய்ப்பு இருக்கும். வடகிழக்கில் கணிசமான இந்தியப் பிராந்தியத்தை சீனா ஆக்கிரமித்து வைத்திருக்கிறது.

நம்பிக்கைத் துரோகத்துக்கு இந்தியா இரையாகி வந்திருப்பதன் காரணத்தினால், சீனாவின் ஆக்கிரமிப்பு நோக்கம் பற்றிய புதுடில்லியின் சந்தேகம் மிகவும் நியாயமானதாகும். இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறினார்;

'உலகில் உள்ள நாடுகளுக்கிடையில் மெய்யான சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் எம்மால் காண முடியாவிட்டால், அடுத்த பெரிய காரியம் பரந்தளவில் போர் மூளுவதைத் தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டியதேயாகும். பிறகு என்றாவது ஒருநாள் சமாதானத் தீர்வுகளை எட்டுவதற்கான வாய்ப்பு கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் இந்த முயற்சியை நாம் செய்ய வேண்டும்'.

அந்த நேரத்தில் மோதலைத் தடுக்க கூடிய ஒருவராக நேரு விளங்கினார். அவர் அதைச் செய்துகாட்டினார். உலகில் அதேபோன்றதொரு அந்தஸ்தை மோடி கொண்டிருக்கவில்லை. அதற்கான நோக்கம் அவரிடம் இல்லை. இருந்தும் கூட, புதிய நண்பர் பராக் ஒபாமாவின் உதவியுடன் முரண்நிலையைத் தடுக்கக்கூடிய அந்தஸ்தில் மோடி இருக்கிறார். உலக விவகாரங்களில் மேலாதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்ற பெய்ஜிங்கின் ஆசை ஒன்றும் புதிய விடயமல்ல. எப்போதுமே ஒரு சுல்தானாக இருக்கவிரும்பிய சீனா உலகை அதன் அரசவையாக நடத்த ஆசைப்படுகிறது.

## திபெத்தை அங்கீகரித்தல்

இந்தியாவின் பிராந்தியத்தை சீனா இன்னமும் அதன் காட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது என்று பெய்ஜிங்கில் ஒரு சந்திப்பில் நான்பேச ஆரம்பித்ததுதான் தாமதம் முன்னாள் இராணுவத் தளபதிகள் எந்தளவுக்கு சீற்றமடைந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். 'நாங்கள் 1962 ஆம் ஆண்டு புகட்டிய பாடத்தை நீங்கள் மறந்து விட்டீர்கள்' என்று அவர்கள் கர்வத்தனமாகப் பதிலளித்தார்கள்.

திபெத்தை சீனாவின் ஒரு பகுதியென்று அங்கீகரித்ததன் மூலம் நேரு தவறைச் செய்துவிட்டார். அவ்வாறு அங்கீகரிப்பது பெய்ஜிங்குடனான தனது உறவுகளை வலுப்படுத்தும் என்று அவர் நம்பியிருக்கக்கூடும். ஆனால், நேருவின் தொடர்புகளை அன்றைய சீனப்பிரதமர் சூ என்லாய் தனது நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டார் என்பது உலகிற்குத் தெரியவந்தது. தனது நோக்கம் நிறைவேறியதும் 1962 இல் இந்தியாவைத் தாக்கியதன் மூலம் அவர் தனது உண்மையான முகத்தைக் காட்டிக் கொண்டார்.

சகல வழிகளிலும் நாம் சீனாவுடன் நல்லுறவுகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், எமது பிராந்தியத்தைத் தாரை வார்த்துத்தான் நல்லுறவுகளை வளர்க்க வேண்டுமென்றில்லை. அருணாச்சலப் பிரதேசம் எமது இந்தியாவின் ஒரு பகுதி என்பதை அங்கீகரிக்க சீனா தயாரில்லாத போது மோடியின் விஜயத்தினால் என்ன பயன் கிட்டப்போகிறது? அருணாச்சலப் பிரதேசம் எமது தவிர்க்க முடியாத பகுதி என்று அங்கீகரிக்காமல் இருப்பதன் மூலம் இந்தியாவுக்கு அவமதிப்பைச் செய்து கொண்டு அதற்கான பிரதிபலனை அனுபவிக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை சீனாவுக்குப் புரிய வைக்க இன்னமும் கூட காலம் கடந்துவிடவில்லை.

பிராந்தியத்தில் அமைதி நிலவுவதற்கு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவுகள் முக்கியமானவை. ஆனால், இந்தியா நேர்மை வாய்ந்ததாகச் செயற்பட்டு வந்திருப்பதைப் போன்று சீனாவும் நடந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும். பலம் பொருந்திய நிலையில் இருந்து பேசுவதற்கே பெய்ஜிங் விரும்புகிறது. அத்துடன் இந்தியாவைச் சுற்றி வளைக்கும் அதன் முயற்சிகளையும் காணக்கூடியதாக இருக்கிறது. நேபாளத்துக்கு சீனா தாராளமாக உதவிகளை வழங்கியிருக்கிறது. இலங்கையில் இன்னொரு துறைமுகத்தை நிர்மாணிக்கும் செயல்களிலும் அது இறங்கியிருக்கிறது. மியன்மாரையும் வென்றெடுக்க பெய்ஜிங் முயன்று கொண்டிருக்கிறது.

அயல் நாடுகளுடனான நல்லுறவுகளை ஆட்சேபிக்கின்ற கடைசி நாடாகவே இந்தியா இருக்கும். ஆனால், அந்த உறவுகளை புதுடில்லியை நெருக்குதல்களுக்கு உள்ளாக்குவதற்கான கருவியாகப் பயன்படுத்துவதே உத்தேசமென்றால் அது உள்நோக்கமுடைய காரியமாகும். இது இந்தியா வளர்க்க விரும்புகிற நட்புறவாக இருக்கமுடியாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசியல் களத்தைக் கலக்கும் அதிரடி வியூகங்கள்





டில்லியில் முகாமிட்ட தேசிய முற்போக்குத் திராவிடர் கழக இளைஞரணிச் செயலாளர் சுதீஷ் பா.ஜ.க. தலைவர் அமித்ஷாவை சந்தித்துப் பேசியிருக்கிறார். அத்துடன், விஜய காந்தை முதலமைச்சர் வேட்பாளராக பா.ஜ.க. அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அமித்ஷாவிடம் முன்வைத்து விட்டு திரும்பியிருக்கிறார் சுதீஷ் என்று தகவல்கள் சிறகடித்துப் பறக்கின்றன. அவரே கூட அந்தக் கருத்தை பிரதிபலிக்கும் வகையில் பேட்டி கொடுத்திருக்கிறார். சுதீஷ்- அமித்ஷா சந்திப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு உருவான பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தமிழகத்தில் இப்போது எஞ்சியிருப்பது தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மட்டும்தான். அவரும் கூட அக்கட்சியுடன் எண்ணெயும் தண்ணீரும் போல்தான் சேர்ந்திருக்கிறார். பிரதமரின் பதவியேற்பு நிகழ்ச்சியில் விஜயகாந்த், மனைவி பிரேமலதா ஆகியோர் கலந்து கொண்டது மட்டுமே பா.ஜ.க.- தே.மு.தி.க உறவில் மகிழ்ச்சிகரமான காலகட்டம். அதற்குப் பிறகு இரு கட்சிகளுக்கும் அவ்வளவாக உறவில் முன்னேற்றம் இல்லை. சமீபத்தில் நடைபெற்ற திருவரங்கம் இடைத் தேர்தலில் கூட பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்திரராஜன் விஜயகாந்தை சந்தித்து பிரசாரத்திற்கு வருமாறு அழைத்தார். ஆனால் விஜய காந்த்தோ, அவரது மனைவி பிரேமலதாவோ கடைசி வரை தேர்தல் பிரசாரத்திற்குப் போகவில்லை. அதன் விளைவாக பா.ஜ.க. 5000 வாக்குகளை திருவரங்கம் தொகுதியில் வாங்குவதற்கு குட்டிக்கரணம் அடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

திருவரங்கம் இடைத்தேர்தலில் பாரதிய ஜனதா கட்டுப் பணத்தை இழந்த கையோடு தே.மு.தி.க.வின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுதீஷ் டில்லி சென்று அமித்ஷாவை சந்தித்து விஜயகாந்தை முதலமைச்சர் வேட்பாளராக அறிவியுங்கள் என்று வலியுறுத்திவிட்டு வந்தது தமிழகத்தில் இடம்பெறப் போகும் அரசியல் மாற்றத்திற்கான அச்சாரம்



சென்னை மெயில்

முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவரங்கத்தில் பா.ஜ.க. கட்டுப்பணத்தை இழந்த கையோடு தே.மு.தி.க.வின் முக்கிய தலைவர் ஒருவர் டில்லி சென்றதும், பா.ஜ.க. விடம், விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக அறிவியுங்கள் என்று வலியுறுத்தி விட்டு வந்ததும் அடுத்து தமிழகத்தில் நடக்கப்போகும் அரசியல் மாற்றத்திற்கான அச்சாரங்கள். விஜயகாந்தைப் பொறுத்தமட்டில் பா.ஜ.க.வை விட்டு வெளியேறும் நிலை வந்தால், அது என்னால் ஏற்பட்ட நிலைமை அல்ல என்பதை பா.ஜ.க. தலைமைக்கு எடுத்துரைக்க விரும்புகிறார். அதுமட்டுமின்றி சட்டமன்றத் தேர்தலுக்கு ஏறக்குறைய ஒரு வருடமே எஞ்சியிருக்கின்ற நிலையில் அவரும் தன் அடுத்த கட்ட அரசியல் வியூகங்களை வகுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

ஆனால் பா.ஜ.க.வைப் பொறுத்தமட்டில் விஜயகாந்தை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு தயக்கம் காட்டுவதாகவே தெரிகிறது. அவர்கள் பார்வை எல்லாம் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மீது இருக்கிறது. சென்ற நாடாளுமன்றத் தேர்தலின் போதே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வசிக்கும் போயஸ் கார்டன் வட்டாரத்தில் உள்ள ரஜினியின் வீட்டிற்கே சென்றார் நரேந்திரமோடி. அன்றிலிருந்து அவருக்கும், ரஜினிக்கும் ஒரு நெருங்கிய உறவு இலையோடிக் கொண்டிருக்கிறது. ரஜினி முதல்வர் வேட்பாளர் என்று தேர்தல் களத்தில் இறங்கினால் நாம் வெற்றி பெற முடியும் என்று பா.ஜ.க.வினரின் முன்னணித் தலைவர்கள் நினைக்கிறார்கள். குறிப்பாக அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் ஊழல் புகாரில் சிக்கியுள்ள நேரத்தில் 1967 இல் காங்கிரஸை எப்படி தி.மு.க. வீழ்த்தியதோ அதேபோல் 2016இல் அ.தி.மு.க., தி.மு.க.வை வீழ்த்த ரஜினி என்ற ஆயுதம் உதவும் என்று பா.ஜ.க.வின் மேலிடத் தலைவர்கள் கணக்குப் போடுகிறார்கள்.

ரஜினியை முன்னிறுத்தும் அந்த வியூகத்திற்கு விஜயகாந்தும் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து உதவ வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் விஜயகாந்தோ முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கும், ஜெயலலிதாவிற்கும் மாற்று என்று அரசியல் களத்திற்கு வந்தவர். அவர் எப்படி ரஜினியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொண்டு தேர்தலைச் சந்திப்பார் என்ற கேள்வி எழுகிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் தான் இப்போதைய சுதீஷ்- அமித்ஷா சந்திப்பு நடந்தது என்று தே.மு.தி.க. வட்டாரங்கள் கூறுகின்றன. அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்,

# ஸ்டாலினுக்கு கலைஞர் கொடுத்த பிறந்த நாள் பரிசு

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினின் 63ஆவது பிறந்த நாள் மார்ச் 1 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. 'எழுச்சி நாள்' என்று அந்த நிகழ்வு ஒவ்வொரு வருடமும் இனிமேல் கொண்டாடப்படும். அது இந்த முறை 'ஒரே இனம். ஒரே இரத்தம்' என்ற தினமாகக் கொண்டாடப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை பாகுபாடுகள் ஒழிப்பு தினமாக மார்ச் 1ஆம் திகதியைக் கொண்டாடி வருகிறது. அதே தினத்தில் ஸ்டாலின் பிறந்த நாளும் வருவதால், நிறம், மொழி, சாதி, மதம், ஆண், பெண், திருநங்கை, கறுப்பு, சிவப்பு, ஆத்திகர், நாத்திகர் என்ற பாகுபாடு இல்லாத ஒரு சமுதாயத்தை காண உறுதியேற்போம் என்பதுதான் இந்த வருட ஸ்டாலின் பிறந்த நாளின் சிறப்புச் செய்தி.



சென்னையில் அதிகாலையில் கோபாலபுரம் இல்லம் சென்ற மு.க. ஸ்டாலின் தன் தந்தையிடம் பிறந்த நாள் வாழ்த்துப் பெற்றார். பிறகு தன் இல்லத்தில் பிறந்த நாள் கேக் வெட்டினார். அதைத் தொடர்ந்து சென்னை ராயப்பேட்டையில் உள்ளவை.எம்.சி.ஏ. மைதானத்திற்குச் சென்ற ஸ்டாலின் அங்கு தொண்டர்களின் பிறந்த நாள் வாழ்த்தைப் பெற்றுக் கொண்டார். இதில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான குமரி அனந்தன், தமிழ் மாநில காங்கிரஸ் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தலைவரை முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்க பா.ஜ.க. முன் வர வேண்டும். தமிழகத்தில் மோடிக்காக பிரசாரம் செய்ய ரஜினி முன்வராத நிலையில், கிராமங்கள் தோறும் சென்று மோடியை பிரதம ராக்குங்கள் என்று மக்களிடம் மடிப் பிச்சை கேட்டவர் கேப்டன்தான். இப் போது அவரை முதல்வர் வேட்பாள ராக அறிவித்து பிரதமர் மோடி தன் நன்றிக்கடனை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று சென்டிமென்டாகப் பேசினார். அதே நேரத்தில் பா.ஜ.க. வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவரோ, 'விஜயகாந்தின் வாக்கு வங்கி குறைந்து வருகிறது. உதாரணமாக திருவரங்கத்தில் அவர் பிரசாரத்திற்கு வராமல் இருக்கலாம். ஆனால் அவர் கட்சி நிர்வாகிகள் எல் லாம் எங்களுடன் தேர்தல் வேலை செய்தார்கள். அப்படியிருந்தும் தே.மு.தி.க. வாக்குகள் எங்களுக்கு வரவில்லை எங்களுக்கு அந்த வாக் குகள் வரவில்லை. எங்களுக்கு அந்த வாக்குகள் வரவில்லை என்று கூறு வதை விட அவை அ.தி.மு.க.விற்குப் போய் விட்டன என்பதுதான் உண் மை. எதிர்க்கட்சித் தலைவராக விஜய காந்தின் செயல்பாடு பாராட்டும் படியாக இல்லை. அதனால் அவ ருக்கு மக்கள் மவுசு குறைந்து வருகி றது. தன் வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத தலைவ ராக, அல்லது கூட்டணிக் கட்சிக்கு தன் வாக்கு வங்கியை டிரான்ஸ்பர் செய்ய முடியாமல் இருக்கும் விஜய காந்தை நாங்கள் எப்படி முதலமைச் சர் வேட்பாளராக அறிவிக்க முடி யும்?' என்று கேள்வி எழுப்புகிறார். இருவரது வாதத்திலும் நியாயம் இருப்பது போன்று தமிழக அரசிய லில் பா.ஜ.க. மற்றும் தே.மு.தி.க. ஆகிய கட்சிகளின் நிலைமை இருக்கி றது.

தே.மு.தி.க.வின் இந்த அவசர டில்லி நகர்விற்கு என்ன காரணம்? திருவரங்கம் இடைத் தேர்தல் வெற் றிக்குப் பிறகு கூடிய தமிழக சட்டமன் றத்தில் தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்களை பேச விடவில்லை என்ற குற்றச்சாட்டு கிளம்பியிருக்கிறது. நடைபெற்ற விவாதத்தில் அ.தி.மு.க. மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் விளை வாக தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் அவையில் இருந்து

**அ.தி.மு.க.விற்கு பா.ஜ.க. மீது ஆசை தி.மு.க.விற்கோ தே.மு.தி.க. மீது ஆசை. பா.ஜ.க.விற்கு ரஜினி மீது ஆசை. ரஜினிக்கோ கடைசி காலத்தில் அரசி யலில் சிக்காமல் ஒதுங்கி யிருந்தால் என்ன என்ற எண்ணம். இப்படி தமிழக அரசியல் இப்போது திரி சங்கு நிலையில் நிற்கிறது**

வர் ஜி.கே.வாசன் ஆகியோர் வாழ்த் துச் சொன்னது குறிப்பிடத்தக்கது.

பிறந்த நாள் விழாவில் பேசிய ஸ்டாலின், சமத்துவ சமுதாயம், பாகு பாடற்ற சமுதாயம் அமைக்கப் பாடு படுவோம் என்றும், என் வீட்டுக் கத வுகள் எப்போதும் திறந்திருக்கும். உங்கள் கருத்துக்களை கேட்கவும், ஆலோசனைகளை அறியவும் தயா ராக இருக்கிறேன் என்று தி.மு.க. தொண்டர்களிடம் சென்றடையும் விதத்தில் உரையாற்றினார். இந்த விழாவில் கனிமொழியும் கலந்து கொண்டு பிறந்த நாள் வாழ்த்துக் கூறி யது சற்று வித்தியாசமானது. மகளிர் அணிச் செயலாளராக இருக்கும் கனி மொழி இந்த முறை தனியாகவே விழா நடத்தி ஸ்டாலினுக்கு புகழாரம் சூட்டினார். 63 மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கிய நிகழ்ச்சியில் பேசிய அவர், திராவிட இயக்கத்தின் இன்னொரு முகம்- இன்னொரு பாதை- இன்னொரு தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் என்று சற்று பிரத்தியேகமான கருத்தை வெளியிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை வழிநடத்திச் செல்ல வேண்டியவர் ஸ்டாலின் என்பதை இந்த பிறந்த நாள் விழாவிற்கு முதல் நாளிலேயே தி.மு.க. தலைவர் கருணாநிதி அறி வித்துவிட்டார். பிறந்த நாள் நிகழ்ச்சி யையொட்டி சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற் றது. அதில் பேசிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஸ்டாலினை வாழ்த்து கின்ற வகையிலும் அவருக்கும், அவ ரைப் பின்பற்றி நடப்போருக்கும், அவருடைய திராவிட முன்னேற்றக் கழகத்தை அவரோடு சேர்ந்து நடத்து கின்ற வாலிபர்களுக்கும், இளைஞர் பெருமக்களுக்கும்- ஒரு உணர்ச்சிகர மான பிறந்த நாள் என்று பகிரங்கமாக அறிவித்தார். அது மட்டுமின்றி, எனக்கு முன்னால் பேசியவர் குறிப் பிட்டதைப் போல் ஆறாவது முறை யாக நம்முடைய கருணாநிதி முதல மைச்சராக வேண்டுமென்று சொன்னாரே, அந்த ஆசை எனக்கு அல்ல. அந்த விளைவு என்னைப் பிடித்து உந்தித் தள்ளவில்லை. நான் படுகின்ற ஆசையெல்லாம், கொண் டுள்ள விருப்பமெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை கட்டிக்காக்க வேண்டும். கடைசித் தொண்டர் உள்ளவரை இந்தக் கழகத்தை கட்டிக் காக்க வேண்டும் என்று உருக்கமாகப் பேசினார். ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் கருணாநிதி அளித்த பிறந்த நாள் பரிசு என்றே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அனைவரும் கருதுகிறார்கள்.

2016 சட்டமன்றத் தேர்தல் வரப் போகின்ற நிலையில் தி.மு.க. முதல மைச்சர் வேட்பாளராக யாரை நிறுத் தப் போகிறது? என்ற கேள்வி எழுந்துள்ளது. 92 வயதில் உள்ள கலைஞர் கருணாநிதியை முதல்வர் வேட்பாளராக நிறுத்தினால் கட்சி யின் வாக்குகள் அப்படியே வரும். ஆனால் பொதுவான வாக்காளர்கள், இளைஞர்கள் தி.மு.க.விற்கு வாக்க ளிப்பார்களா என்ற கேள்வி பிறந்தி ருக்கிறது. தி.மு.க. முன்னணித் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இந்த கவர்னர் உரை மட்டுமின்றி, பட்ஜெட் கூட்டத் தொடரிலும் கலந்து கொள்ள முடியாத அளவிற்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள். சில எம்.எல்.ஏ.க்கள் மீது பொலிஸில் புகார் செய்யப்பட்டு, அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் ஜாமின் வாங்கியிருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் தே.மு.தி.க. உறுப்பினர்களின் இடைநிறுத்தத்தை நீக்கி அவர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரில் பங்கேற்க வழி வகுக்க வேண்டும் என்று தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார். முதல் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டது போல் செய்திகளில் வந்த இந்த வேண்டுகோள் மறுநாள் நிராகரிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. தி.மு.க. உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்தார்கள். தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் நீக்கத்தைக் கண்டித்து இந்த கவர்னர் உரை கூட்டத் தொடரில் இருமுறை தி.மு.க. வெளிநடப்புச் செய்தது குறிப்பிடத்தக்கது. இதனால் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு முதல் முறையாக தி.மு.க. தங்களுக்காக வெளிநடப்புச் செய்ததற்கு நன்றி தெரிவித்து அறிக்கை விட்டார் விஜயகாந்த். இந்த நன்றி தெரிவிக்கும் அறிக்கையின் பின்னணியும் அமித்ஷாவை டில்லியில் சுதீஷ் சந்தித்ததற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி தங்கள் முதல்வர் வேட்பாளராக அன்புமணியை அறிவித்து விட்டது. வைகோவோ டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அன்னா ஹசாரே போன்ற தலைவர்களைச் சந்தித்துப் பேசுகிறார். அ.தி.மு.க. பற்றிய விமர்சனங்களைக் குறைத்துக் கொண்டுள்ள வைகோ, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் விஜயகாந்த் சட்டசபைக்குப் போகாததும் தவறு என்று அறிக்கை விடுகிறார். ஒரே வேனில் பயணித்து வைகோவிற்காக ஓட்டுக் கேட்ட விஜயகாந்த் வைகோவின் இந்த அறிக்கையில் மிகவும் அதிர்ச்சியடைந்து விட்டார் என்றே தெரிகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அ.தி.மு.க. வுடன் மீண்டும் அணி சேரும் வாய்ப்பு தே.மு.தி.க.விற்கு அறவே இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார் விஜயகாந்த் என்றே தெரிகிறது.

அதனால்தான் கூட்டணி பற்றி வேறு முடிவு எடுக்கும் முன்பு முதலில் பா.ஜ.க. தலைமைக்கு ஒரு கெடு விதித்திருக்கிறார். அதுதான் முதல்வர் வேட்பாளராக தன்னை முன்னிறுத்த வேண்டும் என்பதாகும். இதன் மூலம் விஜயகாந்த் இரு மாதிரியான வியூகங்களை வகுக்கக்கூடும் என்று அரசியல் வட்டாரத்தில் செய்தி அடிபடுகிறது. ஒன்று அவரை முதல்வர் வேட்பாளராக பா.ஜ.க. ஏற்றுக் கொண்டு விட்டால் தமிழகத்தில் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க.விற்கு நான்தான் மாற்று என்ற கோஷத்தை

வர்கள் மட்டுமின்றி, பொதுவான அரசியல் தலைவர்கள் மத்தியிலும் இந்தக் கேள்வி எழுந்திருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் மனதில், ஸ்டாலின் முதல்வர் வேட்பாளர் என்றால் தி.மு.க. வின் வாக்குகளும் வரும். இளைஞர்கள் வாக்கு உள்ளிட்ட பொதுவான வாக்குகளும் வரும் என்ற நம்பிக்கை தி.மு.க. வட்டாரத்தில் நிலவுகிறது. இது போன்ற சூழ்நிலையில் எனக்கு ஆறாவது முறையாக முதலமைச்சராக வேண்டும் என்று ஆசை இல்லை என்று கலைஞர் கருணாநிதி அறிவித்திருப்பது தி.மு.க. வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல். ஆனால் இந்த அறிவிப்பில் அவர் உறுதியாக இருக்கப் போகிறாரா 'என்பதை வைத்தே அடுத்த கட்ட தி.மு.க. வியூகங்கள் வெளிச்சத்திற்கு வரும்.

இப்போதைக்கு ஸ்டாலினின் 63 ஆவது பிறந்த நாளின் போது கலைஞர் கருணாநிதியே முதலமைச்சர் பதவி மீது ஆசை இல்லை என்று அறிவித்திருக்கிறார். கவிஞர் கனிமொழி,



திராவிட இயக்கத்தின் இன்னொரு தலைவர் ஸ்டாலின் என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். ஸ்டாலினுக்குப் போட்டியாக எழுந்த மு.க. அழகிரிக்கு கட்சிக்குள் பிடிப்பு முற்றிலும் தளர்ந்து விட்டது என்ற நிலை உருவாகிவிட்டது. தயாநிதி மாறன் உள்ளிட்டோர் தங்களது வழக்குகளில் பிஸியாக இருக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறார்கள். மொத்தத்தில் மு.க. ஸ்டாலினுக்கு இந்தப் பிறந்த நாள் புதுவிதமான அத்தியாயத்தின் தொடக்க நாள் என்பதே தி.மு.க.வினரின் எண்ணவோட்டமாக இருக்கிறது! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் வைத்து வெற்றி பெற முயற்சிப்பது. ஒருவேளை பா.ஜ.க. அவரது கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை என்றால், தி.மு.க.வுடனான கூட்டணி பற்றி யோசிப்பது. திருவரங்கம் இடைத் தேர்தல் முடிவு தி.மு.க.வின் அடிப்படை வாக்கு வங்கியில் எந்த விதமான சேதாரமும் இல்லை என்ற எண்ணத்தை விஜயகாந்திற்கு கொடுத்திருக்கிறது. அதனால்தான் அவர் தன் எம்.எல்.ஏ.க்கள் இடைநிறுத்தத்திற்கு எதிராக குரல் கொடுத்த தி.மு.க.விற்கு உடனடியாகப் பாராட்டும், நன்றியும் தெரிவித்தார். அதில் அவர் காங்கிரஸுக்கும் சேர்த்து நன்றி தெரிவித்து இருந்தார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ், தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் அடங்கிய கூட்டணிக்கு இது அடித்தளம் அமைக்கும் முயற்சியாக இருக்கலாம். இந்த அணி குறைந்தபட்சம் 40 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை சட்டமன்றத் தேர்தலில் பெற்றுவிட முடியும் என்று அரசியல் பார்வையாளர்கள் திடமாக நம்புகிறார்கள்.

இதைப் புரிந்து கொண்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேறு விதமான அரசியல் வியூகத்தை கடைப்பிடிக்கிறார். சிறைத் தண்டனை பெற்ற பிறகு அரசு நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர் அறிக்கை விடாமல் இருந்தார். கட்சி விடயங்கள், தலைவர்களின் பிறந்த நாள் போன்றவற்றிற்கு மட்டும் அறிக்கை விட்டார். சொத்துக் குவிப்பு வழக்கு மேன்முறையீடு கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்தில் கடைசிக் கட்டத்திற்கு வந்திருக்கிறது. அந்த மேல்முறையீட்டில் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரின் வாதங்களும் நிறைவு பெற்றுவிட்டன. பிறகு அச்சொத்து வழக்கில், சேர்க்கப்பட்டுள்ள கம்பெனிகளின் தரப்பு வாதமும் முடிந்துவிட்டது. இப்போது அரசு வழக்கறிஞர் பவானி சிங் தனது இறுதி வாதத்தை முன் வைக்க கால அவகாசம் கேட்டதைத் தொடர்ந்து மார்ச் 4ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதற்கிடையில் இந்த வழக்கில் பவானி சிங் ஆஜராகக் கூடாது. அவரை நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து உச்சநீதிமன்றத்தில் முறையிட்டுள்ளார் தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன். அந்த வழக்கு பெப்ரவரி 27ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்து மீண்டும் மார்ச் 9ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மத்திய ரயில்வே பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த பட்ஜெட்டிற்கு சில தினங்களுக்கு முன்பு தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தமிழக ரயில்வே திட்டங்களுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஆனால் அக் கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றிக் கொடுக்கவில்லை. ஆனாலும் இந்த ரயில்வே பட்ஜெட் வெளிவந்தவுடன் அதை வரவேற்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கை விட்டுள்ளார். மத்திய அரசை பாராட்டி வெளிவந்திருக்கும் அறிக்கை மத்திய நிதி அமைச்சர் அருண்ஜெட்லி சமீபத்தில் ஜெயலலிதாவை சந்தித்த பிறகு ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றம்! அதுவும் முதலமைச்சர் விட வேண்டிய அறிக்கையை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்திருப்பது அனைவரையும் ஆச்சர்யத்தில் மூழ்க வைத்துள்ளது.

ஆனால் அதுதான் தமிழக அரசியலின் சூட்சுமம் என்று கூறும் அ.தி.மு.க. எம்.பி. ஒருவர், 'ரயில்வே பட்ஜெட்டை அம்மா வரவேற்று இருக்கும் நேரம் நல்ல நேரம். திருவரங்கம் இடைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி அமைக்க முடியாது என்ற உண்மை பா.ஜ.க.விற்கு புரிந்திருக்கும். 2016 சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு இரண்டே வாய்ப்புகள்தான் உள்ளன. ஒன்று தனித்துப் போட்டியிடுவது. அது அக்கட்சியின் இமேஜுக்கு சரிப்பட்டு வராது. இன்னொன்று அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பது. இந்துத்துவா பேச்சுக்களில் மும்முரம் காட்டும் பா.ஜ.க.வுடன் தமிழகத்தில் உள்ள மற்ற கட்சிகள் கூட்டணி வைக்க தயங்கும். அதனால் இப்போதைக்கு பட்ஜெட்டை பாராட்டி வைப்போம். அ.தி.மு.க. வுடன் பா.ஜ.க. நெருக்கமாக வந்தால் பிறகு தேர்தல் நேரத்தில் கூட்டணி பற்றிப் பேசிக் கொள்வோம் என்று எங்கள் அம்மா நினைக்கிறார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது' என்கிறார். இது ஒரு வேளை உண்மையான தோற்றமாக இருக்கலாம் என்பதே அரசியல்பார்வையாளர்களின் கருத்து. ஏனென்றால் மத்தியில் முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற அ.தி.மு.க.வின் 48 எம்.பி.க்கள் (லோக்சபா 37. ராஜ்ய சபை 11) தேவை என்ற நிலை பா.ஜ.க.விற்கு இருக்கிறது. அதே போல் முன்னாள் முதல்வரின் சொந்தப் பிரச்சினைகளுக்கும், சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் மாநில அரசு நிர்வாகத்திற்கும் மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க. வின் தயவு தனக்குத் தேவை என்ற நிலை அ.தி.மு.க.விற்கும் இருக்கிறது.

அ.தி.மு.க.விற்கு பா.ஜ.க. மீது ஆசை. தி.மு.க.விற்கோ தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் மீது ஆசை. பா.ஜ.க.விற்கு ரஜினி மீது ஆசை! ரஜினிக்கோ கடைசி காலத்தில் அரசியலில் சிக்காமல் ஒதுங்கியிருந்தால் என்ன என்ற எண்ணம். இப்படி தமிழக அரசியல் இப்போது திரிசங்கு நிலையில் நிற்கிறது. அதனால் ம.தி.மு.க., கம்யூனிஸ்ட், காங்கிரஸ் போன்ற கட்சிகளும் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றன என்பதே இன்றைய எதார்த்தமான நிலைமை. அதை மாற்றும் சக்தி இரு வழக்குகளுக்கு இப்போதைக்கு இருக்கிறது. ஒன்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீது உள்ள சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கு. இன்னொன்று கனிமொழி, ராஜா ஆகியோர் மீதுள்ள 2-ஜி ஊழல் வழக்கு! இந்த வழக்கின் முடிவுகளுக்காக காத்திருப்பது அரசியல் கட்சிகள் மட்டுமல்ல- தமிழக வாக்காளர்களும்தான்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைதீவு நெருக்கடி

# அரசியல் போராட்டமும் போராட்ட அரசியலும்



என்.சத்தியமூர்த்தி

முகமது நஷீத்

மூன்றாண்டுகளுக்குப்பிறகு, மாலைதீவில் போராட்டம், நீதிமன்ற வழக்குகள் மற்றும் கைது படலங்கள் அரங்கேறி உள்ளன. மாறிவரும் அரசியல் சூழலை, ஜனாதிபதி அப்துல்லா யாமின் தலைமையிலான அரசு சரியாகக் கையாள்வதை பொறுத்தே, நாட்டின் சமகால அரசியல் மற்றும் சமுதாய மாற்றங்களும் முன்னேற்றங்களும் நிகழலாம். ஆனால், பிரச்சினையே, ஆளும் கட்சிகளுக்குச் சரியாகப்படுவது எதுவுமே, எதிர்க்கட்சிகளுக்கு ஏற்புடையது அல்ல. அது போலவே, எதிர்க்கட்சிகள் சரி என்று கூறும் பலவற்றையும் ஆட்சியாளர்களால் ஜீரணித்துக் கொள்ள முடிவதில்லை.

அண்மையில், மாலைதீவு ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத், 'தீவிரவாத' குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அது ஒரு குழப்பமான சூழலை உருவாக்கியது என்றால், அடுத்த தினமே, நீதிமன்றத்தில் அவரை ஆஜர் செய்யும் போது, காவல் துறையினரால் தாக்கப்பட்டார் என்ற செய்தியும் புகைப்படங்களும் உலகளவில் பேசப்பட்டன. இலங்கை, இந்தியா போன்ற அண்டை நாடுகளும், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளும், ஐநா, பொதுநலவாய சங்கம் ஆகிய சர்வதேச அமைப்புகளும் தற்போதைய நிலைமை குறித்து பல்வேறு விதத்தில் கருத்தும் கவலையும் தெரிவித்துள்ளன.

கடந்த 2012 ஆம் ஆண்டின் துவக்கத்தில், நஷீத் பதவியில் இருந்த போது குற்றவியல் நீதிமன்ற தலைமை நீதிபதி அப்துல்லா முகமது-வை சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்ய உத்தரவிட்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. அந்த ஆண்டு பெப்ரவரி மாதம், பதவிமாற்றத்திற்குப் பின்னர், நஷீத் மீது இது குறித்த குற்றவியல் வழக்கும் தொடங்கப்பட்டது. வழக்கில் நஷீத்திற்கு இரண்டு ஆண்டிற்கும் மேலாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால், அடுத்த ஆண்டு நடக்கவிருந்த ஜனாதிபதித் தேர்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் அவரால் போட்டியிட முடியாது என்பதே சட்டம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர், அந்த வழக்கு விசாரணைக்கு முதல் நாள், நஷீத் தலைநகர் மாலேயில் உள்ள இந்தியத் தூதரகத்தில் திடீரென்று உள்ளிருப்புப் போராட்டம் மேற்கொண்டார். சுமார் பத்து தினங்களுக்குப் பின்னர், இந்திய அரசின் அறிவுரைக்கேற்ப, தூதரகத்தில் இருந்து வெறியேறினார். அவருக்கு எதிரான வழக்கும் தற்காலிகமாக முன்னெடுக்கப்படவில்லை. பின்னர் நடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

அண்மையில் அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பு அதனை பின்வாங்கி விடும் என்ற யூகம் எழுந்தது. ஆனால், ஒரு வார இடைவெளிக்குப் பின்னர் அதே வழக்கு, 'தீவிரவாத வழக்காக' உருமாறி, நஷீத் கைது செய்யப்பட்டார். கடந்த 1988-ஆம் ஆண்டு அந்த நாட்டில் பிசுபிசுத்துப் போன 'அரசியல் புரட்சிக்கு' பின்னர் இயற்றப்பட்ட 'தீவிரவாத எதிர்ப்பு' சட்டத்தின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு தரப்பு செய்திகள் கூறுகின்றன.

அரசின் நீதிமன்ற கூற்றின்படி, மீண்டும் வழக்கை எதிர்கொள்ளாமல் நஷீத் தலைமறைவாகி விடுவார் என்ற காரணத்தினாலேயே தான், அவரை கைதுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தனது கைதிற்கு சில வாரங்களுக்கு முன்னதாக துவங்கி, அது குறித்து நஷீத் தொடர்ந்து கவலை தெரிவித்து வந்தார். அது மட்டுமல்ல தான் கைது செய்யப்பட்டால், இந்தியா தன்னை , பாதுகாக்க வேண்டும் என்றும் அவர், அடுத்தடுத்து வலியுறுத்தி வந்தார்.

வழக்கு, விரைவாக முடிக்கப்படும் என்று அதனை விசாரிக்கும் நீதிபதிகளும் அறிவித்துள்ளனர். குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், நஷீத் 10-15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும். தற்போதைய பாதுகாப்பு அமைச்சரும் அப்போதைய இராணுவத் தளபதியுமான முகமது ஜலீல் மற்றும் அப்போதைய மாலே பகுதி இராணுவத் தளபதியும் தற்போதைய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான இப்ராஹீம் டிடி, மற்றும் அப்போதைய இராணுவ அமைச்சரான தோலத் இப்ராஹீம் ஆகியோர் வழக்கின் குற்றவாளிப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## அரசியல் காரணம்?

நஷீதின் கைது படலம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே ஏற்பட்டது என்று அவரது ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். அது போன்றே, தற்போதைய ஜனாதிபதி அப்துல்லா யாமின் தலைமையிலான அரசின் ஜனநாயக விரோதப் போக்கை கண்டித்து நஷீத் குரல் எழுப்பியதும், அதன் அடிப்படையில் எதிர்க்கட்சியினரை ஓர் அணியில் சேர வைத்ததும் மற்றொரு காரணமாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு பிற்பகுதியில், யாமின் அரசு, நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை தடாலடியாக ஏழில் இருந்து ஐந்தாகக் குறைத்தது. அதே வேகத்தில், பாராளுமன்றத்தில் ஆளும் கூட்டணிக்கு உள்ள பெரும்பான்மையின் அடிப்படையில், அன்றைய தலைமை நீதிபதி அகமது பயஸ் மற்றுமொரு நீதிபதி ஆகியோரை பதவிநீக்கம் செய்தனர். முந்தைய ஆண்டு ஜனாதிபதி தேர்தல் குறித்த வழக்குகளில் அவர்கள் இருவரும் எடுத்த நிலைப்பாடே இதற்கு காரணம் என்றும் கூறப்பட்டது.

குழப்பமான அரசியல் சூழ்நிலை மற்றும் தேர்தல் குறித்து பல்வேறு உச்ச நீதிமன்ற வழக்குகள் ஆகியவற்றின் பின்னணியிலேயே ஜனாதிபதி யாமின் பதவியேற்றார். தேர்தல் முடிவுகள் வெளியான உடனேயே தனது புதிய அரசு எந்தவித அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் பின்பற்றாது என்று அவர் தானாகவே முன்வந்து அறிவித்தார். அந்த அறிவிப்பை, அவர் சார்ந்த 'முற்போக்குக் கட்சி' தலைவர் மற்றும் முன்னாள் ஜனாதிபதியுமான கயூம் வரவேற்றார். கயூம், ஜனாதிபதி யாமினின் 'ஒன்றுவிட்ட சகோதரர்' (half Brother) என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப்பின்னணியில், தற்போதைய பிரச்சினைக்கு காரணமாக ஆளும் கட்சி தரப்பில் வேறு ஒரு காரணம் கூறப்படுகிறது. அதன் படி, எப்படியாவது அதிரடியாகவும், உடனடியாகவும் மீண்டும் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து விடவேண்டும் என்ற நஷீதின் அவசரமும் ஆத்திரமுமே நாட்டை இது போன்ற இக்கட்டான சூழலில் மீண்டும் தள்ளி விட்டது என்பது அவர்களது வாதம். அவர்களது தனிப்பட்ட கருத்துகளின் படி, நஷீதின் இந்த எண்ணவோட்டத்தை அறிந்திருந்த காரணத்தினால் மட்டுமே, அரசு சில முன்னெச்சரிக்கை அரசியல் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது.

## இலங்கை முன்னோடி?

யாமின் தரப்பினரின் கூற்றின்படி, இந்த ஆண்டு அண்டை நாடான இலங்கையில் நடந்தேறிய ஜனநாயக ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து, நஷீதும் மாலைதீவில் அது போன்ற அரசியல் மாற்றம் உடனடியாகவே நடைபெற்று விடும் என்று கருதிச் செயல்பட்டார். கடந்த ஆண்டு, இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் அவருக்கும் அவரது கட்சிக்கும் அதிக நம்பிக்கையைக் கொடுத்திருந்தது.

என்றாலும், இலங்கையில் ஆட்சி மாற்றம் அரங்கேறுவதற்கு முன்னரே தடாலடியாக, கடந்த டிசம்பர் மாதம், நஷீதின் ஜனநாயகக் கட்சி, ஜனாதிபதி யாமின் தனது பதவியை விட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தது. அந்தப் பதவியை மற்றொரு எதிர்க்கட்சியான 'குடியரசுக் கட்சி' தலைவர் காஸிம் இப்ரஹிம் வசம் அவர் ஒப்படைக்க வேண்டும் என்ற கட்சியின் கோரிக்கை வினோதமான ஒன்றாக அப்போதே கருதப்பட்டது. இதற்கு காரணமும் உண்டு.

கடந்த 2008-ஆம் ஆண்டு ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்ளப்பட்ட புதிய அரசியல் அமைப்பு சட்டத்தின் கீழ், ஜனாதிபதி பதவி விலகினால், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை ஜனாதிபதியே மீதமுள்ள பதவிக்காலத்தில் பதவி வகிக்கலாம். ஏதோவொரு காரணத்திற்காக இருவருமே பதவியில் இல்லை என்றால், பாராளுமன்ற சபாநாயகர் வசம் ஜனாதிபதிப் பதவி இரண்டு மாத காலத்திற்கு ஒப்படைக்கப்படும். அந்த இரண்டு மாதங்களுக்குள், அவர் புதிய ஜனாதிபதித் தேர்தலை நடத்திவிட வேண்டும். இது தான் அரசியல் சட்டம் கூறும் திட்டம்.

தற்போதைய சூழலில், நஷீதால் முன்நிறுத்தப்பட்ட காஸிம் துணை ஜனாதிபதியும் இல்லை, பாராளுமன்ற சபாநாயகரும் இல்லை. அவ்வாறு காஸிம் ஜனாதிபதி பதவி வகிக்க வேண்டுமென்றால், அவர் சபாநாயகர் ஆக வேண்டும். அதன் பின்னரே, ஜனாதிபதி யாமின் மற்றும் துணை ஜனாதிபதி முகமது ஜமீல் அகமது ஆகியோரை பதவி விலகச் செய்ய வேண்டும். இது பாராளுமன்றம் மூலமாக செய்யப்பட வேண்டும். அல்லது, ஓர் எழுச்சிப் போராட்டத்தினால் செய்யப்பட வேண்டும். இத்தகைய சூழலை எதிர்கொள்ளவே, ஜனாதிபதி யாமின் சில அதிரடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது என்பது அவர் தரப்பினரின் வாதம் எனலாம்.

தனியொரு தலைவராக, நஷீத் மிக அதிக அளவில் மக்களின் செல்வாக்கையும் அவர்களது வாக்குகளையும் தொடர்ந்து பெற்றவர். அவரது ஜனநாயகக் கட்சியே மிகப் பெரிய கட்சி. ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் முதல் இரண்டு சுற்றுகளில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றவரே வெற்றிபெற்றவராக அறிவிக்கப்படுவார். கடந்த 2008 மற்றும் 2013 தேர்தல்களில், காசிம் முறையே 15.5 சதவீதம் மற்றும் 24 சதவீத வாக்குகளைப் பெற்றார். அவரது ஆதரவு வாக்குகளின் காரணமாகவே, இரண்டாவது சுற்றில், முறையே நஷீதும், யாமினும் வெற்றி பெறமுடிந்தது.

இந்த மூன்று தலைவர்களில் இருவர் இப்போதே ஜனாதிபதிப் பதவியில் இருந்தவர்கள். தான் என்றாவது ஒரு நாள், எவ்வாறாகிலும் நாட்டின் ஜனாதிபதியாக வேண்டும் என்பது காஸிமின் நெடுங்காலக் கனவு எனலாம். அவரை எப்படியாவது 'அறுபது நாள்' ஜனாதிபதியாக்கினால், பின்னர் நடைபெறும் தேர்தலில் அவரது ஆதரவுடன் நஷீத் மீண்டும் பதவியை பிடித்து விடலாம் என்பதே ஜனநாயகக் கட்சியின் திட்டம் என்று யாமின் தரப்பினர் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுகின்றனர். அதனால் தான், அவர்கள் தங்களது அரசியல் போராட்டம் துவங்கிய போதே, ஜனாதிபதி யாமின், காஸிமிடம் பதவியை ஒப்படைக்க வேண்டும் என்ற அதிரடிக் கோரிக்கையை முன் வைத்தனர் என்றும் யாமின் தரப்பு கூறுகிறது.

## காஸிமிற்கு வெற்றி!

எது எப்படியோ, காஸிமின் கட்சி, ஆளும் கூட்டணியில் இருந்து பிரிந்து, தற்போது ஜனநாயகக் கட்சியுடன் கை கோர்த்திருக்கிறது. 'அரசியல் சட்டத்தின் பாதுகாப்பு' என்ற பெயரில் அவர்கள் இணைந்திருக்கிறார்கள். நஷீதின் கைது நடவடிக்கைக்கு முன்னரே, அவர்கள் அறிவித்த, ஒருங்கிணைந்த தினசரி போராட்ட பிரசார கூட்டமும் அவர்கள் முன்னர் அறிவித்தபடி, பெப்ரவரி 27ஆம் திகதி நிறைவுற்றுள்ளது. நஷீத் கைது நடவடிக்கை காரணமாகவோ என்னவோ, அந்தப் பிரம்மாண்டக் கூட்டமும் அதிக அளவில் பிரச்சினையோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையோ இல்லாமல் முடிந்துள்ளது.

ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களில் பலரும் கடைசி நாள் போராட்டம் ஜனாதிபதி யாமின் பதவி விலகலில் முடிய வேண்டும் என்ற எண்ணத்துடனே நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்து கூடியிருந்தனர் என்பது உண்மை. தனது கைது நடவடிக்கைக்குப் பிறகு நஷீத், போராட்ட நடவடிக்கைப் பொறுப்புகளை காஸிமிடம் ஒப்படைத்ததாக ஜனநாயகக் கட்சி அறிவித்தது. காஸிமின் அறிவுறுத்தலின்படி, தனது கட்சித் தொண்டர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கடைசிக் கட்டப் போராட்ட சமயத்தில் இலங்கை தலைநகர் கொழும்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த சென்ற எதிர்க்கட்சி குழுவினருக்கு, காஸிம் தலைமை ஏற்றுச் சென்றிருந்தார். கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்களையும் சந்திப்பது அந்தக் குழுவின் திட்டத்தில் அடங்கும். எனவே, காஸிமால் தலைநகர் மாலேயில் நடைபெற்ற உச்சகட்ட போராட்டத்தில் பங்கு பெறமுடியாமல் போய்விட்டது.

ஆனால், போராட்டக்காரர்களுக்கு இலங்கையில் இருந்து விடுத்த செய்தியில், காஸிம் வன்முறையை எதிர்த்து அறிவுறுத்தினார். அன்றைய போராட்டம், மாலை 4-6 மணி வரை மட்டுமே நடைபெறும் என்றும் அன்று, வெள்ளிக் கிழமை, முஸ்லிம் மதத்தினரின் மாலைத் தொழுகை நேரத்தில் அது முடிவடைய வேண்டும் என்றும் அவர் அறிவித்தார். இதனையே போராட்ட களத்தில் தலைமை வகித்த ஜனநாயகக் கட்சி, யின் இரண்டாம் கட்ட தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இதை விட முக்கியமாக, காஸிம் போராட்டக்காரர்களுக்கு ஒரு அறிவிப்பை விடுத்திருந்தார். ஜனாதிபதி யாமின் பதவி விலகவேண்டும் என்பது தங்களது கோரிக்கை இல்லை என்றும், தாங்கள் அன்று சமர்ப்பித்த 13-அம்சக் கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தெளிவு படுத்தினார். போராட்ட துவக்க காலத்தில், ஜனாதிபதி யாமின் தனது பதவியில் காஸிமை அமர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த ஜனநாயகக் கட்சியும் இடைப்பட்ட காலத்தில், அவர் பதவி விலகி புதிய தேர்தலுக்கு வழி விடவேண்டும் என்று கூறியதும் குறிப்பிடத்தக்கது.

முடிவில், ஜனநாயகக் கட்சி தலைமையும் சரி, காஸிம் இப்ராஹிமும் சரி, அடுத்து வரும் 2018ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை குறிவைத்தே காய் நகர்த்தல்களை ஆரம்பித்துள்ளனர். ஜனாதிபதி யாமின் பதவி விலகல் குறித்த கோரிக்கையும் சரி, தற்போதைய போராட்டமும் சரி, வெற்றி அடைந்தால் சரி என்ற வகையிலேயே அவர்கள் திட்டமிட்டு இருந்தனர் எனலாம். மற்றப்படி, இது போன்ற நேரடி போராட்ட திட்டங்கள் மூலம், தங்களது இளம் வயது தொண்டர்கள் சோர்வடைந்திடாமல் பார்த்துக்கொள்வதும் தலைமையின் திட்டமாக இருந்தது எனலாம்.

அந்த வகையில், கடைசி நாள் போராட்டம் முடிந்ததாக தலைமை அறிவித்த பின்னரும் குழுக்களாக நள்ளிரவுவரை போராட்டக்காரர்கள், காவல் துறையினருடன் சிறுசிறு கைகலப்புகளில் ஈடுபட்டனர். அது அவர்களது ஏமாற்றத்தின் அறிகுறி என்று கூட கூறலாம். அந்தக் கைகலப்புச் சம்பவங்களின் காரணமாக சில கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். ஆனால், அவையே பெரிய அளவில் எந்தவித வன்முறையிலும் முடிந்து விடவில்லை என்பது ஆறுதல் அளிக்கும் விடயம்.

காஸிம் இப்ராஹிமை பொறுத்தவரை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டு, எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே செயல்படுபவர். எனவே, ஜனாதிபதி யாமின் தலைமையிலான ஆளும் கூட்டணியில் இருந்து பிரிவதும் இன்றியமையாத விடயம். இந்தச் சூழலில், ஜனநாயகக் கட்சியுடன் கை கோர்த்துச் செயல்பட்டால், அதன் மூலம் 'யாமின் எதிர்ப்பு' கொள்கைக்கு முழுவடிவம் கொடுக்க முடியும்.

அதே சமயம், 'நீதிபதி அப்துல்லா கைது' வழக்கு தீர்ப்பின் அடிப்படையில், நஷீத் தேர்தலில் நிற்க முடியாமல் போகுமேயானால், அப்போது ஜனநாயக கட்சியின் ஆதரவோ, அல்லது அந்தக் கட்சி ஆதரவாளர்களில் ஒரு பகுதியினரின் வாக்குகளோ தனக்கு கிடைக்கலாம் என்று எதிர்பார்த்தும் காஸிம் செயல்படுகிறாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. காரணம், கடந்த 2008ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் வாங்கிய 25 சதவீத வாக்குகளுடன் காஸிமின் 15 சதவீத வாக்குகளும் மற்றொரு வேட்பாளரான ஹஸன் சையீத் பெற்ற 16 சதவீத வாக்குகளும் சேர்ந்தே, நஷீத் இரண்டாம் சுற்றில் வெற்றிபெற முடிந்தது.

அத்துடன் ஹஸன் சையீதின் வாக்குவங்கி நஷீத் வாக்கு வங்கியுடன் இணைந்தது. சையீத் அரசியல் அனாதையாகி, பின்னர் முழு நேர அரசியலை விட்டு விலகுவதாக அறிவித்துவிட்டார். கடந்த 2008ஆம் ஆண்டு, கயூம்-யாமின் எதிர்ப்பு, அதே சமயம், நஷீதிற்கும் ஆதரவு இல்லை என்ற வாக்காளர்களே, தனக்கும், சையீதிற்கும் வாக்களித்தனர் என்பதையும் காஸிம் உணர்ந்திருக்கிறார். அந்த வகையில் ஹஸன் சையீதின் வாக்குவங்கியில் ஒரு பகுதியினரையாவது தனது வசம் திருப்ப முடியுமா, என்பதும் காஸிமின் தற்போதைய கணக்காக இருக்கலாம். இதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

## தெளிவு பிறக்குமா?

நஷீத் கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்த வெளிநாடுகள், மாலைதீவின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் துனியா மாமூன் அறிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கயூமின் மகளான துனியா, பொதுநலவாய அமைப்பின் கருத்துகளுக்கும் கண்டனம் தெரிவித்ததோடு,

(63ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா – சீனா போர்
# உண்மைக்கதை

(கடந்த இதழ்த் தொடர்ச்சி...)

### மூன்று செயற்பாட்டுத் திசைவழிகள்


மூன்று செயற்பாட்டுத் திசைவழிகள் வழங்கப்பட்டன. சீனா முன்னேறுவதைத் தவிர்க்குமாறு லடாக்கில் இராணுவ நிலையங்களை நிறுவுதல்; உத்தரப் பிரதேசத்திற்கானது, அது இப்போது பொருட்டல்ல; இறுதியாக இந்திய முன்னிலை இராணுவ நிலையங்கட்குப் பின்னால், ஆதரவு வழங்குமாறு, மிகுந்த செறிவுடன் படைகளை வைத்திருத்தல், இராணுவத் தலைமையகத்தின் நெறிப்படுத்தல், மூன்றாம் முன்னிபந்தனையைத் தவிர்த்திருந்தது. புலனாய்வுத் திறனாய்வு 'முன் செல்லற் கொள்கை' அரசி



யல் வழியின் சரியானது எனவும் சீனாவை வடக்கிலிருந்து வெளியேற்றுவதே பெருமளவும் இறுதி இலக்காகியிருக்க வேண்டும் எனவும் ஏற்றாலும், இக் கொள்கையை அவ்வேளை நிறைவேற்றும் இராணுவ வலிமை தமக்கிருந்ததா என்பதை ஒரு முக்கிய கேள்வியாக எழுப்பியது.

முப்பத்தாறு புதிய இராணுவ நிலையங்கள் நிறுவப்பட்டன. அதனாற் செயலூக்கம் பெற்ற சீனா, தமது முனைகட்கு நெருக்கமாக, அவற்றினும் வலிய நிலையங்களை நிறுவியது. பல இடங்களில் அவை தமது நிலையங்களை ஏறத்தாழச் சூழ்ந்திருந்தமை 28 நவம்பர் அளவில், பிரதமர் நேரு, நிலைமைகள் இராணுவ நோக்கில் படிப்படியாக நமக்குச் சாதகமாக மாறுவதாகக் கூறினார். மேனனுக்கு நெருக்கமான 'ப்ளிற்ஸ்' 'சஞ்சிகை, இந்தியா' வென்ற பகுதிகளைக் காட்டும்' வரைபடமொன்றையும் வெளியிட்டது.

மேற்குக் கட்டளைப்பிரிவின் தலைவரான லெப்.ஜெனரல் தவுலத் சிங் 'முன் செல்லற் கொள்கையை' மறுத்தார். 'அரசியல் முடிவுகள் இராணுவ வசதிகளின் மீது தங்கியிருக்க வேண்டும்' என வலியுறுத்திய அவர், நமது பிரதேசத்தின் மீது சீனாவின் உரிமை



கோரலை மறுப்பதை இலக்காகக் கொண்ட நமது தற்போதைய கொள்கையைப் புறநிலை யதார்த்தமாக முன்னெடுப்பதை இயலுமாக்கும் இராணுவ ஆயத்தை அடையக் குறுக்கு வழியேதும் இல்லை எனவுஞ் சுட்டிக்காட்டினார். பிரதமரையும் அயலுறவுச் செயலாளரையும் புலனாய்வுச் செயலகப் பணிப்பாளரையும் போல கவுலும், சீனா எதிர்வினையாற்றாது என நம்பினார். கவுலின் பிரதியதிகாரியான மேஜர் ஜெனரல் திலன், 'ஒரு சுற்று வேட்டுக்களைத் தீர்த்தாற் போதும் சீனர்கள் ஓடிவிடுவார்கள் என்று லடாக் அனுபவம் உணர்த்துகிறது' என்று வீம்பு பேசினார்.

### முன்செல்லற் கொள்கை ஏன்?

எவ்வாறு செயற்படுத்துவது என்று கருதாமலே அத்தகைய கொள்கையொன்று எவ்வாறு தோன்றியது என்பதை நாம், முதற்கண், நின்று நிதானித்து வினவவேண்டும். அதன் நோக்கமென்ன? கவுல் அதைப் பின்வருமாறு புலப்படுத்துகிறார். (சீன-இந்திய எல்லைப் பிரச்சினை) பற்றி மக்கள் நடுவே எழுச்சி கண்ட விமர்சனங்களையும் அதேவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது படையினரின் இடர்பாடுகளை யும் அறிந்திருந்த நேரு, மக்களை அமைதிப்படுத்தப், போர் தவிர்த்த ஒரு நடு வழியில் நடவடிக்கையெடு க்க ஆவலாயிருந்தார். அதற்கமைய, 1961இன் இலையுதிர்காலத்தில் அவர் கூட்டிய சந்திப்பில் கிருஷ்ண மேனனும் ஜெனரல் தாபரும் நானும் இருந்தோம். முதலில் அவர் இராணு வப்படமொன்றில் அண்மையில் தமக் கெதிராகச் சீனாவின் இராணுவ உள் ளீடுகளை நோக்கினார். அப்பிரதேசத் தில் அடையாளமாகவேனும் எவரே னும் ஒரு இராணுவ நிலையத்தை நிறு வுவதாயின், அது, அப்பிரதேசத் தில் அவருடைய உரிமையை நிறுவும். ஏனெனில் உடைமைச் சட்டத்தின் பத் தில் ஒன்பது பங்காகும். சீனரு க்கு நிலையங்களை நிறுவ இயலுமாயின் நமக்கேன் இயலாது? தொடர்ந்த கலந் துரையாடலின் ஈற்றில், சீனா இந்தியா வுக்கெதிராகப் போர் தொடுக்காது என்பதால் இராணுவ நிலையங்களை நிறுவும் விடயத்தில் நாம் ஏன் சீனாவு டன் ஒரு சதுரங்க விளையாட்டிலும் மன ஓர்மச்சமரிலும் ஈடுபடலாகாது என்ற முடிவை எட்டியதாக எனக்கு விளங்கியது.

அவர்கள் ஓரிடத்தில் முன்னேறின் நாம் இன்னோரிடத்தில் முன்னேறு வோம். இவ்வாறு நாம் நமது பிரதேச மென நம்புகிற பகுதிகளில் நமது அடையாளமான நிலையங்களை சிலவற்றையேனும் பேணுவோம். நமது தற்காப்பான இந்நடவடிக்கை சீனர்கட்கு எரிச்சலூட்டும், அவ்வ ளவே. எனக்கு விளங்கியளவிற்கு சிலர் கூறும் ‘முன் செல்லற் கொள்கை’ எனும் எல்லைகள் பற்றிய இப்புதிய கொள்கை இவ்வாறே உருவானது.

1961 முடிவில், நாம் லடாக்கிலும் (அசாமிய) வட கிழக்கு எல்லை முகவராண்மைப் (NEFA) பகுதியி லும் இத்தகைய 50 நிலையங்களை நிறுவி, 2000 சதுரமைல் இந்தியப் பிரதேசத்தில் நமது இருப்பின் உரி மையை நிறுவினோம். இந்நிலையங் கள் இருந்த இடங்களில் மக்கள் வாழ வில்லை. எனவே அவை நிருவாக நோக்கிலன்றி, சீனா, அக்ஸய்சின் பகு தியிற் செய்ததை NEFA விலோ லடாக்கிலோ செய்யாமல் உறுதிப்ப டுத்தவே நிறுவப்பட்டன. முக்கிய மாகப் பாராளுமன்றத்தையும் பொது மக்களையும் மகிழ்விக்கவும், ஒரு வேளை சீனர்களை அவர்களுடைய விளையாட்டில் முறியடிக்கவுமே நேரு இக்கொள்கையை வகுத்தார் என நினைக்கிறேன். (பி.எம்.கவுல்: ‘சொல்லாத கதை’ நூல், 1967) சீனர் கள் சும்மா இருந்து வேடிக்கை பார்ப் பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.



கட்டுரையாளர் அப்துல் கபூர் அப்துல் மஜீத் நூரானி (ஏ.ஜி. நூரானி): சமூக வரலாறு, அரசியல் யாப்பு, சட்டம், சர்வதேச உறவுகள், மதம், கலை-இலக்கியம், நூல் திறனாய்வு எனப் பல துறைகளிலும் தகுந்த வரலாற்று ஆதாரங்களுடன் மிகக் கவனமாக எழுதும் இந்திய உயர்நீதிமன்ற வழக்குரைஞரும் வரலாற்றியலாளரும் பல நூல்களின் ஆசிரியருமான ஏ.ஜி. நூரானியின் கட்டுரைகள் Frontline சஞ்சிகையில் - ஏறத் தாழ இதழ் தவறாது - நீண்டகாலமாக வருகின்றன. இன்ன மும், தனது 84ஆவது வயதில், எந்த அரச அடக்குமுறையா யினும் மதத் தீவிரவாதமாயினும் சமூக அநீதியாயினும் கண்டிக்கத் தயங்காது முழுமையான வரலாற்றுப் பின்புலத்து டன் எழுதுவது அவருடைய சிறப்பு.

நூரானியுடைய குறிப்பான கவனிப்பிற்குரிய ஒரு விடயம் சீன - இந்திய எல்லைத் தகராறும் போருமாகும். 1970 அல் லது அதற்குச் சற்று முன்பிருந்தே அவை பற்றி எழுதிவரும் நூரானி பல்வேறு தகவல்களையும் ஒப்பிட்டுத் திறனாய்ந்து, இந்தியா, எவ்வாறு எல்லைப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கும் வாய்ப்புகளைத் தவறவிட்டதெனவும் எல்லை பற் றிப் பேசுவதற்கான சீன முயற்சிகள் நேருவின் பிடிவாதத் தால் எவ்வாறு பயனற்றுப் போய் எல்லை மோதல்கள் எவ் வாறு போராகின எனவும் விளக்கியுள்ளார்.

### பேச்சுவார்த்தை நேருவின் மறுப்பு

முற்சொன்னதற்கும் அப்பால் விட யம் இருந்தது. ஜோ என்லாய் (சௌ எண்-லாய்) 1960 ஏப்ரிலில் புது டில் லிக்கு வரமுன்பே இருதரப்பினருக்கு மிடையே பொது அடிப்படை எது வுமே இல்லையென அறிவித்து விட் டார். மக்மஹொன் எல்லைக் கோட்டை ஏற்பதை உள்ளடக்கிய ஜோ.எல்லாயின் இசைவை அவர் ஏற்கமறுத்தார். ‘இப்பிரதேசத்திலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து அவர்கள் வெளியேறினாலே இப்பிரச்சினை தீரும்' என்று அவர் 20.2.1961இல் பாராளுமன்ற மேலவைக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு பிடிவாதமாய் பேச மறுத்தமை மூலமும் 1954 ஆம் ஆண்டு தேசப்படத்தில்தனது ஒருதலைப்பட்சமான மாற்றங்கள் மூலமும் எவரும் உணரத்தவறும் விடயமான மக்மஹொன் எல்லைக் கோட்டின் நிலையத்தை ஒருதலைப்பட்சமாக மாற்றியமை மூலமும், நேரு தன்னையே ஒரு மூலைக்குள் முடக்கிக்கொண்டார். மக்மஹொன் கோடு மார்ச் 1914 இந்தியா- திபெத் உடன்பாட்டில் எழுத்தில் விவரிக்கப்படாமல் அதற்கான குறிப்புகளுடன் இணை த்த, ஒரு அங்குலத்துக்கு எட்டுமைல் அளவிடையில் வரைந்த வரைபடமொன்றில் தடித்த அலகுப் பேனாவால் சிவப்பு நிறத்தில் வரைந்த ஒரு கோடாகும். அது 1914 ஆம் ஆண்டின் புவிப்படவரைதலின் நிச்சயமின்மைகளைக் கொண்டது. இங்கும் நேரு, ஆணவத்துடன், நம்பவியலாததும் சட்டவிரோதமானதல்லாவிடின் அறமற்றதுமான ஒரு காரியத்தைச் செய்தார்.

'1959 செப்டெம்பரில் நேரு ஒளிவு மறைவின்றி, 'மக்மஹொன் எல்லைக்கோடு சில இடங்களில் ஒரு நல்ல கோடாகக் கருதப்படாததால் அது நம்மால் மாற்றப்பட்டது' என்று பாராளுமன்றத்துக்குத் தெரிவித்தார். 1962 ஜூனில் தோலா இராணுவ நிலையம், மாற்றப்பட்ட கோட்டிற்குள், ஆனால் வரைபடம் காட்டிய எல்லைக்கு வெளியே, நிறுவப்பட்டது. செப்டெம்பர் 8 ஆம் திகதி, சீனப் படைகள் அதன் மீது ஆதிக்கம் செலுத்துமாறு தம்மை நிலைப்படுத்தினர். பொதுசனத்தின் சினத்தின் பயனாக, நேரு அவர்களை வெளியேற்றும்படி ஆணையிட்டார்.

லடாக்கில் கவனயீனத்திற்காக தண்டிக்கப்பட்ட நேரு, நாம் NEFA விற்குக் கூடிய முக்கியம் வழங்கினோம்' என்றார். இப்போது அவர், மக்மஹொன் கோடு மிரட்டலுக்குட்பட்டதாகப் பிழையாகக் கற்பனை செய்தார். அதிகாரபூர்வமான புனைவுகளை ஊட்டப்பெற்ற மக்கள் அன்றும் இன்றும் அதையே நம்பினர். ஆனால், 1959 செப்டெம்பரிலேயே, மக்மஹொன் கோட்டின் சட்டப்படியான செல்லுமை ஒரு புறமிருக்க, அதன் செம்மையான அடையாளப்படுத்தல் என்று இந்தியா கோரியதைச் சீனா மறுத்திருந்தது. அதைப் 'பீக்கிங் றிவியூ' சஞ்சிகையின் 15.9.1959 இதழில் வந்த வரைபடம் உறுதிப்படுத்திற்று.

அறிக்கையின் அதிமுக்கியமான பகுதி, 'தோலா' நிலையத்தை நிறுவியமை பற்றியது. தோலா இராணுவ நிலையம் 1962 ஒக்டோபர் / நவம்பர் பதிப்பிற்கு முந்திய வரைபடங்கள் காட்டிய மக்மஹொன் கோட்டுக்கு வடக்கே நிறுவப்பட்டது. மக்மஹொன் கோட்டைச் சுட்டுமாறு நமது அயல் அலுவல்கள் அமைச்சு சீனர்கட்குக் கொடுத்த பழைய வரைபடமே என நம்பப்படுகிறது. வரைபடங்களிலிருந்த பிழையைத் தெளிவுபடுத்த நாம் முயன்றோம், ஆனால் சீனர்கள் நமது நிலைப்பாட்டை ஏற்கவில்லை எனவும் தெரியவருகிறது''.

இந்நிலையைக் கீழ் மட்டங்களிலிருந்து படையினருக்குத் தெரிவித்திருக்க வேண்டும். அது நடக்கவில்லை. எனவே தோலாவில் இராணுவ நிலையத்தை நிறுவியமை எவ்வளவு பாரதூரமானது என்று கீழ்மட்டத்திலிருந்து படையினருக்கு முறையாக விளங்கியிருக்கவில்லை என அறிக்கை மேலும் கூறுகிறது.

1954 அக்ஸய் சின் பகுதி இந்தியாவினது என்று காட்டுமாறு 1950ஆம் வருடத் தேசப்படத்தை மாற்றுமாறு நேரு ஆணையிட்டார், அதையே அவர் மக்மஹொன் எல்லைக்கோட்டு விடயத்திலுஞ் செய்தார்.

1962 செப்டெம்பர் 12 ஆம் திகதி நடந்த ஒரு சந்திப்பில் இராணுவ ஆணையாளர் (கிழக்கு) லெப்.ஜெனரல் எல்.பி.சேன் 'சின்ஸெமானெயிற்கு மேற்காக மக்மஹொன் கோட்டின் நிலையம் பற்றி அதிகாரிகளின் மனங்களிற் சில ஐயங்களுள்ளன' எனத் தெரிவித்தார். அக் கருத்தைப் பாதிப்பிற்குரிய பிரதேசத்தின் 4ஆம் படைப்பிரிவின் ஆணை அதிகாரி நிரஞ்சன் பிரசாத்தும் பகிர்ந்தார். 'சீனர்கள் நம்முடையதென ஏற்காத ஒரு பகுதியில் ஒரு இராணுவ நிலையத்தை நிறுவுவதைப் பற்றி நாம் நெடுகிலும் கவலையுடனிருந்தோம்'என எல்.பி.சேனிடம் புகழ்பெற்ற பிரிகேடியர் ஜோன் டல்வி நினைவூட்டினார். அதை அவர் 'சர்ச்சைக்குரிய பிரதேசமாகவும் இராணுவ நிலையத்தை எப்போதேனும் வெடிக்கக்கூடிய ஒரு முயற்சி' எனவும் அழைத்தார்.


பேராசிரியர் எச்.கே.பர்பூர்ராஜ் எனும் சர்வதேச மதிப்பிற்குரிய வரலாற்றாசிரியரும், மக்மஹொன் கோட்டுக்கு வடக்காக இந்தியப் படைகள் NEFA பகுதியில் நிலையங்களை நிறுவியதை விரிவாகக் குறிப்பிடுகிறார்.

## வரைபடத்தின் மீதான ஐயங்கள்

அறிக்கையின்படி, தோலா நிலையத்தைத் திட்டமிட்ட போதும் அதன் பின்னரும், 33 ஆம் படைப்பிரிவும் அதன்கீழான அணிவகுப்புகளும் தமக்குக் கிடைத்த வரைபடத்தின் அடிப்படையிலேயே மக்மஹொன் கோட்டைக் கருதிற் செயற்பட்டார். எங்கே இராணுவ நிலையங்களை நிறுவலாம் என்பதைப் பற்றிய 24 பெப்ரவரி 1962 அறிவுறுத்தலுக்கும் 15 ஒகஸ்ட் அறிவுறுத்தலுக்குமிடையே இருந்த முரண்பாடுகளைப் பற்றி, தோலா நிலையம் நிறுவப்பட்ட பின்பு, 33 ஆம் பிரிவு தெளிவுபடுத்தலைக் கோரியது. 1962 செப்டெம்பர் 12 ஆம் திகதிச் சந்திப்பு வரை, வரைபடம் பற்றியோ நிலையங்களை நிறுவுவது பற்றியோ எதுவும் தெளிவாக்கப்படவில்லை. லடாக் நிகழ்வுகளின் பின்னணியில் சீனர்களுடைய நிலையத்தை அண்மியதாக தாக்லா மலைமுகட்டில் ஒரு நிலையத்தை நிறுவுமாறான அயலுறவுச் செயலாளரின் பரிந்துரை, நம்பக்கடினமாயிருந்தது என அறிக்கை குறிப்பிட்டது.

சீனாவை வெளியேற்றுவது பற்றிய வாதப்பிரதிவாதங்களை அறிக்கை முன்வைக்கிறது. சீனாவை வெளியேற்றும் தனது திட்டத்தைக், கவுல், ப்ரேம் பாட்டியாவுக்கு கசிய விட, அவர் அதை டைம்ஸ் ஒப் இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



27.9 1962 இதழில் வெளியிட்டார். நேருவும் முழு நாடும் நாட்டின் கௌர வத்தை 19 ஆம் நூற்றாண்டு முழுவ தும் சர்ச்சைக்குரியதாக இருந்த பிரதே சத்தின் ஒரு சர்ச்சைக்குரிய நிலப் பரப்பின் மீது பணயம் வைக்க முற் பட்டன.

## சீனாவின் நிலைப்பாடு

1962 நவம்பர் 15 ஆம் திகதி யிட்டு ஜோ.என்லாய் சீன- இந்தியப் பிரச்சினை பற்றி ஆசிய, ஆபிரிக்கத் தலைவர்கட்கு எழுதிய கடிதத்துடன் இந்திய நில அளவையாளர் நாயகத் தின் 1950ஆம் வருட வரைப்படத் தையும் 1954 இல் நேரு மாற்றிய வரைப்படத்தையும் உள்ளடக்கிய ஆறு வரைப்படங்களை இணைத்தி ருந்தார். அவற்றுள் 1914 மார்ச் 29 ஆம் திகதி இந்தியா- திபெத் குறிப்பு களின் பரிமாறலுடன் இணைத்த வரைபடமும் அடங்கும். அதன் விளக்கக் குறிப்பு பின்வருமாறு:

'இது சட்டவிரோதமான மக்ம ஹொன் கோட்டின் மேற்கு அந்தத் தைக் காட்டும் மூல வரைபடத்தின் பகுதியின் பெருப்பித்த தோற்ற மாகும். மேற்கு அந்தம் 27 44.6 வடக்கு 91 39.7 கிழக்கு எனவும் மே காடு கிழக்கு நோக்கிச் செல்வதையும் கெச்சியாங் நதியும் சேடொங் பிரதேசமும் கோட்டுக்கு வடக்கே இருப்பதையும் காணலாம். ஆனால் இந்தியத்தரப்பு இக்கோட்டின் மேற்கு அந்தம் 27 48 வடக்கு 91 40 கிழக்கு என வலியுறுத்துகிறது. இவ்வாறு எல் லைக்கோடு கெச்சியாங் நதிக்கு வடக் காகத் தள்ளப்படுகிறது. இது மக்ம ஹொன் கோடு எனப்படுவதன் நிலையத்தைத் தன்னிச்சையாகப் பெயர்ப்பதாகும். இந்தச்சாட்டில் கெச் சியாங் நதியிலுள்ளும் செடொங் பிரதேசத்தினுள்ளும் இந்தியப் படை களின் ஊடுருவல் இரு நாடுகளுக்கு மிடையிலான உண்மையான கட்டுப் பாட்டு எல்லையின் திட்டமிட்ட மீறலும் ஆயுத மோதலுக்கான தூண் டுதலுமாகும்'.

## தோலாவின் அமைவிடம்

புதுடில்லி 'மதியூகமாக' மறைத்து வைத்த இந்த வரைபடங்களை வாசி க்கக் கருதிய எவருக்கும் மேற்கூறி யவை தெரிந்திருக்கும். ஃப்ராங்க் மொராயஸ் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியராக இருந்த அக்காலப்பகுதி யில் அப்பத்திரிகையில் பணியாற்றிய ஸ்ரீபன் ஹ்யூ-ஜோன்ஸ் அன்று முதல் இன்று வரை என் நண்பராவார். 1962 செப்டெம்பரில் அவர் எனக்குக் காட்டிய ஒரு வரைபடம் எனக்கு வியப்பூட்டியது. லண்டனில் அவர் பெற்ற அவ்வரைபடம் இந்திய வரை படங்களைப் போலன்றி ஆள்கூறுக ளைத் தெளிவாகக். காட்டியதுடன் தோலா இராணுவ நிலையம் மக்ம ஹொன் கோட்டுக்கு வடக்கே இருக் கக்காட்டியது. சீனா ஒக்டோபர் 1962 இல் தாக்குதல் தொடுத்த போது, ஸ்ரீ பன் சீனாவைச் சாடினார். புது டில்லி யிலிருந்த தூதரகங்களும் விடயம றிந்தே இருந்தன. ஜோ என்லாயின் கடிதம் ஒரு பெருந்தாக்கத்தை ஏற்ப டுத்தியிருந்தது.

## மத்திய தகவல் ஆணையத்தின் முடிவு

இதுவரையிலானது, நம்மை மீண் டும் பிரதம தகவல் ஆணையாளர் 19.3.2009 அன்று குல்தீப் நாயரின் விண்ணப்பத்தின் மீது விடுத்த தீர் மான அறிக்கைக்குக் கொண்டுவருகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. அது தன் மறுப்பிற்கு ஆதரவாக மூன்று அடிப்படைகளைக் கூறுகிறது. (1) இந்திய-சீன எல்லைப் பிரச்சினை- குறிப்பாக வடகிழக்கினது- இன்னமும் உயிரோடுள்ளது. (2) அறிக்கை 1962 ஆம் ஆண்டின் போர் தொடங்கியதற்கான காரணங்களை விரிவாகப் பேசுகிறமையால் அது நாட்டின் பாதுகாப்பிற்கும் இந் திய-சீன உறவிற்கும் கடுமையான கெடுதல் தரும். (3) ஆகவே அது உள், வெளிப்பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

அந்தத் தீர்மான அறிக்கையை வழங்கிய ஆணையாளர் ஹபிபுல்லாவும் எம்.எல்.ஷர்மாவும் பிடிவாதமாயிருந்த போதும் மூன்று காரணங்களும் ஆதாரமற்றவை. முதலாவதாகக் கடந்த அரை நூற்றாண்டில் இந்திய-சீன உரையாடல் வெகுதூரம் வந்துவிட்டது. தோலா இராணுவ நிலையத்தைப் பற்றி இராணுவத்தின் ஐயங்களை 1962 இலேயே விடய மறிந்தோர் அறிவர். இப்போது, அதிகார நிறுவனத்தையும் அதன் அடிவருடிகளையும் விட அனைவரும் அறிவர்.

இரண்டாவதாக, நாட்டின் பாதுகாப்பிற்கும் இந்திய-சீன உறவிற்கும் கடுமையான கெடுதல் தருமெனுமாறு சொல்வது சுத்தமான அபத்தம். ஏனெனில், நன்கறியப்பட்ட ஒரு உண்மையை இந்தியா ஏற்பதையிட்டுச் சீனா மனத்தாங்கலடைய நியாயமில்லை. இதன்மீது கட்டியெழுப்பப்பட்ட மூன்றாவது வாதமான உள், வெளிப்பாதுகாப்பின் மீதான தாக்கம் பற்றி புத்தியுள்ள துரைமாரும் அறிவர். அதிகார நிறுவனத்துரைமார் மட்டுமே அவ்வாறு எழுதுவர். ஏனெனில் அவர்களே தமக்கு உடன்பாடற்ற இணையத்தளங்களை முடக்கச் சட்டத்தைத் துர்ப்பாவனை செய்தோரா வர்.

மத்திய தகவல் ஆணையகம், 2006ஆம் ஆண்டின் தகவலுக்கான உரிமைச் சட்டவாக்கத்தின்படி நிறுவப்பட்ட நீதிமன்றத்தையொத்த ஒரு அமைப்பாகும். அதன் ஆணையோ அளவு மீறிய அதிபுத்திசாலித்தனமானது. தகவலைப் பெறுதல் விதிக்கமைவானதாயினும், அதை மறுப்பது ஒரு விதிவிலக்கு என டில்லி மேல்நீதி மன்ற ஆணையொன்றை அது சான்று கூறுகிறது. எவ்வாறாயினும், எத்தகவலும் 'பாதுகாப்பை' அல்லது அயல் நாடொன்றுடனான உறவைப் பாதிக்குமாயின் அதன் வெளிப்படுத்தலைத் தடை செய்யலாம் என்ற வழமையான விதிப்பிற்கு மேலாக, 'வெளிப்படுத்தலாற் கிட்டும் பொதுசனநலன், காக்கப்படும் நலன்கட்கு ஏற்படும் கேட்டை விட அதிகமாயின்' ஒரு பொது அதிகார அமைப்பு அத்தகவலைப் பெறுவதை அனுமதிக்கலாம் என்கிறது.

மேற்கூறியதும் ஆணையாளரின் முடிவிற் சொல்லப்பட்டுக் கேலிக்கூத் தாக்கப்படுகிறது. நீதிபதி எவருமோ மன்றத்தையொத்த ஒரு அமைப்பின் உறுப்பினர் எவருமோ பத்திரிகைகட்குச் செவ்வி வழங்குவதும் தொலைக் காட்சியிற் தோன்றுவதும் ஏற்புடையனவல்ல. ஆனால் ஹபிபுல்லா உற்சாகமாக அவற்றில் ஈடுபட்டார். பிரதம தகவல் ஆணைக்குழுவில் சிவில் ஊழியர்களை அமர்த்துவதற்கு எதிரான ஒரு எச்சரிக்கையாக இந்த அனுபவம் அமைகிறது.

குல்திப் நாயருக்கு அறிக்கையின் பிரதியைப் பார்க்கும் உரிமையை மறுத்த ஹபிபுல்லா, அதன் உள்ளடக்கத்தை அறிவதற்குத் தனக்கிருந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்கட்குத் தகவல் வழங்கியுள்ளார். அவருடைய செயல்களில் முறைகேடான அம்சங்கள் நான்கிற்கும் அதிகம். 25.8.2010 அன்று அவர் ஒரு பத்திரிகை நிருபரிடம் 'படையினரின் உயர் மட்டத்தினரின் கையாலாகாமையை அறிக்கை வெளிப்படுத்துகிறது. அதன் வெளிப்படுத்தலை நாம் மறுக்கக் காரணம் அதல்ல, இந்தியாவுக்கும் சீனாவுக்குமான பேச்சுகட்குட்பட்ட பிரச்சினைகளுடன் அறிக்கைக்குத் தொடர்புள்ளதாக மத்திய தகவல் ஆணையம் கருதியது' (டைம்ஸ் ஒப் இந்தியா, 26.8 2010)

1. ஒரு சட்டவிதியின்படி பொதுப் பொறுப்பின் அடிப்படையில் அறிக்கையை அடைவதற்குத் தனக்கிருந்த சிறப்புரிமையை அவர் துஷ்பிரயோகித்து தனிப்பட்ட முறையில், ஒரு ஊடக நேர்காணலின் இராணுவத்தின் நடத்தை பற்றிய தனது கருத்தை ஆணவத்துடன் கூறினார். இவ்விடயத்தில் குடிமகனை விட அதிக உரிமை எதுவுமற்ற அவர் ஒரு குடிமகனுக்கு மறுத்த ஆவணத்தை தனது கருத்துகட்கு ஆதாரமாக்குமாறு தயங்காது பயன்படுத்தினார்.

2. ஹபிபுல்லாவின் இன்னுமொரு தீர்ப்பை 22.10.2012 ஹிந்துஸ்தான் டைம்ஸ் வெளியிட்டது. '1950களிலும் 1961-62இலும் ஒன்றுக்கொன்று முரணான மக்மஹொன் கோடு பற்றிய வரைபடங்களை இந்தியா சீனாவுக்கு வழங்கியதாலேயே 1962இல் சீனாவுடனான போர் நிகழ்ந்தது' என்று வெளிப்படுத்திய முன்னாள் பிரதம தகவல் ஆணையாளர் ஹபிபுல்லா மட்டுமே பாதுகாப்புச் செயலாளர்கள் தவிர்ந்து ஹெனடக்ஸன் ப்ருக்ஸ்-பகத் அறிக்கையைப் பெறக் கூடிய ஒரே குடிமகனாவார். சீனாவுடன் அருணாசலப் பிரதேச எல்லையில் 20.10.1962 அன்று சீனா ஒரு எல்லை நிலையத்தைக் கைப்பற்றுவதற்கு இந்திய வரைபடங்களின் குழறுபடியே காரணம் என்று விளக்கியுள்ளார். அறிக்கை பொதுப்பார்வைக்கு வரலாகாது என்றே இன்றும் தான் நம்புவதாகக் கூறிக்கொண்டே, 'மேலும் அறிக்கையானது, இந்திய இராணுவத்தைப் பற்றி மிகக் கடுமையாக உள்ளதால் அது இன்றும் கூடப் படையினரின் மனத்தளர்வுக்குக் காரணமாகும்' என்கிறார். எல்லை நிலையம் பற்றிய அவரது கருத்துத் தவறானது. மற்றது மேல்மட்டத்தினரின் நடத்தை பற்றி இராணுவத்தின் அதிருப்தியைப் புறக்கணிக்கிறது.

3. அறிக்கை வெளியான பின்பு கதை மாறுகிறது. அறிக்கை வெளியான மறுநாளான 2013 மார்ச் 18 அன்று கதை மாறுகிறது. தான் எப்போதுமே அறிக்கையைப் பொதுப் பார்வைக்கு விடுவதை விரும்பியதாகவும் இராணுவத்தின் மீதான பரிவினாலேயே அதை வெளியிடுவதை மறித்ததாகவும் கதையைத் திருப்புகிறார்.

*(65ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இராமகிருஷ்ணரும்



## ஒன்று

இந்தியாவின் முக்கிய வலதுசாரி மதவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ் எனப்படும் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங் விவேகானந்தரின் 150ஆம் ஆண்டை(2013) இந்தியா முழுவதும் பெரிய அளவில் கொண்டாடியது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் உருவாக்கி இயக்கப்படும் பல நிறுவனங்களில் ஒன்றான விவேகானந்த கேந்திரா இதில் முன்னணியில் இருந்தது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பை இன்றைய வடிவத்திலும் நோக்கிலும் கட்டமைத்த குருஜி கோல்வால்கரால் விவேகானந்த கேந்திராவை அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட ஏக்நாத் ரானடே விவேகானந்தரின் உரைகளை இந்து தேசத்திற்கான ஒரு எழுச்சி அறைகூவல் என்கிற பெயரில் தொகுத்தவர். அது மட்டுமல்ல ஆர் எஸ்.எஸ் அமைப்பு காந்தி கொலையை ஒட்டிச் சிறிது காலம் தடை செய்யப்பட்டிருந்தபோது அந்த அமைப்பைத் தலைமறைவாகவே இருந்து வழி நடத்தியவருங் கூட. இந்த அமைப்பு பல மட்டங்களில் பல்வேறு பகுதிகளில் வேலை செய்கிறது. அந்தமான் முதலான பகுதிகளில் உள்ள கிறிஸ்தவப் பழங்குடியினர் மத்தியில் சேவைகள் செய்து அதன் ஊடாக கர் வாபசி நிகழ்வுகளை நடத்திப் பெரிய அளவில் மத மாற்றம் செய்வது உட்பட, கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவிடத்தை அமைத்த அந்த அமைப்பு செய்யும் வேலைகள் குறித்து இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

இங்கே நாம் கவனம் கொள்ள வேண்டிய அம்சம் விவேகானந்தரை ஆர்.எஸ்.எஸ் அமைப்பு இப்படி முன்னிறுத்துவதன் பின்னணி என்ன என்பதுதான். பரவலாக இங்கு விவேகானந்தர் பற்றி உருவாக்கப்பட்டுள்ள பிம்பம் என்பது அவர், 1. சநாதன தர்மத்தின் (இந்து மதம்) பெருமையை உலகறியச் செய்தவர் 2. இந்து மதத்தின் சாதிமுறை, பார்ப்பன மேலாண்மை ஆகியவற்றைக் கண்டித்து இந்து மதச் சீர்திருத்தத்தை வலியுறுத்தியவர் 3. இஸ்லாம், கிறிஸ்தவம் முதலான பிற மதங்களைச் சமமாக ஏற்று உள்ளடக்கும் தாராளப் பார்வை கொண்டவர் என்பவைதான்.




அ.மார்க்ஸ்

இத்தகைய சமத்துவப் பண்புகள் கொண்டிருந்த விவேகானந்தரை, சநாதன இந்து மதத்தில் எந்த மாற்றங்களும் இன்றிப் பாதுகாத்தல், எந்த வகையிலும் முஸ்லிம், கிறிஸ்தவ மதங்களை உள்ளடக்காமல் அந்நிய மதங்களாகவே அணுகும் இறுக்கமான பார்வை, இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்குவதற்கு வன்முறை உட்பட அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்துதல் முதலான நோக்கங்களுடன் செயல்படும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு எவ்வாறு முன்நிறுத்துகிறது என்பது ஒரு மில்லியன் டொலர் கேள்வி. ஆர்.எஸ்.எஸ் அமைப்பு மட்டுமல்ல நரேந்திர மோடியும் கூடச் சமீபத்தில் விவேகானந்தரின் கருத்து களைப் பரப்ப வேண்டும் எனத் தன் ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதும் கவனத்துக்குரியது.

ஆனால் நம்மில் பெரும்பாலோர் இந்த முரண்பாடு குறித்துச் சிந்திப்பதில்லை. நம்மில் என ஏன் சொல்கிறேன் என்றால் அச்சுதானந்தன் உள்ளிட்ட இடதுசாரித் தலைவர்கள், திராவிட இயக்கத்தில் சிலர், இந்துத்துவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரும்



திற்கு எதிராக நிறைய எழுதியுள்ள கே.என்.பணிக்கர் போன்ற புகழ்மிக்க வரலாற்றாசிரியர்கள், ஏன் பல கிறிஸ்தவ,முஸ்லிம் நண்பர்கள் உட்பட விவேகானந்தரை இப்படி ஒரு தாராளவாதியாகவே கருதுகின்றனர்.

இதற்கு ஆர்.எஸ்.எஸ் தரப்பிலிருந்தே உரிய பதில் சொல்லப்பட்டுள்ளது. ஒரு முறை கே.என். பணிக்கர் விவேகானந்தரைத் தாராளவாதி எனவும், அவரை ஆர்.எஸ்.எஸ் சுவீகரிப்பது அபத்தம் எனவும் ஆங்கில இந்து நாளிதழில் எழுதினார் (April 10, 2013, Vivekananda's Legacy of Universalism). அதற்கு ஆர்.எஸ்.எஸ் தரப்பிலிருந்து எழுதப்பட்ட பதிலின் சுருக்கம் இதோ:

'விவேகானந்தரால் உருவாக்கப்பட்ட ராமகிருஷ்ண மிஷனிலிருந்து வெளிவந்த ஒருவர்தான் ஆர்.எஸ்.எஸ் ஸின் புகழ் பெற்ற சர் சங் சலக் (தலைவர்) ஆக இருந்தவர் (கோல்வால்கரைத்தான் அவர்கள் குறிக்கின்றனர்). அந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பையா விவேகானந்தரின் 150ஆவது பிறந்த நாளைக் கொண்டாடக் கூடாது என்கிறாய்?' என்று கூறி விவேகானந்தரின் உரைகளிலிருந்து அவர்கள் காட்டிய சில மேற்கோள்கள் வருமாறு:

1. (சிகாகோவில் பேசியது) மதங்கள் எல்லாவற்றிற்கும் தாயான இந்து மதத்தின் சார்பாக நின்று நான் பேசுகிறேன். எனது நோக்கம் எங்கள் நாட்டை புத்தெழுச்சி கொள்ளச் செய்வது மட்டுமல்ல, இந்து இனம் இந்த உலகையே வெல்ல வேண்டும் என்பதுதான்.

2.முஸ்லிம்கள் தமது இறை தூதராக நம்பும் முகம்மது ஒரு வகையான மனப் பிரம்மைக்கு (Hallucination) ஆட்பட்டிருந்தார். வானவர் கப்ரியேல் மூலமாகத் தனக்கு இறைவாக்குகள் வந்தடைந்ததாக காட்டிக் கொண்டார். ஒரு இந்து யோகியைப்போல யோக நிலையினூடாகப் பெற்ற பேறல்ல இது. மாறாக இது தட்டுத்தடுமாறி வீழ்ந்த ஒரு விபத்து. சுய அறிவோடு சில தந்திரமான மூட நம்பிக்கைகளும் (quaint superstition) இணைந்த நிலை. இந்து யோகிகள் அல்லாதோர் தங்களை இத்தகைய சில மனப் பிரம்மைகளுக்கு (Hallucinations) ஆட்படுத்தியும் கொள்வர். வானவர் கப்ரியேல் (ஜிப்ரீல்) ஒரு குகையில் வந்து தன்னைச் சந்தித்து ஹரக் எனும் குதிரையில் சுவர்க்கத்திற்கு (சுவனம்) அழைத்துச் சென்றதாக முகம்மது கூறிக் கொண்டார். ஆனால் இதற்கெல்லாம் அப்பால் அவர் சில அற்புதமான உண்மைகளையும் சொன்னார். நீங்கள் குரானை வாசித்தீர்களானால் இந்த அற்புதமான உண்மைகள் மூட நம்பிக்கைகளோடு கலந்து கிடப்பதைக் காணலாம். இதை எப்படி நீங்கள் விளக்குவீர்கள்?

3. அவர் ஒரு பயிற்சி பெற்ற யோகி அல்ல. அவர் என்ன செய்கிறார் என்பதன் பின்புலத்தை (reason) அவர் அறிந்திருக்கவில்லை. நல்ல முகம்மது என்ன செய்தார் என்பதையும், (கெட்ட முகம்மதின்) வெறித்தனத்தால் (fanaticism) எத்தகைய தீமை இந்த உலகிற்கு விளைந்தது என்பதையும் யோசித்துப்பாருங்கள். முகம்மதின் போதனைகளின் விளைவாகக் கொல்லப்பட்ட கோடிக்கணக்கான மக்கள், பிள்ளைகளை இழந்த தாய்மார்கள், அனாதைகளாகிய குழந்தைகள், அழிக்கப்பட்ட நாடுகள், கொல்லப்பட்ட கோடானுகோடி மக்கள்... (எவ்வளவு பேர்?)... (இந்து யோகிகள் அல்லாத) மற்றவர்களின் பெருமை மிகு போதனைகள் எந்த அளவிற்கு இந்த உலகிற்கு உதவினவோ அதே அளவு பாதிப்புகளையும் இந்த வெறித்தனங்களும் மூடநம்பிக்கைகளும் உலகத்திற்கு ஏற்படுத்தின.

4. (இஸ்லாம் போன்ற அருள் வெளிப்பாடுகள்) முழு இறை உண்மையைச் சொன்னவையல்ல. அவை முழுமையானவையும் அல்ல. அவை குறுகிய மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை. ஒன்றின் பகுதி மட்டுமே. ஒரு பகுதி தன்னை முழுமை என உரிமை கோருவது, எல்லைக்குட்பட்ட ஒன்று எல்லையற்றதாக உரிமை கோருவது எல்லாம் தவறிழைக்கக்கூடிய மனித மூளைகளிலிருந்து பிறந்த குறு மதப் பிரிவுகள் (sects) மட்டுமே. இவை இறைவனின் எல்லையற்ற உண்மையை முழுமையாக அறிந்தவை எனத் திமிராக (arrogant) உரிமை கோருவதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். இதன் விளைவான கொடூரங்களை (arrogance) யோசித்துப் பாருங்கள். ஆனால் இவை அனைத்தும் எப்போதும் தோற்றே போயின என்பதை காணத்தவறாதீர்கள்.

4. இப்படி உரிமை கோருவதில் முகமதியர்கள் ஆகச் சிறந்தவர்கள்; அவர்களின் ஒவ்வொரு படி முன்னேற்றமும் வாளின் உதவியுடனேயே மேற்கொள்ளப்பட்டன. ஒரு கையில் குரான்; ஒரு கையில் வாள்: குரானை ஏற்றுக்கொள்; இல்லாவிட்டால் செத்துப்போ; வேறு மூன்றாவது வழி உனக்குக் கிடையாது எனச் சொல்லி அவர்கள் எத்தனை வெற்றிகளைப் பெற்றார்கள்? ஆனால் இறுதியில் அவர்கள் தோற்றே போனார்கள்.

5. (இந்து மதத்திலிருந்து பிறமதத்திற்கு மாறியவர்களை (வக்கிரமானவர்கள்) மீண்டும் கர் வாபசி செய்து இந்து மதத்திற்குக் கொண்டு வருதல் பற்றிக் கேட்ட போது விவேகானந்தர் சொன்னது) நிச்சயமாக அவர்களைக் கொண்டு வர முடியும். கொண்டு வர வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நமது எண்ணிக்கை குறையும். இப்படி இந்து அடையாளத்திலிருந்து (pale) வெளியே செல்லும் ஒவ்வொரு மனிதனும் நம் எண்ணிக்கையில் ஒன்றைக் குறைப்பவன் மட்டுமல்ல, நம் எதிரிகளின் எண்ணிக்கையில் ஒன்றைக் கூட்டுபவனும் கூட. அதோடு, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கு வக்கிரமானவர்களில் பெரும்பாலோர் வாளால் இப்படி மாற்றப்பட்டோர், அல்லது அவர்களின் வழி வந்தோர். இவ்வாறு அவர்கள் வக்கிரமானதற்கு (இந்து மதத்தின்) ஏதோ சில குறைபாடுகள்தான் காரணம் எனச் சொல்வது அப்பட்டமான ஒரு அநீதி (அழுத்தம் நம்முடையது).

இவை அனைத்தும் ஆர்.எஸ்.எஸ் தரப்பிலிருந்து மேற்கோள்காட்டப்பட்ட விவேகானந்த உரைகள். இவற்றிலிருந்து விவேகானந்தரின் கருத்துகளை இப்படித் தொகுத்துக் கொள்ளலாம்.

அ. இந்து மதம் மட்டுமே முழு இறை உண்மையையும் அறிந்த முழுமையான மதம். இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற பிற முழுமையானவை அல்ல அவை வெறும் குறு மதப் பிரிவுகளே. அவை தம்மை முழுமையான மதங்களாகக் கருதிக் கொண்டதன் விளைவு மிகப்பெரிய அழிவுகள். ஆ. நபிகள் நாயகத்திற்கு இறைவாக்குகள் வானவர்கள் மூலம் வந்திறங்கின என்பது பொய். அது ஒரு வெறும் பிரம்மை.

இ. இஸ்லாம் வாளோடு வந்து மதம் மாற்றிய மதம். இந்து மதத்திலுள்ள (சாதி வேறுபாடு, தீண்டாமை போன்ற) குறைபாடுகளால்தான் இவர்கள் மதம் மாறினார்கள் என்பது பொய்.

ஈ. இந்து மதத்திலிருந்து ஒருவர் மதம்மாறும்போது ஒரு இந்து எண்ணிக்கையில் குறைகிறார் என்பதல்ல. இந்து மதத்தின் எதிரிகளின் எண்ணிக்கையில் ஒன்று அதிகரிக்கிறது.

உ. எனவே இந்து மதத்திலிருந்து பிற மதங்களுக்குச் சென்றோரை மீண்டும் இந்து மதத்திற்குக் கொண்டு வருதல் அவசியம்.

இத்தகைய கருத்துகளைக் கொண்டிருந்தவரை எப்படி எல்லா மதங்களையும் சமமாக நேசித்த தாராளவாதி எனச் சொல்லுவது?

இவை எல்லாம் விவேகானந்தரின் எண்ணற்ற உரைகளிலிருந்து இந்துத்துவவாதிகள் தமக்குச் சாதகமானவற்றைப் பொறுக்கி எடுத்தவை. ஆனால் விவேகானந்தர் உண்மையில் அப்படி அல்ல என ஒருவர் கருதலாம். ஆனால் விவேகானந்தரிடம் அடிப்படையாக இழையோடும் கருத்து இத்தகையதே என்பதை வேறு ஏராளமான மேற்கோள்களோடு இது குறித்து விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர்கள் சுமித் சர்கார், ஜோதிர்மய் சர்மா ஆகியோர் நிறுவியுள்ளனர். ஒரு சிறிய அறிமுகக் கட்டுரையில் அவ்வளவையும் சொல்லி விட இயலாது.

> நாம் கவனம் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் விவேகானந்தரை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு முன்னிறுத்துவதன் பின்னணி என்ன என்பதுதான். இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்குவதற்கு வன்முறை உட்பட அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்தும் நோக்குடன் செயல்படும் இந்த அமைப்பு மாத்திரமல்ல நரேந்திர மோடியும் கூட சமீபத்தில் விவேகானந்தரின் கருத்துகளை பரப்ப வேண்டும் என்று தனது ஆதரவாளர்களுக்கு அறிவுறுத்தியதும் கவனத்திற்குரியது

## இரண்டு

விவேகானந்தரை வாசிப்போர் எத்தகைய மனநிலையை அடைவர், வாசிப்போர் மீது அவரது கருத்துக்கள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதற்கு அசீமானந்தரின் கூற்றுகள் சான்று. ராமகிருஷ்ண பரமஹம்சரின் சமய சமத்துவக்கருத்துகளால் ஈர்க்கப்பட்டு ராமகிருஷ்ணா மடத்தில் சேர்ந்த அசீமானந்தர் இப்போது மலேகான் குண்டு வெடிப்பு உட்படப் பல இந்துத்துவப் பயங்கரவாத நடவடிக்கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பங்குபெற்று சிறையில் இருப்பவர். தன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை ஏற்றுக் கொண்டவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்குமுன் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். ராமகிருஷ்ண பரமஹம்சர் 'யதோ மத் ததோ பத்' (இறைவனை அடைய நம்பிக்கைகள் பல, வழிகளும் பல) என்கிற பன்மைத்துவத்தைப் போதித்தவர். விவேகானந்தர் இராமகிருஷ்ணரின் தலையாய சீடர். இராமகிருஷ்ணரின் வாரிசாகத் தன்னை அறிவித்துக்கொண்டவர். சாகுமுன் தனது அனைத்து ஆற்றல்களையும் தமக்கு ஒரு அற்புத அனுபவத்தின் ஊடாகத் தந்து சென்றவர் எனச் சொல்லிக் கொண்டவர். அப்படிப்பட்ட விவேகானந்தர் எப்படிப் பிற மதங்களைச் சமமாக ஏற்காதவராக இருக்க முடியும் என்பது விவேகானந்தரை தாராளவாதி என நம்புவோர் முன்வைக்கும் ஒரு கேள்வி.

இராமகிருஷ்ணர் அப்படியான சர்வ சமய சமத்துவக் கருத்துகளைத் தூக்கிப் பிடித்தவர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவர் இந்து என்கிற அடையாளத்தை வற்புறுத்தியவரும் அல்லர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தனது புகழ்பெற்ற சீடர் விவேகானந்தரைப் போல இந்து மதத்தையும் இந்திய நாட்டையும் பிணைத்து ஒரு இந்து ராஷ்டிரக் கோட்பாட்டிற்கு அடித்தளம் அமைத்தவரும் அல்லர். அதனால்தான் சீடரைத் தன் நெறியாளராக ஏற்றுக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ் அமைப்பு குருவைக் கண்டு கொள்வதில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

ராமகிருஷ்ணரின் சமய சமத்துவக் கருத்துகளை அவரது சீடர் எப்படியெல்லாம் வளைத்துத் தன் நோக்கத்திற்காகப் பயன்படுத்தினார் என்பதைப் பார்க்குமுன் மீண்டும் அசீமானந்தரின் அனுபவத்திற்குத் திரும்புவோம். தான் எப்படி இந்த வன்முறைப்பாதைக்குத் திரும்பினார் என்பதை இதழாளர் லீனா கீதா ரகுநாத்திடம் அவர் (Caravan, The Beleiver) கூறியுள்ளதிலிருந்து ஒரு பகுதியை மட்டும் இங்கே காண்போம். அசீமானந்தரின் பூர்வ பெயர் நவகுமார் சர்க்கார். பட்டப்படிப்பு முடித்திருந்த நவ குமார் இராமகிருஷ்ணரின் சமய சமத்துவக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு இராமகிருஷ்ணா மடத்தில் சேர்கிறார். அங்கே அவரைச் சந்தித்த விஜய் ஆத்யா என்கிற ஆர்.எஸ்.எஸ்ஸை ஊழியர் நமது பாதை என ஆர்.எஸ்.எஸ்ஸை அடையாளம் காட்டுகிறார். அதுதான் விவேகானந்தர் காட்டிய பாதை என்கிறார். அது எப்படி என நவகுமார் வினவியபோது அவரிடம் ஏக்நாத் ரானடே தொகுத்த விவேகானந்தரின், இந்து தேசத்திற்கான எழுச்சி அறைகூவல் என்கிற நூலை வாசிக்கத் தருகிறார். இனி அசீமானந்தரின் கூற்று.

'ராமகிருஷ்ணா மிஷனின் கொள்கை எல்லா மதமும் சமம் என்கிறதுதான். அங்கே கிறிஸ்மஸ், ஈத் பெருநாள் எல்லாம் கொண்டாடுவாங்க. நானுந்தான். ஆனா இது விவேகானந்தர் காட்டிய வழி இல்லைன்னு ஆத்யா சொன்னபோது என்னால நம்ப முடியல. அவர் தந்த ரானடே தொகுத்த விவேகானந்தர் உரைகளைத் தீவிரமாகப் படிச்சேன்.


அசீமானந்தர்

அப்போது நவகுமார் சர்க்காரை அசீமானந்தராக மாற்றிய அந்த வரிகள் கண்ணில் படுகின்றன.

'இந்து மதத்திலிருந்து ஒருவன் மதம் மாறினால், இந்து மதத்தில் இருப்பவர்களின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்தது எனப் பொருளல்ல: மாறாக இந்து மதத்தின் எதிரிகளின் எண்ணிக்கையில் ஒன்று கூடியது என்று பொருள் என்று விவேகானந்தர் சொன்னதைப் படிச்ச போது அது எனக்குப் பெரிய அதிர்ச்சியா இருந்தது. தொடர்ந்த நாட்களில் நிறையச் சிந்திச்சேன், விவேகானந்தரைப் புரிந்துகொள்ள என்னோட சிற்றறிவுக்குச் சக்தி இல்லங்கிறதைத் தெரிஞ்சுகிட்டேன். அவர் சொல்லிருக்கிறார், நாம அதை வாழ்க்கையில பின்பற்றுவோம்னு முடிவு செஞ்சேன்.'

## மூன்று

இந்து மதத்திலுள்ள குறைபாடுகள் எதையும் விவேகானந்தர் விமர்சித்தாரா?

இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவத்தை மட்டுமல்ல விவேகானந்தர் இந்தியாவில் பிறந்த இதர சமயங்களையோ இல்லை இந்து மதம் சார்ந்த உட்பிரிவுகளையோ அவர் எந்நாளும் ஆதரித்ததில்லை. சநாதன இந்து மதம் ஒன்றே இந்தப் பிரபஞ்சத்தின் உண்மையான தாய் மதம் என்பதே அவரது கருத்தாக இருந்தது. சாதிமுறை உட்பட சநாதன இந்து மதத்தின் எந்த நம்பிக்கைகளையும் நிறுவனங்களையும் அவர் இந்து மதத்தின் குறைபாடுகளாகவோ நீக்கப்பட வேண்டியவையாகவோ விமர்சித்ததில்லை. பலரும் நம்புவதைப்போல சாதி அமைப்பை அவர் இந்து மதத்தின் கேடு எனக் கருதியவர் இல்லை. பல்வேறு பிளவுகளையும், ஏற்றத் தாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் ஒட்டி இணைத்து இந்து மதத்தை முழுமையாக்கப் பயன்பட்ட ஒரு பசையாகவே அவர் சாதி அமைப்பை ஏற்றுக் கொண்டார்.

விவேகானந்தரின் எழுத்துக்கள் மற்றும் உரைகள் குறித்து ஒன்றைச் சொல்ல வேண்டும். அவை பல நேரங்களில் தெளிவற்றவையாகவும் சிக்கலானவையாகவும் இருக்கும். அந்தச் சிக்கல் அவர் பேச எடுத்துக் கொண்டபொருளின் சிக்கற் தன்மையினால் (complexity) உருவானதல்ல. மாறாக அவர் வெளிப்படையாகப் பேச விரும்பாத சிலவற்றை, சற்றே நசுக்கி, நசுக்கிப் பேச நேர்ந்ததின் விளைவு அது.

19ஆம் நூற்றாண்டில் இந்துவாக இருப்பதன் பொருள், அதாவது இந்துத்தன்மை (Hinduism) என்பதற்கு அளிக்கப்பட்ட பல்வேறு வரையறைகளில் மிகவும் தீவிரமான சமூக மற்றும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்த ஒன்று விவேகானந்தரின் வரையறை. மிகவும் நவீனமானதாக இன்று நம்பப்படும் அவரது வரையறை இந்து மதத்தின் கட்டுப்பெட்டித்தனமான, களையப்பட வேண்டிய பல அம்சங்களைப் புதிய மொழியில் நியாயப்படுத்தின. எவை எல்லாம் இந்து மதத்தின் கொடு அம்சங்களாகச் சமூக மாற்றத்தை முன்வைத்து இயங்கியோரால் அடையாளம் காட்டப்பட்டனவோ அவை எதுவும் இந்து மதம் பிற உலக மதங்கள் எல்லாவற்றிற்கும் தாய் மதமாக இருப்பதற்குத் தடையாக இல்லை என அவரை வாசிப்பவர்களை நம்ப வைப்பதாகவும் இருந்தன.

இராமகிருஷ்ணரைத் தனது குருவாக மட்டுமன்றி கிருஷ்ணனின் அவதாரமாகவும், தனது தெய்வீக ஆற்றல்கள் அனைத்தையும் இறப்பதற்கு முன் ஒரு அற்புத நிகழ்வொன்றின் மூலம் தனக்கு ஈந்து சென்றவராகவும் முன்னிறுத்தியவர் விவேகானந்தர், இராமகிருஷ்ணர் இது போன்ற சித்துக்களை நம்பாதவர் மட்டுமல்ல, ஏற்காதவருங்கூட என்பது ஒருபுறம் இருக்க இந்து அடையாளம் குறித்த தன்னுடைய கட்டமைப்பிற்கு ஏற்ப தனது குருவை விவேகானந்தர் கட்டமைத்த விதம்

**விவேகானந்தரை வாசிப்போர் எத்தகைய மனநிலையை அடைவர், வாசிப்போர் மீது அவரது கருத்துகள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதற்கு அசீமானந்தரின் கூற்றுக்கள் சான்று.**

சுவாரஸியமானது. இராமகிருஷ்ணரின் போதனைகளாக இன்று நமக்குக் கிடைப்பது மகேந்திரநாத் குப்தா என்பவர் இராமகிருஷ்ணரின் இறுதி நான்காண்டுகளில் அவரைச் சந்தித்துத் தொகுத்த அவரது உரையாடல்கள்தான். அவற்றையும் அவரது வாழ்க்கை வரலாறுகளையும் படிக்கும்போது இராமகிருஷ்ணர் எல்லோரையும் எல்லா நம்பிக்கைகளையும் சமமாக நேசிக்கும் விரிந்த இதய விசாலம் உடையவர் என்பது தவிர, பக்திப் பாரம்பரியத்தில் வந்த அவர் ஒருவிதப் பித்து நிலையில் (religious ecstacy) வாழ்ந்தவர் என்பது விளங்கும். ஆனால் விவேகானந்தரோ தன் குருவைப் பல மதங்களையும் ஆய்ந்து அவற்றின் சிறந்த அம்சங்களைத் தொகுத்துக் கொண்ட ஒரு தத்துவ ஞானியைப்போல முன்வைப்பார்.

இராமகிருஷ்ணர் எந்நாளும் இந்து மதத்தைப் பிற மதங்களைக் காட்டிலும் உயர்ந்தது எனச் சொன்னதில்லை. குறிப்பாக இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களை அவர் எதிர்நிலையில் நிறுத்தியதில்லை. இந்து மதத்தை அவர் பெருமிதத்தோடு நினைவு கூர்வது ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுந்தான். அதுவும் கூட மார்வாரி இனத்தவரின் ஒரு பக்திக் கொண்டாட்டத்தைக் கண்டு அவர் பரவசமடைந்த தருணத்தில்தான், ஆகா இதுவன்றோ இந்து மதம் என்கிற ரீதியில் அவர் அதைச் சொன்னார்.

ஒரு நபர் ஏற்றுக்கொண்ட மதத்தில் தவறுகள் உள்ளதென்றால் அவர் நேர்மையாக இருக்கும்பட்சத்தில் கட



ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரின் அணிவகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுளே அதைத் திருத்துவார். மற்ற மதங்களில் தவறுகள் இருக்கிறதென்றால் அவற்றைத் திருத்துவது நம் வேலை அல்ல. கடவுள் அதைப் பார்த்துக் கொள்வார்' என்று சொன்னவர் இராமகிருஷ்ணர். அது மட்டுமல்ல, தன் மதமே சிறந்தது எனச் சொல்வதையும் அதன் மூலம் அடையும் வெற்றிப் பெருமிதத்தையும் அவர் கடுமையாகக் கண்டிப்பார். வெற்றி பெறுவது பெரிய விசயமல்ல. வென்றவர்கள் தோற்பதும் தோற்றவர்கள் வெல்வதும் சகஜம் என்பார்.

மதங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகளை அவர் ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் சீடர் விவேகானந்தரோ இந்து மதம் ஒன்றே முழுமையான மதம் எனவும் பிற அனைத்தும் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் (phases) உள்ளவை என்றும் சொன்னவர். அது மட்டுமல்ல இராமகிருஷ்ணரின் கருத்தும் அதுதான் எனச் சொல்லத் துணிந்தவரும் கூட.

1896இல் விவேகானந்தர் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இராமகிருஷ்ணர் குறித்து இரண்டு சொற்பொழிவுகளை ஆற்றுகிறார். இராமகிருஷ்ணரை வாசித்துவிட்டு இராமகிருஷ்ணர் குறித்த விவேகானந்தரின் உரையை வாசித்ததால் அறியப்பட்ட இராமகிருஷ்ணருக்கும் விவேகானந்தரின் இராமகிருஷ்ணருக்கும் உள்ள வேறுபாடுகள் விளங்கும். மேற்கத்திய பொருள் முதல் அணுகல்களையும் இஸ்லாத்தின் வாள்வீச்சையும் வென்ற மதம் சநாதன இந்து மதம் என்கிற இராமகிருஷ்ணருக்குச் சற்றும் பொருந்தாத ஒரு திரையில் அவரை வரைந்து காட்டுவார் அவரது சீடர். இராமகிருஷ்ணர் இஸ்லாம், கிறிஸ்தவம் என ஒவ்வொரு மதமாக கற்றுத் தேர்ந்து ஆய்வு செய்து அவற்றில் புதிதாக ஒன்றுமில்லை என அறிந்தாராம்.

இராமகிருஷ்ணர் யாருடைய நம்பிக்கையையும் தாக்க வேண்டாம், 'மிகவும் உள்ளடக்கும் தன்மையே இல்லாத' இஸ்லாமிய நம்பிக்கையையும் கூடத் தாக்க வேண்டாம் என்றாராம். மற்ற நம்பிக்கைகளைத் தாக்காமலேயே அவற்றை மேலுயர்த்த வேண்டும் என்றாராம். ஆக, மற்ற நம்பிக்கைகள் மேலுயர்த்தப்பட வேண்டியவை என இராமகிருஷ்ணர் கருதினார் என்றாகிறது. விவேகானந்தரைப் போற்றுபவர்கள் இப்படி இராமகிருஷ்ணர் எங்கே சொன்னார் எனத் தேடிப் பார்த்தால் ஏமாற்றமடைவர்.

சநாதனமதத்தை என்றென்றைக்கும் அழியாத மதம் என இராமகிருஷ்ணரை முன்னிறுத்திப் பேசும் அவரது சீடர், இந்த மதத்தைப் போதிக்க உகந்த மண் இந்திய மண், உகந்த மக்கள் இந்துக்கள் என்று கூறியதன் ஊடாக இந்தியா, இந்திய மண், இந்து ஆகியவற்றை ஒன்றாக நிறுத்தி இந்துத்துவ அரசியலுக்குக் கால்கோள் இட்டார் என்பது நினைவிற்குரியது. தேசம் என்கிற கருத்தாக்கத்தை முன்னிறுத்தாத, சொல்லப்போனால் வெறுத்த இராமகிருஷ்ணரின் பெயரால் இதைச் செய்வதற்கு விவேகானந்தர் இம்மியும் தயங்கவில்லை.

**இராமகிருஷ்ணர் எந்நாளும் இந்து மதத்தைப்பிற மதங்களை காட்டிலும் உயர்ந்தது எனச் சொன்னதில்லை. குறிப்பாக இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களை அவர் எதிர்நிலையில் நிறுத்தியதும் இல்லை. இந்து மதத்தை அவர் பெருமிதத்துடன் நினைவு கூருவது ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும்தான்.**

### நான்கு

பார்ப்பனர்களை விமர்சித்தார், அழுகிப்போன சாதி முறையை ஒழிக்கவேண்டும் எனச் சொன்னார் என்றெல்லாம் விவேகானந்தர் குறித்துக் கட்டமைக்கப்பட்ட பிம்பமும் இப்படித்தான். பார்ப்பனர்கள் அதிகார ஆசை கொண்டவர்கள் எனச் சொல்லும் விவேகானந்தர்தான் இதை அவர்களின் ஒரே ஒரு பலவீனம் எனவும் மற்றபடி அவர்கள் நல்லவர்கள், ஒழுக்கமானவர்கள், சொத்து சேர்க்காதவர்கள் எனவும் சொல்கிறார். புத்தர் முதல் ராம் மோகன் ராய் வரை இந்தச் சமூகத்தைச் சீர்திருத்த வந்த எல்லோரும் மதம், சாதி ஆகிய இரு நிறுவனங்களையும் முற்றாக வீழ்த்த நினைத்தார்கள், தோற்றார்கள் என்கிறார். ஆக சாதியை முழுமையாக வீழ்த்த வேண்டியதில்லை, வீழ்த்தவும் முடியாது என்றாகிறது.

மத ஆசாரியார்கள் (priests) என்ன சொன்ன போதிலும் சாதி என்பது ஒரு கெட்டி தட்டிப்போன நிறுவனம். அது தன் சேவையை முடித்துவிட்டது. இப்போது அது தன் அழுகல் நாற்றத்தால் இந்தியாவை நிரப்பியுள்ளது. மக்களுக்கு அவர்கள் இழந்துபோன சமூகத் தனித்துவத்தை (social individuality) மீட்டளிப்பதன் மூலமே அதை நீக்க முடியும் என்கிற விவேகானந்தரின் வாசகங்களை வைத்துத்தான் அவர் பெரிய சாதி எதிர்ப்பாளர் என்கிற பிம்பம் இங்கு கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த வாசகங்கள் தெளிவாக சாதி ஒழிப்பை வற்புறுத்தி ஏதும் சொல்லவில்லை என்பது தவிர இதன் மூலம் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைத் தொடர்ந்து வாசித்தால் அதிர்ச்சி அளிக்கும்.

விவேகானந்தர் பேசுகிறார்: 'சமஸ்கிருதத்தில் ஜாதி என அழைக்கப்படும் உயிர்கள் தான் (species) படைப்பின் அடிப்படைத் தத்துவம். எல்லா வேதங்களும் சொல்வது நான் ஏகன்; நான் அநேகன் ஆனேன் என்பதைத்தான். படைப்புக்கு முன் உள்ளது ஒருமை; படைப்பு என்பது பன்மை. இந்தப் பன்மைத்துவம் முடிவுக்கு வரும்போது படைப்பு அழியும். எந்த உயிர்களும் ஊக்கத்துடனும் செயல்திறனுடனும் இருந்தால் அது பன்மைத்துவத்தை வெளிப்படுத்தும். இது முடிவுக்கு வரும்போது அது சாகிறது. ஆக, ஒரு தனிநபர் தனது இயல்பை, அவனது பிரகிருதியை, அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாதியை வெளிப்படுத்தும் சுதந்திரம்தான் ஜாதி என்பதன் மூலக் கருத்து. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அப்படித்தான் இருந்து வந்தது. சமீபத்திய நூல்களிலும் கூட சம பந்தி போஜனம் மறுக்கப்படவில்லை. நம் தொல் பழ நூல்களிலும் கூட சாதிகளுக்கிடையே திருமணம் மறுக்கப்படவில்லை. பின் ஏன் இந்தியா வீழ்ந்தது? ஜாதி குறித்த இந்தக் கருத்தை விட்டொழித்ததால் தான்.

என்ன சொல்கிறார் விவேகானந்தர்? சாதியை அதாவது ஒருவரது இயல்பை வெளிப்படுத்துவதுதான் சுதந்திரமாம். ஒருவருக்கு மலம் அள்ளுவது இயல்பாக இருக்கலாம். இன்னொருவருக்கு மந்திரம் சொல்வது இயல்பாக இருக்கலாம். அதை அவர்கள் வெளிப்படுத்தும் சுதந்திரம் அழியும்போது சமூகத் தனித்துவம் பாழாகிறது. இன்று அப்படித்தான் ஆகிவிட்டது. இந்தியாவின் அழிவிற்கு அதுவே காரணம்.

இனி மீண்டும் விவேகானந்தர்: 'இப்போதுள்ள ஜாதி என்பது உண்மையான ஜாதி அல்ல. மாறாக அதன் முன்னேற்றத்திற்கான தடை. இன்றுள்ள அமைப்பு ஜாதியுடைய சுதந்திரச் செயல்பாட்டைத் தடுத்துவிட்டது. எந்த ஒரு கெட்டிதட்டிப்போன வழமை அல்லது உரிமை அல்லது பரம்பரைத் தன்மையான வகுப்பு (class) என்பதும் உண்மை யில் ஜாதியின் வீச்சைத் தடுக்கிறது. எந்த ஒரு தேசமும் எப்போதெல்லாம் இந்தப் பன்மை நிலையை (variety) இழக்கிறதோ அப்போது அது சாக நேர்கிறது. என் நாட்டு மக்களே நான் உங்களுக்குச் சொல்வது இதுதான். நீங்கள் ஜாதியை அழித்ததால்தான் இந்தியா வீழ்ந்தது, எந்த ஒரு உறைந்த பிரபுத்துவம் (frozen aristocracy) அல்லது முன்னுரிமை பெற்ற வர்க்கம் (privileged class) என்பதெல்லாமும் ஜாதியின் மீதான தாக்குதல்தானே ஒழிய அதுவே ஜாதி அல்ல. ஜாதி அதன் வீச்சைப் பெறட்டும். ஜாதிக்குத் தடையாக உள்ள அனைத்தும் உடைந்து சிதறட்டும். நாம் மேலெழுவோம்'

இதுதான் விவேகானந்தர் சாதி மீது வைக்கும் விமர்சனம். அவரது விமர்சனத்திற்காக அவர் தேர்ந்து கொண்ட மொழி எத்தனை சிடுக்குகள் நிறைந்ததாக உள்ளது என்பதையும் கவனியுங்கள். ஜாதி என்பது ஒருவரது இயல்பின் அடியாக உருவாவது. அந்த இயல்பை அவர் நிறைவேற்றி வரும்வரை அது அற்புதமான ஒன்றுதான். வருணம், பரம்பரை என்கிற வடிவில் கெட்டிதட்டிப் போக விடாமல் ஜாதி என்பது சமூகத்தில் சுதந்திரமாக நிலவ விட வேண்டும். புத்தர் முதலானோர் சாதியை முற்றாக ஒழித்துவிடுவது என்று கூறியது அபத்தம் என விவேகானந்தர் கூறியதன் பொருள் விளங்குகிறது.

இந்தியா பல ஜாதிகளை மட்டுமல்ல, மொழிகளை, இனங்களைக் கொண்ட ஒரு நாடு. ஆனாலும் இந்தியா என்பது இந்த வேற்றுமைகளை எல்லாம் கடந்து ஒரு ஒருமையாக நின்று உலகிற்கு வழிகாட்டும் என்பதாக விவேகானந்தர் முன்வைக்கும் சிந்தனைகள் பலவும்

**சமஸ்கிருதத்தை ஒரு மகத்தான புனித மொழி எனச்சொல்லும் விவேகானந்தர் பிற மொழிகள் அனைத்தையும் சமஸ்கிருதத்தின் வெளிப்பாடுகள் என்கிறார். ஆரியர் என்கிற இன அடையாளம், சமஸ்கிருதம் என்கிற மொழி அடையாளம், இந்து மதம் என்கிற மத அடையாளம் ஆகியவற்றின் ஊடாக அவர் இந்தியாவை வரையறுக்கிறார்**

இன்றைய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க ஆகியவற்றின் திட்டங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமஸ்கிருதத்தை ஒரு மகத்தான புனித மொழி எனச் சொல்லும் விவேகானந்தர், பிற மொழிகள் அனைத்தையும் (அதனுடைய) வெளிப்பாடுகள் (manifestations) என்கிறார். பிற மதங்களை தாய் மதமான இந்து மதத்தை நோக்கிய வளர்ச்சியின் இடை நிலைகள் (phases) என அவர் முன்வைத்ததன் இன்னொரு பக்கம்தான் தமிழ் உள்ளிட்ட பிற இந்திய மொழிகளை சமஸ்கிருதத்தின் வெளிப்பாடுகள் என அவர் கூறுவதும் என்பதை நாம் கவனிக்கத் தவறலாகாது. ஆரியர் என்கிற இன அடையாளம், சமஸ்கிருதம் என்கிற மொழி அடையாளம், இந்து மதம் என்கிற மத அடையாளம் ஆகியவற்றின் ஊடாக அவர் இந்தியாவை வரையறுக்கிறார்.

'சமஸ்கிருதம் என்பது (இந்தியாவின்) மொழியியல் தீர்வாக அமைவதைப் போல, ஆரிய என்பது இனவியல் தீர்வாக அமைகிறது. சமூக அரசியல் பிரச்சினைகளுக்கும், கலாசாரம், வளர்ச்சி ஆகியவை பல்வேறு மட்டங்களில் ஏற்றத்தாழ்வுடன் இருப்பதற்கும் பிராமணத்துவமே தீர்வாக உள்ளது' என்பது விவேகானந்தர் நம் நாட்டுப் பிரச்சினைகளுக்கு முன்வைக்கும் இறுதித் தீர்வு.

இந்தியாவிற்கு இத்தகைய மகத்தான கலாசாரத்தைத் தந்ததற்காக ஆரியர்களை மனதாரப் பாராட்டும் விவேகானந்தர், இந்தக் கலாசாரம் சாதி அமைப்பின் ஊடாகக் கையளிக்கப்பட்டது என நன்றி ததும்புகிறார்.

'அது (அதாவது ஆரியக் கலாசாரத்தின் கொடையான சாதி அமைப்பு) முழு இந்தியாவையும் பொருள் அல்லது வாளால் (wealth or sword) வழி நடத்தப்படாமல் ஆன்மீகத்தால் தூய்மை செய்து கட்டுப்படுத்தப்பட்ட அறிவுத் திறனின் வழிகாட்டலில் வைத்தது. இந்தியாவின் தலைமை ஜாதியாக உள்ளவர்கள் உயர்ந்த ஆரியர்கள்- அதாவது பிராமணர்கள் என்கிற விவேகானந்தரின் கூற்றை நாம் மிகக் கவனமாக ஆராய வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். பொருளால் வழிநடத்தப்படுவது என்பது கிறிஸ்தவத்தையும் வாளால் வழி நடத்தப்படுவது என்பது இஸ்லாமையும் ஆன்மீகம் தழுவிய அறிவுத் திறன் மிக்க பார்ப்பனர்களால் வழி நடத்தப்படுவது என்பது இந்து மதத்தையும் இங்கே குறியீடு செய்கின்றன. இப்படிப் பார்ப்பனர்களால் வழிநடத்தப்படும் இந்து மதம் ஆரியர்களின் கொடை என்பது விவேகானந்தர் வைக்கும் முத்தாய்ப்பு.

பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய வருணங்களைப் பிறவி அல்லது கர்ம பலன் என்கிற வடிவில் வரையறுத்துப் படைக்கப்பட்ட (designated) சாதிகளாகத் தான் கருதவில்லை என விவேகானந்தர் சில இடங்களில் கூறுகிறார். அதாவது அப்படிப் பிறவி அடிப்படையில் வரையறுக்கப்படாத யாரும் இந்த நிலைகளை அடையலாம் என்கிற பொருளில் அவர் இதைச் சொல்கிறார். வாளின் மூலம் அதிகாரம் பெற்ற யாரும் சத்திரியராகலாம்; கல்வியின் ஊடாக யாரும் பிராமணர் ஆகலாம்; சொத்தின் மூலம் யார் ஒருவரும் வைசியர் ஆகலாம் என்பது விவேகானந்தரின் துணிபு. அப்படி மேல் நிலையை அடைந்தோர் அந்த உயர் நிலையின் பெருமைகளைக் தக்க வைப்பவர்களாக இருக்க வேண்டும்.

இங்கே நமக்கொரு ஐயம் எழுகிறது. அப்படியானால் ஒரு சூத்திரர் கல்வியின் மூலம் பிராமணர் ஆக இயலுமா? அது முடியாது என்பதுதான் விவேகானந்தரின் கருத்தாக உள்ளது. சூத்திரர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் இப்படி மேல் நிலை அடைய வேண்டுமானால், நீங்கள் உங்களின் சாதி முழுமையையும் முதலில் மேல் நிலைக்குக் கொண்டு வர வேண்டும். பிறகு உங்களின் மேல் நோக்கிய வளர்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்திவிட இயலாது. எனவே அடித்தளச் சாதியினரைப் பொறுத்தமட்டில் அவர்கள் உயர் சாதி நிலையை அடைய வேண்டுமானால் யாரொருவரும் அதைத் தம் சொந்த முயற்சியில் சாதித்துவிட இயலாது. அவர்கள் ஒட்டு மொத்தமாய் அதற்கு ஆசைப்பட வேண்டும். அந்தச் சமூகம் முழுமையுமே அதற்குத் தம்மைத் தகுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கான விதி முறைகளை இந்திய மூதாதைகளான ஆரிய பிராமணர்கள் உருவாக்கியுள்ளனர் என்கிறார். இதை எல்லாம் செய்யாமல் வெறுமனே சாதி அமைப்பையும் பார்ப்பனீயத்தையும் திட்டிக்கொண்டு இருந்தால் போதாது என்கிறார்.

'உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் நான் சாதிகளைப் பார்த்துள்ளேன். ஆனால் எங்கும் அவற்றின் திட்டங்களும் நோக்கங்களும் இந்தியாவில் உள்ள அளவிற்கு உன்னதமானவைகளாக இல்லை. ஜாதி என்பது இப்படித் தவிர்க்க இயலாதது என ஆகிற போது தூய்மை, பண்பாடு, தியாகம் ஆகியவற்றால் அடையாளப்படுத்தப்படும் ஜாதியையே நான் ஏற்றுக் கொள்வேன். டொலர்களால் அடையாளப்படுத்தப்படும் ஜாதியை அல்ல, எனவே (இந்தச் சாதி அமைப்பின் மீது) கண்டன வார்த்தைகளைக் கொட்டாதீர்கள். வாய்களை மூடிக் கொள்ளுங்கள். இதயங்களைத் திறவுங்கள்.' இது தான் விவேகானந்தர் நமக்குச் சொல்லும் சேதி விவேகானந்தரைத் தூக்கிப் பிடிப்போர் அவரின் ஊடாக நமக்குச் சொல்லும் சேதி. ■

---

*(64ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அவள் மரணத்தின் பின் அவளின் விபத்துக்கு காரணமானவனை கத்தியுடன் தேடித்திரிகின்றான், அவளின் தந்தை. மரணத்தை மனிதர்கள் எப்படி விளங்கிக்கொள்கிறார்கள்? 5 நாள், 10 நாள், 31 நாள் துக்கம் கொண்டாடுகிறார்கள். பின்பு? எல்லாவற்றையும் மறந்து வாழத்தானே முற்படுகிறார்கள்? அதுதானே நியதி. இந்த நியதியின் மீது ஆக்ரோஷமான கேள்விகளை உலுப்பும் மன ஓட்டங்களைக்கொண்ட தந்தை, அந்தத் தந்தை குற்றவாளியை தந்தையுடன் சேர்ந்து இசைக்கலைஞனும் தேடுகின்றான். உண்மையான குற்றவாளி யார்? என்பதை சினிமாவின் கூறுகளை உள்வாங்கி, செம்மையான திரைச்சட்டகங்களால் காட்சிப்படுத்தப்படுகிறது. விபத்திற்கு காரணமான மகிழூர்ந்து நிறத்தை ஓட்டைவிழுந்த பானையின் நிறமும், பானையை தாங்கி நிற்கும் பெண் தலையில் சூடியிருக்கும் பூவின் நிறமுமே சொல்லிவிடுகின்றன. அப்பெண் பேசும் வார்த்தைகள் எம் காதில் விழுவதில்லை. அதேபோல் முச்சக்கரவண்டி ஓட்டுநர் இதுவும் ... க...ல...ர்..... தான் த.....ம் .....பீபீ ..... என்றபோது காட்சியின் நீட்சியில் பெட்டியிலிருந்து விழும் அப்பிள்களின் நிறங்களும் குற்றவாளியை சுட்டுகின்றன.


வயலின் கலைஞனின் தாய் சொல்கிறாள் 'அது பிசாசு அல்ல அது கடவுள்' என்று. ஏமாற்றுப் பேர்வழியான இளைஞன் சொல்கிறான், 'நட்சத்திரங்களிற்குமப்பால், கோள்களிற்குமப்பால் கடவுள் என்ன சேர் போட்டு உட்கார்ந்தா இருப்பார்?' - என்று, பிசாசுகள் பற்றிய எங்கள் மனப்பதிவுகள் உதிர்ந்து போகத்தொடங்கும் போது வாழ்வு, மரணம், பிசாசு மற்றும் கடவுள் பற்றிய மனிதனின் மாமூலான எண்ணங்கள் மீது கேள்விகளை திரைப்படம் உருவாக்கத்தவறவில்லை. திரைப்படத்தில் வரும் சண்டைக்காட்சி இயக்குநரின் இன்னொரு படத்தை (ஓநாயும் ஆட்டுக் குட்டியும்), விதியின் நாயகன் பெரும்பாலும் நிலத்தைப்பார்த்தபடி விறைப்புடன் திரிவதும், கண்ணை மறைத்தபடி கிடக்கும் தலைமுறை (அஞ்சாதே-என்ற படத்தையும்) ஞாபகப்படுத்துவதை தவிர்க்க முடியவில்லை. கமராவின் நகர்வு கூட (மிக உயரத்திலிருந்து கீழே படமாக்கப்படுதல்) அவரின் பல திரைப்படங்களிலும் பார்க்கலாம்.

கெட்ட பிசாசோ, நல்ல பிசாசோ திரையில் இறுதிவரை பிசாசு பிசாசாகவே வருகிறது. நல்ல பிசாசுக்கும் கெட்ட பிசாசுக்கும் முகம் என்னவோ ஒன்றுதானே? கோரம்தானே? அது முரண் அல்ல. அதுதான் யதார்த்தம். அதுதான் சினிமா. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய விமர்சனம்

# இனி வரும் கூர்ப்பும் அதன் இலக்கிய வார்ப்புகளும் அழகியலும்



மு.பொ.

இன்று அழகியல் பற்றி பலர் பேசுவதையும் எழுதுவதையும் நாம் பார்க்கிறோம். மார்க்சிய அழகியல், நவீனத்துவ அழகியல், பின் நவீனத்துவ அழகியல் என்று பல்வகை நாமங்களில் பலர் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல்வகையான அழகியல் பற்றிய பேச்சுக்கள் எழுவதற்கும் வாய்ப்புண்டு. ஆனால் எனது கவனத்துக்குரியது இதுவல்ல. நான் கவனத்திற்கொள்வது நாம் இன்று பேசும், கலை இலக்கியத்தில் கோலோச்சும் இந்த அழகியல் எவ்வாறு உருவாக் கம் கொள்கிறது என்பதே. - அதாவது இந்த உருவாக்கம் இத்தகைய பல்வித அழகியலாக கலை இலக்கியத்தில் பரிணமித்து நிற்பது எவ்வாறு சாத்தியமாகிறது?

அறுபதுகளில் முற்போக்கு இலக்கிய வட்டத்துக்கு தலைமை தாங்கிய பேராசிரியர்கள் சிலர் அழகியல் பற்றிய அறிதல் குறைவான தம் விளக்கங்களால் அழகியலைத் திரிபுபடுத்தினர். அதாவது இலக்கிய ஆக்கம் ஒன்றை விமர்சிக்கும் போது - அது கவிதையாகவோ, சிறுகதையாகவோ நாவலாகவோ இருக்கலாம். - அதன் உள்ளடக்கத்திற்கே இவர்கள் முக்கியம் கொடுத்தனர். அதன் உருவம் இவர்களால் புறக்கணிக்கப்பட்டது. உள்ளடக்கத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் உருவத்திற்கு கொடுக்கப்படவில்லை.

இதனால் இலக்கிய உலகில் பல மாறாட்டங்களும் குளறுபடிகளும் ஏற்பட்டன. எப்படி இக்காலத்தில் ஈழத்து இலக்கிய உலகில் எழுதப்பட்ட சமூக யதார்த்தக் கதைகள் சோசலிஸ்ற் றியலிசக் கதைகளாக மாறாட்டம் செய்யப்பட்டனவோ, அவ்வாறே அழகியல் விடயத்திலும் உள்ளடக்கத்தைப் போற்றி உருவத்தை உதாசீனப்படுத்தி மற்றொரு குழப்பத்தை ஏற்படுத்தினர். இதனால் சுபத்திரன், பசுபதி போன்ற இளங் கவிஞர்கள் சாதி ஒடுக்குமுறைக்கும் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிராக எழுதிய கவிதைகள் பெரிதாக மேற்படி பேராசிரியர்களால் பாராட்டப்பட்டன. அதேநேரத்தில் நீலாவணன், மஹாகவி போன்றோர் மற்றும் தமிழ்த்தேசியம் பற்றி எழுதியோர் புறக்கணிக்கப்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில்தான் இவை பற்றி விடயமறிந்த, எப்போதும் நடுநிலைமை தவறாத ஏ.ஜே. கனகரத்தினாவின் தலையீடு நிகழ்ந்தது எனலாம். தமது சகாக்கள் விட்ட பிழைகளால் ஏற்பட்ட ஓட்டைகளை ஏ.ஜே.பொத்தல் போட்டு சீர்ப்படுத்தினார். அழகியல் என்பது உள்ளடக்கமும் உருவமும் ஒன்றுக்கொன்று துணையாக நின்று ஒரு படைப்பை வளப்படுத்துவன என்று மேற்குலக விமர்சகர்களின் மேற்கோள்கள் காட்டி விளக்கினார்.

இவ்வாறு நாம் அக்கறை கொள்ளும் அழகியலானது நமது கலை இலக்கியச் செயற்பாடுகளால் வெளிவரும் ஒன்றா அல்லது நமது ஆழ இருப்பே அழகியல் களஞ்சியமாக உள்ளதால் ஒரு கலைச் சிருஷ்டியை உள்வாங்கும் ஒருவன் மீது இது தொற்றவைக்கப்படுகிறதா? ஒரு வகை இயங்கியல் போக்காகவும் இதைக் கொள்ளலாம். மேலும் இந்த அழகியல் என்பது ஒன்றா? பலவா? ஒன்றெனில் ஏன் அது பல தலைப்புகளில் பேசப்படுகிறது என்று கேட்பவரும் உண்டு. ஒன்றே பலவாகத் தெரிகிறது என்று அத்வைத வேதாந்திகள் சொல்வது இதற்கு நெருக்கமானதெனக் கூறின் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒன்றும் பலவும் நமது பார்வையிலேயே தங்கியிருப்பதாகக் கூறுவர் வேதாந்திகள். அழகியல் பல்வகையாகப் பேசப்படுவதற்கு காரணம் நாம் யாத்தளிக்கும் படைப்புகளின் தரத்தால் ஏற்படுகிறது எனலாம்.

எது எவ்வாறாக இருந்தாலும் எவரும் அழகியலை மறுப்பதற்கில்லை. காரணம், கலை இலக்கியத்தின் அடிச்சரடே அதுதான். மார்க்சியவாதிகள் அழகியலின் பருப்பொருளை அடைவதற்கு பல தடைகள் இருந்தன. ஆழ்மன அலசலை மேற்கொண்ட உளவியலை அவர்கள் ஒறுப்பாக்கினர். உளவியலின் மும்மூர்த்திகளான ஃபிராய்ட், அட்லர், யுங் ஆகியோரின் ஆய்வுகள் இவர்களால் உள்வாங்கப்படவில்லை. மார்க்சியத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் ஃபிராய்டின் உளவியல் சிந்தனைகளைப் புகுத்துவதற்கு எறிக்ஃபுரொம் பெரிதாக உழைக்கவேண்டியிருந்தது. மனிதனை யந்திர ரீதியாகப் பார்த்த பவ்லோவின் பார்வையே பெரிய கண்டுபிடிப்பாக பேசப்பட்டது. 'எல்லாமே சக்திமயப்பட்டது' என்ற ஐன்ஸ்ரீனின் விஞ்ஞானக் கண்டுபிடிப்பே, சிறிதுகாலம், மார்க்சியப் பொருள் முதல் வாதத்திற்கு எதிரானதாகப் பார்க்கப்பட்டு ரஷ்யாவில் தடை செய்யப்பட்டிருந்தது என்றால் நிலைமை கவலைக்குரியது தான்.

மார்க்சியம் தொடர்பாக அதற்கு எதிராக விவாதங்களை முன்வைத்தவர்கள் மீது கால்மார்க்சோ ஏங்கல்சோ அல்லது அவர்களுக்குப் பின் வந்த லெனினோ ட்றொட்ஸ்கியோ ஆத்திரங் கொண்டதில்லை. அமைதியாக அவற்றை உள்வாங்கி ஆணித்தரமான பதில்களை வழங்கினர். கோட்ச்சிக்கும் லெனினுக்கும் இடையே நிகழ்ந்த விவாதங்கள் இதற்கு உதாரணம். ட்றொட்ஸ்கியின் 'புரட்சியும் இலக்கியமும்' இன்னும் சுவையானது. இவற்றுக்குப்பின்னர் இத்தகைய பண்பு பேணப்படவில்லை என்பதே பலரின் கருத்தாகும். இத்தகைய பண்பின் அறிகுறியாகவே 'ஒரு இலக்கியப்படைப்பு அது உருவாகிய சமூக, பொருளாதார சூழல் கடந்த பின்னரும் நிலைக்கக் கூடியதாக' இருப்பதற்கான காரணம் என்ன?' என்று மார்க்ஸ் தனது மனதிற்கு பட்ட உண்மையை தயங்காது கேட்டார். மார்க்ஸ் அதற்கு பதிலளிக்காத போதும் இன்றைய ஆழ்நிலைப்பட்ட உளவியல் நோக்குகள் அதற்கு பதிலளிப்பவையாகவே உள்ளன.

இன்று கூர்ப்பு பற்றி பேசும் விஞ்ஞானிகளும் மனதின் ஆழங்கள் பற்றிப் பேசும் உளவியலாளரும் ஒன்றை ஒப்புக்கொள்கின்றனர். அதாவது கூர்ப்பென்பது (evolution) ஏற்கனவே தனக்குள் உள்ளோடியிருக்கும் (Involution) ஒன்றினாலேயே தூண்டப்படுகிறது என்பதே அது. இதனால் தான் நான் ஏற்கனவே நமது ஆழ இருப்பென்பது பரவசம் தரும் அழகியலின் களஞ்சிய அறையாக உள்ளதெனக்கூறினேன். இதை நோக்கி நம் ஆக்க இலக்கியங்கள் ஊடுருவல் செய்யும் போது அழகியலின் பரவசம் நமக்குள் நிகழ்கிறது. கலைகளில் உயர்ந்த நிலையிலுள்ள இசை ஒருவனிடம் மேற்குறிப்பிட்ட பரவசத்தை வெகு எளிதாக எழுப்பி விடுகிறது. ஒருவர் மகாத்மா காந்தியிடம் 'உங்களுக்கு கலைகளில் பிடித்தமானது எது?' என்று கேட்டார். அதற்கு அவர் 'வாழ்க்கையையே சிறந்த கலையாகக் காண்கின்றேன்' என்றார் தயங்காது. மனிதன் ஒருவன் கதை, கவிதை, இசை என்னும் ஊடகங்கள் மூலம் அனுபவிக்கும் அழகியல் இன்பத்தை ஞானி ஒருவன் வாழ்க்கையின் ஒவ்வொரு உராய்வையும் கலையாகக் கண்டு பெறுகிறான். இத்தகைய ஒரு நிலையைத்தான் மார்க்சியத்தின் இறுதி நிலையான பொதுவுடமையும் அவாவி நிற்கிறதென்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்

**முன்னர் மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்டது போன்று மீண்டும் அடிப்படைச் சிந்தனை மாற்றம் ஒன்றுக்கு உலகம் தயாராகிக் கொண்டிருப்பதாக மேற்கத்தைய புத்திஜீவிகளிலிருந்தும் கீழைத்தேய ஞானிகளிடமிருந்தும் இப்போது எதிர்வு கூறல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் இவை எதனை ஆதாரமாகக்கொண்டு சொல்லப்படுகின்றன என்பதே கேள்வி**

2. உலக வரலாற்றில் மறுமலர்ச்சிக்கு (Renaissance) முந்திய காலத்தில் மனிதன் மேற்கொண்ட இலக்கிய செயற்பாடு அனைத்தும் கவிதையூடாகவே இயங்கிற்று. ஆனால் மறுமலர்ச்சிக்குப்பின்னர் 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளின் அடிப்படைச் சிந்தனை மாற்றம் பல துறைகளில் ஏற்பட்டது. இது கலை இலக்கியத்துறையையும் பாதித்தது. இதுகால வரை இலக்கியம் என்பது கவிதை (செய்யுள்) வழிவந்ததாகவே இருந்தது. ஆனால் மறுமலர்ச்சிக்குப் பின் ஏற்பட்ட அடிப்படைச் சிந்தனை மாற்றம் இந்த நிலையை மாற்றி அமைத்தது. செய்யுளே ஊடகமாக இருந்த கலை இலக்கிய முயற்சிகளுள் உரை நடை மெல்லப்புகுந்தது. பொக்காசியோவால் பயணிகளின் சோர்வைப் போக்க சொல்லப்பட்ட டெகமறன் சிறுகதைகள், ஆங்கில எழுத்தாளர் சோசரால் எழுதப்பட்ட கன்டபறி ரேல்ஸ் சிறுகதைகள், சேர் வன்ரீஸா சால் எழுதப்பட்ட, அக்கால சிலுவை யுத்த, நைற்ஸ்பட்டம் பெற்ற தளபதிகளை கிண்டல் செய்யும், டொன்கு யுக்சோட் என்னும் நாவல் ஆகிய இவையே மேற்குலக இலக்கிய முயற்சிகளுள் உரை நடையைப் புகுத்திய முன்னோடிகளாகும்.

இதுகாலவரை எழுதப்பட்ட இலக்கியங்கள் எல்லாம் விண்ணைப் பார்த்து அங்குள்ள தேவர்களையும் தேவதைகளையும் நரகம், சொர்க்கம் என்பவற்றைப் பற்றியுமே எழுதின. இப்போ கலைஞர்களின் பார்வை மண்ணை நோக்கித் திரும்பின. மண்ணில் வாழும் மக்களையும் அவர்களை எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் யதார்த்தமாகச் சொல்லத் தொடங்கின. கிரேக்க தேசத்திலிருந்து வந்த மெய்யியல் சிந்தனைகள் புதுப் பார்வைகள் பெற்றன. விஞ்ஞானம், மூட நம்பிக்கைகளால் மூடப்பட்டிருந்த கதவுகளைத் திறந்து விட்டது. பூமியே பிரபஞ்சத்தின் மையம் என்றும் அதைச் சுற்றியே சூரியன் உட்பட ஏனைய கிரகங்கள் சுற்றுவதாக நம்பியிருந்த மக்களுக்கு, 'இல்லை பூமி உட்பட ஏனைய கிரகங்கள் எல்லாம் சூரியனைச் சுற்றியே வலம் வருகின்றன' என்ற விஞ்ஞானி கலிலியோவின் கண்டுபிடிப்பு மக்களின் சமய நம்பிக்கைகளில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்திற்று. அப்பிளை ஆதாம் ஏவாள் உண்டதால் ஏற்பட்ட வீழ்ச்சியை விட பெரியதாக்கத்தை ஏற்படுத்திய இரண்டாம் வீழ்ச்சி இது. மார்க்சியம் கூட 14ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சிக் காலத்தால் ஏற்பட்ட அறிவு வாதத்தின்; (AGE OF REASON) உப விளைவே ஒழிய, அது கூறிக்கொண்டதுபோல் எந்த அடிப்படைச் சிந்தனை, செயல் மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. அப்படி அது கொண்டு வந்திருந்தால் அது மறுமலர்ச்சிக் காலத்தின் அடிப்படைச்சிந்தனை மாற்றத்தால் விளைந்த இலக்கியப் புது வடிவங்களான கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம், புதுக் கவிதை என்ற உருவாக்கங்களையே இன்னும் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க மாட்டாது. எப்போவோ, சோவியத் புரச்சியோடேயே கலை இலக்கிய வடிவங்களை, புதிய தளத்தில் புதிய வடிவங்களில் தந்திருக்க வேண்டும். ஆனால் மாறாக, ஸ்ராலின் ஆட்சிக்காலத்தில் முன்னிருந்த ரஷ்யாவின் மேன்மைக்குரிய இலக்கியங்களையே மாசுபடுத்தும் வகையில் சடனோவால் ஏற்படுத்தப்பட்ட வரட்டு இலக்கிய வகையே தூக்கிப் பிடிக்கப்பட்டனவென்றால் எத்தகைய கீழ்நிலைக்கு கலை இலக்கியம் தள்ளப்பட்டிருந்தது என்பதைக் காணலாம்.

இப்போ, முன்னர் மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்டதுபோல் மீண்டும் ஒரு அடிப்படைச் சிந்தனை மாற்றத்திற்கு உலகம் தயாராகிக் கொண்டிருப்பதாக மேற்கத்தேயப் புத்திஜீவிகளிடமிருந்தும் கீழைத்தேய ஞானிகளிடமிருந்தும் எதிர்வு கூறல்கள் விஞ்ஞான ரீதியான ஆதாரங்களோடு வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், இந்த எதிர்வு கூறல்கள் எதனை ஆதாரமாகக் கொண்டு சொல்லப்படுகின்றன என்பதே கேள்வி. இதற்கு ஆதாரமாக நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கூர்ப்பையே அவர்கள் முன்வைக்கின்றனர். இன்றைய Parapsychologist என்பவர்கள் மனிதனின் அகவளர்ச்சியையே கூர்ப்போடு சம்பந்தப்படுத்துகின்றனர். பிரஞ்சு நாட்டு உயிரியலாளரும், தத்துவஞானியுமான Teha Dechardin என்பவர் மனிதனின் வளர்ச்சியை Geosphere, Biosphere, Noosesphere, Christogensis என்று பிரிக்கிறார். இதையே கீழைத்தேய ஞானிகளும் அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், ஆனந்தமய கோசம் என்று பிரித்துள்ளனர். ஆனால் இங்கே முக்கியமான விடயம் என்னவெனில் மனதுக்கும் புற உலகுக்கும் ஏற்படும் ஊடாட்டம் (Interaction) என்கிற இயங்கியலே வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது என்னும் மார்க்சியப் பார்வையை இன்றைய மெய்யியலாளர் கேள்விக்குள்ளாக்குகின்றனர். ஏனெனில் ஆரம்பத்தில் ஜடம் மட்டும் இருந்த போது ஜடத்திற்கும் எதற்கும் நேர்ந்த ஊடாட்டம் உயிரைத் தோற்றுவித்தது. பின்னர் உயிருக்கும் எதற்கும் நேர்ந்த ஊடாட்டம் மனதைத் தோற்று வித்தது என்று அவர்கள் கேட்கின்றனர். இப்போ இத்தகைய சிந்தனையாளர்களே குறிப்பாக, Julian Huxly என்னும் உயிரியலாளர் மனம் மற்றொரு தளமாற்றத்திற்கான வாசற்படிகளில் வந்து நிற்பதாக Essays of a Humanist என்னும் நூலில் குறிப்பிடுகிறார். இவர் ஒரு நாஸ்திகர். இது பற்றி இதற்கு மேல் அவர் ஒன்றும் சொல்லாவிட்டாலும் இந்த மாற்றமானது இப்போதுள்ள சிந்தனையாளர்களின் கருத்துப்படி காலாவதியான மார்க்சிய இயங்கியலின் வழி வருவதல்ல என்றும் அது ஆரம்பத்தில் ஜடத்துக்கும் உயிருக்கும் இடை நின்று மாற்றத்தை ஏற்படுத்திற்றோ அந்தப் பேரியல்பே இப்போது மனத்தோடு ஊடியங்கி புதுத்தளத்துக்கு அதையும் இட்டுச் செல்லவிருப்பதாகவும் கூறுகின்றனர்.

எழுந்து கொண்டிருக்கும் இப்புதிய அடிப்படைச் சிந்தனை மாற்றத்தின் குணக் குறிகளாகவே இன்று வெளி வந்து கொண்டிருக்கும் கலை இலக்கியக் கோட்பாடுகளும் அவற்றின் வழி வரும் ஆக்க இலக்கிய முயற்சிகளும் நிற்கின்றன என்றால் மிகையாகாது. இன்றுள்ள பின்நவீனத்துவப் போக்கும் அதன் கூறுகளான அமைப்பியல், பின் அமைப்பியல், கட்டவிழ்ப்புவாதம், வாசகர் மைய வாதம், பெண்ணியம், தலித்தியம் ஆகியவையும் அவற்றின் அருட்டுணர்வால் வெளிப்படுத்தப்பட்ட கலை இலக்கிய வெளிப்பாடுகளும் இனி வரப்போகும் அடிப்படைச் சிந்தனை மாற்றத்திற்கான கோடி காட்டல்களாக உள்ளன எனலாம். ஆனால் அதற்காக இக்கோட்பாடுகளை முன்வைத்தவர்கள் எழுந்து கொண்டிருக்கும் புது மாற்றத்தை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்துதான் எழுதினார்கள், எழுதுகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒன்று நடைபெறுவதற்கு முன்னர் ‘ஏதோ’ ஒரு ‘வாடை வீசுது’ என்று சிலர் சொல்வார்களே அந்த மாதிரியான உள்ளுணர்வில் தான் இந்த ஆக்கங்கள் வெளிவருகின்றன எனலாம். அதேநேரத்தில் இம்மாற்றத்தை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்து எழுதியவர்கள் கீழைத்தேயத்தில் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

3. இனி இவற்றின் அடிப்படையில் அழகியல் என்று நாம் கூறுவது என்ன நிலையில் மாற்றங்கொள்ளும்?

உண்மையில் அழகியலின் குணத்தில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. அழகியலின் உச்சநிலை பரவசந்தான். இதில் ஏற்ற, இறக்கங்கள் மற்றும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது வெறும் தட்டையான உணர்வுக்கும் காரணமாய் இருப்பவை நாம் யாத்தளிக்கும் கலை இலக்கிய வார்ப்புகளே. மேலே குறிப்பிட்ட, பல்வகை பின் நவீனத்துவ கோட்பாடுகளும் அதன் வழிவரும் கலை இலக்கிய ஆக்கங்களும் தோற்றுவிக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்று பலர் கேட்பதுண்டு. இதற்கான காரணம், மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட புதுவகை இலக்கிய ஆக்கங்கள் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் அதே வகையில் தொடர்ந்து கொண்டிருப்பது வாசகர் மத்தியில் பெரும் சலிப்பை ஏற்படுத்தியிருப்பதால் அவர்களை அதிலிருந்து விடுவித்து கலை இலக்கிய நுகர்ச்சியை மீண்டும் அவர்கள் மத்தியில் உந்துதல் பெற்றெழச்செய்யவும் அதனால் அவர்கள் சிந்தனையைப்புடம்போட்டு அழகியல் ரசனையை மேலுயர்த்தவுமே ஏற்பட்டன என்று சொல்லப்படுவதில் ஓரளவு உண்மை உண்டெனினும் அதுவே முழு உண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையும் ஆகா. 1786இல் ஏற்பட்ட பிரஞ்சுப் புரட்சிக்கு முன்னர் றுசோ, வோல்ரெயர், மொன்ரெஸ்கியு ஆகியோரின் எழுத்துக்கள் எவ்வாறு அப் புரட்சியை எதிர்வு கூறினவோ, அவ்வாறே எம் முன்னே மிக மெதுவாக எழுந்துகொண்டிருக்கும் மனந்தொடர்பான கூர்ப்பு என்கிற விரிவின் அதிர்வலைகளுக்கு தம்மை அறியாது கட்டியங் கூறுபவையாகவே இவை உள்ளன.

பிரக்ஞை பூர்வமாக கூர்ப்பின் அதிர்வலைகளை தன் உள்ளுணர்வில் வாங்கிக் கொள்ளும் கலைஞன் ஒருவன் தன் அகம் நோக்கி புது வகைத் தேடலைத் தொடங்கி மனதை இன்னோர் தளத்துக்கு உயர்த்துகிறான். நான் அண்மையில் படித்த கவிதை ஒன்று பின்வருமாறு:

'புறம் போன ஆய்வுகள்
எய்தவனிடமே திரும்பி வந்து
அகம் கிழித்து
புதுக் கேள்விகள் கேட்கும் வாலி பிடுங்கிய
ராம பாணங்கள்:
'நான் யார்? மரணத்தின் பின் என்ன?'

'இனிவரும் திறனாய்வு' என்னும் எனது கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளேன்.

'மனித நாகரிகத்தின் குழந்தைமைக் காலத்தில் மனித உறவுகளில் எந்த கட்டுக்களும் விதிக்காத பொதுமை நிலவிற்று. அதனால் அக்காலங்களில் தாய் மகன்மாரோடும் தந்தை மகள் மாரோடும் சகோதரன் சகோதரியோடும் மாறி மாறி உடலுறவு வைத்துக்கொண்டனர். கற்பு என்ற ஒன்று தெரியாத காலம். காதல், அன்பு என்பவற்றின் வடிவங்களும் அதன் நிலைகளும் ஒருவகைப் பொதுமை நிலை பெற்றிருந்தன.

இனிவரும் அடிப்படைச்சிந்தனை மாற்றம், அதனால் இவற்றையெல்லாம் மேவிக் கொண்டெழும் பெரும் புரட்சியாகவே அமையும். இந்தப்புரட்சியானது எவ்வாறு மனித நாகரிகத்தின் குழந்தைமைக்காலத்தில் ஒரு பொதுமை கடைப்பிடிக்கப்பட்டதோ அவ்வாறான பொதுமை மீண்டும் நிகழ்த்தப்படும் ஒன்றாக இயங்கும். ஆயினும் இரண்டினதும் தள வித்தியாசங்கள் பாரியவை. முன்னது அப்பாவித்தனத்தினதும் அறியாமையினதும் தளத்தில் இயங்கியது என்றால் பின்னதோ மனம் தனது சிறுமையை உதறியெழும் தளத்தில் இயங்கும். அதாவது இருமையின்மையின் தரிசனம் ஒருவனுக்காகும் போது கொடுப்பது, வாங்குவது, ஒறுப்பது, ஏற்பது என்பவையெல்லாம் ஒருவன் தானே தன்னோடு விளையாடிக் கொள்ளுதலே. இந்நிலையில் தாய், தந்தை, பிள்ளைகள், காதலன், காதலி, பகைவன், நண்பர் எனபவர் மட்டுமல்ல உலகத்தின் அனைத்து உயிரும் பொருளும் அந்தப் பேரியல்பின் வார்ப்பாகவே பார்க்கப்படும் ஒரு பொதுமை விரியும். இப்பார்வையில் இருமைக்குரிய ஒவ்வோர் தோற்றமும் அவற்றிடையே ஏற்படும் உறவும் முரணும் எத்தகைய உணர்வுகளைக் கொண்டியங்கும் என்பதும் அவற்றின் சமூக அரசியல் விளைவுகளும் இன்னும் சுவையானது. இப்பார்வையின் தரிசனமே இனிவரும் கலை இலக்கியத்தின் உயிராகும். இத்தரிசனம் புனைவுக்குள் புகும் போது எடுத்துச் சொல் முறை புதிய தள நிலைகளை எட்டுவதோடு, புதிய சொற்களையும் கோரி நிற்கும். அத்தோடு இவ்வகையான கலை இலக்கிய ஆக்கங்கள் மூலம் அழகியலின் தரிசனம் என்பது முன்னைய குறுகிய எல்லை உடைத்துக்கொண்டு பரந்த நிலைக்கு, பிரபஞ்சத்தையும் தாண்டிய பேர் நிலைக்கு நம்மை அள்ளிச் செல்லும்' (வாசிப்பதும் வாசிக்கப்படுவதும் - மு.பொ) ■

---

*(46ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அந்த அமைப்பில் மாலைதீவு தொடர்ந்து அங்கம் வகிப்பதற்கு எந்தவித அவசியமும் இல்லை என்றும் கூறினார். இந்தப் பின்னணியில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நான்கு-நாடுகள் இந்தியப் பெருங்கடல் விஜயத்தின் ஒரு பகுதியாக இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கு, மார்ச் மாதம் இரண்டாம் வாரத்தில் பயணமாகிறார். , அந்த சமயத்தில், மாலைதீவு அரசியலில் ஒரு தெளிவு பிறக்குமா என்பதும் தற்போதைய கேள்வி.

நஷீத் கைது நடவடிக்கைக்குப் பின்னர், 'யாமின் எதிர்ப்பு' என்று தொடங்கிய எதிர்க்கட்சிகளின் போராட்டம் அமைதியாக முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அது போன்றே, அவர்களது போராட்டக் கோரிக்கைகளும் மாறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில் எதிர்வரும் நாட்களில், நஷீதுக்கு எதிரான வழக்கின் போக்கு வெகுவாக கவனிக்கப்படும். முதலடியாக, அவரது வழக்கறிஞர்களின் கோரிக்கையை ஏற்று, தற்போது சிறைச்சாலையில் இருக்கும் நஷீத், வீட்டுக் காவலுக்கு மாற்றப்படுவாரா, என்ற கேள்வியும் எழுகிறது.

அது போன்றே வழக்கின் அடிப்படையில் நஷீத் சிறை செல்ல நேரிட்டால், அவருக்கு, ஜனாதிபதி யாமின் பொது மன்னிப்பு வழங்குவாரா என்பதும் பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய இரு விடயங்கள். அவ்வாறு நிகழும் பட்சத்தில், எதிர்காலத்தில் அவர் தேர்தல்களில் போட்டியிட முடியாது. அந்த வகையில், தான் கைது செய்யப்பட்டால், இந்தியா தன்னை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த நஷீத், இந்தியாவின் பெங்களூர் நகரத்தில் வாழ்வது தனக்கு பிடித்த விடயம் என்று கூறியிருப்பதும் நினைவில் கொள்ளப்பட வேண்டியதே.

அதேசமயம், நஷீத், 2018ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு ஆதரவு, இல்லையென்றால், தானே ஜனநாயகக் கட்சி வேட்பாளர், என்ற வகையில் பயணிப்போரும் அந்தக் கட்சியில் உள்ளனர் என்பதும் அப்பட்டமான உண்மை. இவை அனைத்தையும், நஷீத் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பதும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திரை விமர்சனம்

*சி.சித்திரா தரன்*

மனிதால் தன் வாழ்க்கையைக் கொண்டு நடத்தும் மனிதன் விசித்திரமானவன்தான். எண்ணங்களின் கோர்வைகளால் அவன் மனம் சுழன்று கொண்டேயிருக்கிறது. தொன்மங்களாலும், புராணங்களா லும் வலுவாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது அவன் மனம். யதார்த்த உலகின் கோரப்பற்களுக்குள் சிக்குண்டு அதிலிருந்து மீள்வதற்கு மனிதன் அல்லாடுகின்றான். துயரக்கடலில் விழுகின்றான். சில வேளைகளில் யதார்த்த உலகிலிருந்து விட்டுவிடு தலையாகி ஆழ்மன ஓட்டத்தின் கரைகளிலும் சில சமயம் அவ்வோட்டத்தின் மையத்திற்கும் சென்று திரும்புகின்றான். திரும்பாமலும் போய்விடுகின்றான். கலைகள் மனித உணர்வுகளை காதல், வீரம், பக்தி, சோகம், கோபம், அவலம் இன்னபலவென்பவற்றை சொல்கின்றன. சொல்ல முயற்சிக்கின்றன. எப்பொழுதும் மனித ஆழ்மனத்தில் பயம் என்ற உணர்வு உறைந்திருக்குதோ? அப்பயத்திற்கானகாரணங்கள்பல்வகைப்பட்டவை.ஆவிபற்றிய பயம் ஒரு வகை. சிறுவயதில் கேட்ட ஆலமரத்தில் தலைகீழாக தொங்கும் வெளவால் பேய்களில் தொடங்கி இரத்தக்காட்டேரிகள் வரை பேய்களின் கதைகளைக் கேட்டும், பார்த்தும் வருகின்றோம். இக்கதைகள் ஒரு போதும் சலித்ததில்லை. உடலும் மனமும் முதிர்வடைந்தபின்பும் எங்களு க்கு இக்கதைகளின் தன்மைகளில் எப்போதும் ஒரு ஈர்ப்பு இருக்கத்தானே செய்கிறது?

இத்திரைப்படமும் இந்த ஈர்ப்பை கருக்கொண்டே நகர்கின்றது. படத்தின் நாயகன் (விதியின் நாயகன்) ஒரு வயலின் இசைக்கலைஞன். மனம் துயருறும் பொழுதுகளில் வீதியில் யாசகம் கேட்கும் சிறுமி மற்றும் கண்பார்வையற்ற மனிதர்களான இசைக்கலைஞர்களுடன் (இம் மனிதர்களை மிஸ்கினின் வேறு திரைப்படங்களிலும் நீங்கள் பார்க்கலாம்) தன்வயலினை மீட்டும் ஒருவன் அந்த இசை ஒரு மருந்து. நாயகியோ பளிச்சென்ற அழகி. மென் உணர்வுகளாலானவள். தந்தை உரத்துப் பேசினாலும் அப்படி பேசக்கூடாது என்பவள். தந்தை (பாசமான தந்தை) அவளைத் திருமணம் செய்துகொள்ளுமாறு சொல்லும் போதெல்லாம் அத்தகைய திருமணங்களை மறுப்பவள். ஆனால் தன் மனதிற்குப் பிடிக்கும் ஒருவனையே திருமணம் செய்ய முடியும் என செல்லமாக தந்தைக்குச் சொல்பவள்.

அப்படியான ஒருவனை ஒருநாள் அவள் எதிர்பாராவிதமாக வீதியில் அவளுக்கு நிகழும் விபத்தொன்றின் போது காண்கிறாள். அவன் அவளை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு தூக்கிச் செல்கிறான். அவள் கண்களில் நிரம்பிய காதலுடன் அவன் கைகளை இறுகப்பற்றியவாறு




இறந்து போய்விடுகிறாள். அவன், அந்த வயலின் இசைக் கலைஞன். மிக அருகில் இருந்து பார்த்த அவள் மரணத்தை யும், அவள் நினைவிலிருந்தும் மீள முடியாது தவிக்கின்றான். அவனுடைய நண்பன் ஒருவன் கூறுகின்றான். 'ஒரு பியரை வாங்கிக் குடித்துவிட்டு போத்தலை உடைத்து விட்டு அவள் நினைவிலிருந்து திரும்பி வா' என்று. பியரை வாங்கிவந்து மேசையில் வைத்துவிட்டு, திறப்பானையும் அருகில் வைத்துவிட்டு குளித்து முடி ந்து வந்து பார்க்கும்போது திறப்பான் காணாமல் போய்விடுகிறது. அப்படித் திறப்பான்கள் காணாமல் போக ஒரு நாள் பியர் போத்தல்கள் உடை ந்து நிலத்தில் ஓடுகிறது.

அமானுஷமான உணர்வுகளை அவன் உணர்கின்றான். அவன் குடியிருக்கும் தொடர்மாடியில் வசிக்கும் மன வளர்ச்சி குன்றிய சிறுவன், எப்போதுமே மனைவியைத் துன்புறுத் தும் கணவன் ஒருவன், இவனின் தாய் மற்றும் நண்பர்கள், சிந்தனைவயப்பட்டு கதை சொல்லியா கத்திரியும் ஏமாற்றுப் பேர்வழியான இளைஞன், பேய் ஓட்டவரும் ஆவி அமலா, அவளின் உதவியாளன் மேலும் இறந்து போனவளின் பாசத்தந்தை ஆகியோருக்கிடையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழும் பிசாசு பற்றிய தொடர்புகளே நீளும் திரைப்படத்தின் கதை.

தளர்வடையாத திரைக்கதையும் நெஞ்சை நெருக்குருகச் செய்கின்ற ஒற்றை வயலின் இசையும் சிறந்த ஒளிப்பதிவும் கமராவின் நகர்வும் பார்வையாளர்களை மெல்ல மெல்ல அச்ச உணர்வுக்குள் மூழ்கச் செய்துவிடுகிறது.

**(59ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*(51ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

4. தொலைக்காட்சி சேவையொன்றில் நடந்த கலந்துரையாடலில் அவருடைய நியாயப்படுத்தல்கள் தவிடுபொடியாகின்றன. தன்னைத் தப்புவிப்பதற்காக இராணுவத் தலைமையகத்தின் முடிவின் அடிப்படையிலேயே மத்திய தகவல் ஆணையம் தனது முடிவை எடுத்ததாகத் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்.

## போர்கள் வரைபடங்கட்காக நிகழ்வதில்லை

போர்கள் வரைபடங்கட்காக நிகழ்வதில்லை. சீன ஏன் எப்போது போர் தொடுக்க முடிவெடுத்ததென எந்த அவதானியும் அறிவார். 1962 ஜூலையில் மாவோசேதுங் இந்தியாவின் ‘கொறித்துத் தின்னற் கொள்கையை’ எதிர்கொள்வதற்கான வழிகாட்டற் கொள்கையைச்’ சீன மக்கள் விடுதலைப் படைக்கு அறிவுறுத்தினார். சுருங்கக்கூறின் அவையாவன;

ஒருபோதும் விட்டுக் கொடாதீர்கள். ஆனாற் குருதி சிந்துதலைத் தவிர்க்க இயன்றதைச் செய்யுங்கள். எல்லையை வசப்படுத்தச் சீரற்ற ஒன்றோடொன்று கட்டுண்ணுமாறான வியூகம் அமையுங்கள். நீண்டகால ஆயுத உடனிருப்புக்கு ஆயத்தமாயிருங்கள்.

மக்கள் படையின் பொதுப்படைத் திணைக்களத் தலைமையகம் போரிடல் விதிகளைச் சீனத் துருப்புகட்குக் கண்டிப்பாகத் தெரிவித்ததுடன், வழிகாட்டும் நியதிகளை மேலும் விரிவாக விளக்கியது. இந்தியப்படைகள் சுடத் தொடங்காவிடின் சீன எல்லைக் காவலர்கள் சுடத் தொடங்கலாகாது. இந்தியப் படைகள் ஒரு சீனக் காவல் நிலையத்தை நோக்கி தமது திசையில் முன்னேறினால், சீனப் படைகள் இந்தியாவின் பிடிப்பிடம் ஒன்றை நோக்கி இன்னொரு திசையில் முன்னேற வேண்டும். இந்தியப் படைகள் சீன எல்லைப்படைகளை முற்றுகையிட்டால் சீன எல்லைப் படை இந்தியப் படையை முற்றுகையிட வேண்டும். சீனப்படைகளின் பின்வாங்கற் பாதையை இந்தியப் படைகள் மறித்தால் இந்தியப் படைகளின் பின்வாங்கற்பாதையைச் சீனப் படைகள் மறிக்க வேண்டும். சீனப்படைகள் இந்தியப்படைகளின் நகர்வுக்கு இடம்விட்டு எட்ட நிற்க வேண்டும். இந்தியப் படைகள் பின் வாங்க இடம்விடும் போது பின்வாங்கவேண்டும்.

இது, தோலாவில் இந்தியா 1962 ஜூன் 4 அன்று இராணுவ் நிலையத்தை நிறுவியதை உடனடியாக அடுத்து நடந்தது. நிலைமைகள் திருந்தவில்லை. இராஜதந்திர ரீதியாக ஒரு முடக்கம் இருந்தது. சீனா செமொய் (தாய்வானை அண்டி அமைந்த சீனக் கடற்படைப் பிரதேசம்) பற்றி அமெரிக்காவுடன் ஒரு சமரசத்துக்கு வந்த தன் மூலம் கிழக்கே திபெத்துக்கு அனுப்புமாறு 500,000 படையினரை விடுவித்தது. ஒகஸ்ட் 6 ஆம் திகதி மாவோ பெய்டாய் ஹெயிலிருந்து பெய்ஜிங் மீண்டார். ‘சீன -இந்திய எல்லைப் போரின் உண்மைக் கதை’ என்ற ஷு யான் எழுதிய நூலின்படி ஒக்டோபர் 6ஆம் திகதி திருப்பித் தாக்குமாறு சீனப் படைகட்கு ஆணை சென்றது. ஒக்டோபர் 16 ஆம் திகதி சீனா இந்தியப் படைகளை நிர்மூலமாக்க முடிவெடுத்தது. அடுத்த நாள் அதற்கான ஆணை சென்றது. ஒக்டோபர் 14 ஆம் திகதி குருஷ்செவ் அத் தாக்குதலுக்கான பச்சை விளக்கைச் சீனத் தூதருக்குக் காட்டிவிட்டார்.

எல்லையின் கிழக்குப் பிரிவிலும் மேற்குப் பிரிவிலும் சீனா இந்தியாவின் முன்னேறக் கொள்கையை எதிர் நோக்கியது. அது போர் மூலம் முரண்பாட்டைத் தீர்க்கும் நேருவின் கொள்கையைப் புலப்படுத்தியது. இவ்விடயத்தில் தேசம் அவரை ஆதரித்தது. அவ்வாதரவில் எதிர்க்கட்சியே மிக ஆக்ரோஷமாயிருந்தது.

ஹென்டர்ஸன் ப்ரூக்ஸ் அறிக்கையின் நிலையான பாடங்கள் போர் அம்சத்தை விட இராஜதந்திர அம்சத்தைப் பற்றியன. ஏனெனில் அதே மன நிலை இன்னமும் இந்திய அயற் கொள்கையை ஆளுகிறது. 23.2.14 அன்று இத்தாலிய கடற்படையினர் தொடர்பான விடயத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி சமரசத்துக்கே இடமில்லை என்று சொன்னமை அதை அழகாகத் தொடுத்துரைக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# சமூகத்தில் பெண்ணுக்கான இடம்; தேடலும் புரிதலும்



வசந்தி தயாபரன்

சர்வதேச மகளிர் தினச் செயற்பாடுகள், ஒரு நூற்றாண்டு காலத்தை நிறைவு செய்து முன் செல்கின்றன. இன்று 'பெண்' தொடர்பில் தலைமுறைகளூடாக கடத்தப்படுகின்ற பாரம்பரிய அடக்குமுறைச் சிந்தனைகளை வேரோடு பிடுங்கி எறிவதற்கான வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்படுவதற்கான சூழமைவு உருவாகி வருகின்றது. குறிப்பாக சமூகம், குடும்பம் எனும் வெளிகளில் பெண்கள் எதிர்நோக்கும் பல சவால்கள் உலக பொதுமையானவையாகவும் உள்ளன. இவை அமைப்பு ரீதியான பொதுவான செயற்பாடுகள் மூலம் நிகழ்த்தப்படுபவை. எனினும் பண்பாடு, மொழி, மதம், அரசியல், பொருளாதாரம் போன்ற கூறுகளின் தனித்துவமும் தாக்கமும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இதனால் இவற்றிற்கான அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் கூட வேறுபாடுகள் கொண்டவையாகவே அமையும்.

பெண் நிலைச் செயற்பாடுகள் அடிமட்ட வாழ்வின் சகதிக்குள் புதைந்து நிற்கும் விளிம்பு நிலை பெண்களைச் சென்றடைய வேண்டும். நாள்தோறும் புதிதுபுதிதாக முளைத்தெழும் சமூக நியமங்களும் அடக்குமுறைகளும் பெண்களைக் குறிவைக்கின்றன. கீழைத்தேயத்தின் பண்பாட்டு நிலை சார்ந்த வழிநடத்தல்கள் இன்று தனது உண்மையான முகத்தைத் தொலைத்து நிற்கின்றது. இதனால் மரபு வழி சிந்தனைகள் பெண்மீது மிக மோசமான கருத்தியல் வன்முறைத் தாக்குதல்களையும் இளக்காரமான பார்வைகளையும் முன்வைக்கின்றன.

சமீபகாலமாக பொதுவெளியில் பெண் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளின் அதிகரிப்பு உடல், உள ரீதியில் வேகப்பட்டு வருகின்றன. இதற்கான ஊற்றுகள் எங்குள்ளன? இதற்கான சிந்தனைகள் எதனூடாக கடத்தப்படுகின்றன? எனும் கேள்விகளும் இயல்பாக எழுகின்றது. இதைவிட முன்னர் எப்போதுமில்லாத அளவிற்கு தற்போது கருத்துப் பரப்பலுக்கான தொடர்பு சாதனங்களின் பெருக்கம் உச்சபட்சமாக செல்வாக்குச் செலுத்துகின்றது. பெண்குறித்த இழிவானதும் எதிர்மறையானதுமான கருத்துருவாக்கங்களைப் பரப்புவதில் ஊடகங்களின் பங்களிப்பு பெரிதாகவும் உள்ளது. இதன் மூலம் வக்கிரமான உளப்பிறழ்வு நோய்வாய்ப்பட்ட சமூகத்தினை படிப்படியாகக் கட்டமைக்கின்றன.

பெண்பற்றிய கொச்சையான சொல்லாடல்கள், பெண்ணை ஆபாசமாகவும் இழிவாகவும் அர்த்தப்படுத்தும் கதைகள், பெண்ணின் ஆளுமையை எள்ளி நகையாடும் காட்சிகள் என இவை பலவாறாக பணிபுரிகின்றன. இங்கு கைதேர்ந்த வினைஞர்களின் கற்பனையில் பெண்கள் குறித்த ஆணின் மனப்படங்கள் தயாராகின்றன. இன்றைய சமூகம் இத்தகைய வக்கிரமான சிந்தனைப் போக்கிற்கு பழகிவிட்டது. இதனால் ஆண், பெண் இருபாலாரது பார்வையும் சிந்தனைப் பிறழ்வுகளுடன் சுரணையற்று இறுகி உறைந்து வருகின்றது.

இன்று சமூகத்தில் பெண்ணிற்கான இடம் எது என குறித்த தெளிவின்மை நிறையவே உண்டு. சிந்தனைத் தெளிவு, மனப்பான்மை மாற்றம் இவற்றினூடாகத் தான் பெண்ணிற்கான அடையாளம் பற்றிய தேடுகை சாத்தியப்படும். இதுபற்றிய தேடலும் புரிதலும் நமக்கு அவசியமாகின்றது. தற்போது நாம் இவை நோக்கிய பயணத்தில் மனப்பாங்கில் மாற்றம் இவற்றின் ஊடாகத்தான் இவற்றைத் தெளிவுபடுத்தலாம். மேலும் இது நோக்கிய பயணத்தில் எதிர்ப்படும் பல்வேறு முட்டுக்கட்டைகளை தூக்கியெறியத்தக்க வகையில் நமக்கு விசேட செயல்திட்டம் அவசியமாகின்றது.

மனித குலம் வாழ்வில் எண்ணற்ற இடர்களை போராட்டம் மூலமே வென்று சாதித்துள்ளது. மானிடம் என்ற ஒரே அடையாளத்தின் கீழ் ஆண்-பெண் இருபாலாரும் கைகோர்த்து நிற்பதே மாண்பு. இன்றுவரை நமது நாடுகளில் பொது, சமூக நிறுவனங்களில் கூட பெண்ணின் தலைமைத்துவம் என்பது தயக்கத்திற்குரியதாகவே இருக்கிறது. இவை தொடர்பில் இன்னும் பல்வேறு உதாரணங்களை நாம் முன்வைக்க முடியும்.

நமக்கு விளிம்பு நிலை பெண்கள் பற்றிய விசேட அக்கறையும் இந்தப் பெண்களை சமூகத்துடன் இணைப்பதற்கான திட்டங்களும் நடைமுறைப்படுத்தலும் பொருத்தமாக அமைய வேண்டும். 'பெண் விடுதலை' என்பதை சமூகம் பல்வேறு விதங்களில் அர்த்தப்படுத்திக் கொள்ளும். எவ்வாறாயினும் பெண்ணுக்கு வலுவூட்டுதலின் மூலம் மானிடத்திற்கு வலுவூட்டுவதற்கான அடித்தளத்தை உறுதிப்படுத்த முடியும். இந்தத் தளம் ஆழமும் விரிவுமிக்கதாக வளர்க்கப்பட வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான **சமகாலம்** இப்பொழுது உங்கள்

Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on play.google.com

Available on www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள்

அன்றைய தினமே!

மாலை EXPRESS

வார நாட்களில் தினமும் மாலையில்

கைக்கடக்கமான நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185, Grandpass Road, Colombo -14, Sri Lanka.